www.padippakam.com

# சுயம் நிர்ணயம் உரிமை

பி.ஏ.காதர்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சுயம் நிர்ணயம் உரிமை

## தேசியங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்.

பி.ஏ.காதர்

அப்பால் தமிழ்
ஏப்ரல் 2003

படிப்பகம்

www.padippakam.com

நூலின் தலைப்பு: *சுயம் நிர்ணயம் உரிமை*
ஆசிரியர்: பி.ஏ.காதர்
பதிப்பு: முதற் பதிப்பு, ஏப்ரல் 2003
வெளியீட்டாளர்: அப்பால் தமிழ்
நூல் அமைப்பு: என்.செல்வராஜா
கணனி அச்சு: சிவரஞ்சினி இரவிந்திரன்
அட்டை வடிவமைப்பு: க.முகுந்தன், வி.சுரேன்
அச்சகம்: செட்லைன் பிரின்டர்ஸ், இலண்டன்
பக்கங்கள்: (10), 68

பதிப்புரிமை: © 2003 பாவா அப்துல் காதர்

**அப்பால் தமிழ் வெளியீடு 1**

Title: ***Suyam Nirnayam Urimai***
***(Right - Self - Determination)***
Author: B.A.Kader
Edition: 1st Edition, April 2003
Publishers: Appal -Tamil
Book layout: N.Selvarajah
Type setting: Sivaranjini Ravindran
Cover design: K.Mukunthan & V.Suren
Printers: Setline Printers, London
Pages: (10), 68

**Text copyright: © 2003 by Bawa Abdul Kader**

**Appaal -Tamil Publication 1**

படிப்பகம்

www.padippakam.com

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின்
சுயநிர்ணய உரிமையை ஆதரித்து
தென்னிலங்கையின் முதலாவது குரல்
இலங்கை ஆசிரியர் சங்கத்தினுள்
ஒலித்தபோது
அதற்குத் துணிச்சலாய் ஆதரவாய்
தோள் கொடுத்த
அதன் அப்போதைய தலைவரும்
சர்வதேசியவாதியுமான
காலஞ் சென்ற
தோழர் எச்.என்.பெர்னாண்டோ
அவர்களுக்கு இந்நூல்..

படிப்பகம்

www.padippakam.com

# வெளியீட்டுரை

இந்நூல் எழுதப்பட்டு வெளிவரும் இன்றைய காலகட்டம் மிக முக்கியமானது. இலங்கைத் தீவில் அமைதியைக் கொணரும் முயற்சியில் சர்வதேச சமூகம் அக்கறை காட்டிவரும் இவ் வேளையில் இந்தச் சிறுநூலை உங்கள் முன் வைக்கின்றோம். இலங்கைத் தீவின் அமைதியிலும் அரசியல் தீர்விலும் ஆர்வம் கொண்ட அனைவருக்கும் இந்நூல் பயனுடையாதாகவே இருக்குமென்பது எம் நம்பிக்கை.

இச்சிறு நூல் சுய நிர்ணய உரிமை என்பதனை வரலாற்று கண்ணோட்டத்திலும் சமூகவியல் கண்ணோட்டத்திலும் விளக்கு கின்றது. நானூறு பக்கங்களில் விரித்து எழுதக்கூடியதான இந்த கருப்பொருளை நாற்பது பக்கங்களில் கெட்டியாக்கி சுவைபட தந்திருக்கின்றார் ஆசிரியர் பி.ஏ.காதர். ஆசிரியரின் நீண்ட அரசியல் அனுபவமும் படிப்பாற்றலும் இந்தச் சிறு நூல் முழுவதும் இழையோடியுள்ளதை நீங்கள் காணலாம். இந்நூலை எல்லாத் தரப்பாரும் படிப்பதற்கு துணையாக கொடுக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்புகளைத் தயாரிப்பதிலேயே ஆசிரியர் கடுமையாக உழைத்தார். இதனை நீங்கள் படிக்கும் போது புரிந்து கொள்வீர்கள். அரசியல், வரலாறு என்பவற்றின் தொடக்கநிலை ஆர்வலருக்கு அவை மிகப் பயனுள்ள குறிப்புகள் என்பதில் மாற்றுக் கருத்திருக்காது என்றே நம்புகின்றோம். மனிதர்களினதும் சமூகத்தினதும் ஆதார உரிமைபற்றி பேசும் இந்நூல் எழுதப்பட்டதான பின்னணியை ஆசிரியர் தன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சுயநிர்ணய உரிமைபற்றியதான முதல் சொற்பதம் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் ஆவணங்களில் காணக்கிடைப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். 1947ம் ஆண்டு இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்றிய தீர்மானத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் வரலாறு, பாரம்பரியம், தொடர்ச்சியான வாழ்நிலம், தனித்துவமான மொழி என்பவற்றைக் கொண்ட ஒரு தனித்துவமான தேசிய இனமென்றும் அவர்கள் விரும்பினால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமை அவர்களிற்கு உண்டென்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஆனால் இந்த தீர்மானம் பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்த வேளை மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது) இதனை ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு தனது

படிப்பகம்

www.padippakam.com

இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள் என்ற நூலில் எடுத்தாண்டுள்ளார்.

இலங்கைத் தீவின் நெருக்கடிகள் முற்றி போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என அன்றைய சிறிலங்காவின் ஆட்சித் தலைமையை ஏற்றிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா பிரகடனம் செய்ததன் பின்னால் இலங்கை ஆசிரியர் சங்கமே இந்த சுயநிர்ணய உரிமைபற்றிய தீர்மானத்தை துணிச்சலுடன் முன்மொழிந்திருந்தது. இதேவேளையில் எழுபதுகளின் பின்னால் முகிழ்ந்த ஈழப்போராட்ட அமைப்புகள் சுயநிர்ணய உரிமைபற்றி உச்சரித்திருந்த போதிலும் அதுபற்றி தீர்மானம் எதுவும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் 1985ம் ஆண்டில் இடம்பெற்ற திம்பு பேச்சுவார்த்தையில் இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் அரசியல் விருப்பாக ஈழப்போராட்ட முன்னெடுப்பாளர்களால் முன்வைக்கப்பட்ட (தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் உள்ளடங்கிய ஈழத்தேசிய விடுதலை முன்னணியுடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் சேர்ந்து ஒருமனதாக முன்வைத்த திட்டம்) நான்கம்சத் திட்டத் தீர்மானத்தில் சுயநிர்ணய உரிமையும் இணைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் 2002ம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் முன்மொழியப்பட்டு நோர்வேயில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியிலேயே இந்நூல் சுயநிர்ணய உரிமைபற்றி பேச முற்படுகின்றது. இந்த நூல் படிக்கப்படுவதுடன் கருத்தாடல் களை தோற்றுவிக்க வேண்டும் என்பதே எம்முடையதும் ஆசிரியரின தும் கூட்டு விருப்பமாகும். கருத்தாடல்களை தோற்றுவிப்பதற்கான பலகூறுகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளதாகவே நாம் கருது கின்றோம். இக்கருத்தாடல்களின் மூலம் இப்பொருள் பற்றிய விரிவான நூலொன்று எழுதவேண்டிய அவசியம் தோன்றுமானால் அதுவே இந்நூலின் வெற்றியாகும்.

இந்நூலை வெளியிட்டுள்ள அப்பால் தமிழ் பற்றியும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம். இது ஒரு மட்டுப்படுத்தப்பட்டதான பொது நோக்குகள் கொண்ட கூட்டுறவு நிறுவனம். ஊடகம் (இணையத்தளம் அப்பால்-தமிழ் ) பதிப்பகம் (நூல்வெளியீடு அப்பால் தமிழ் பதிப்பகம்) என்பன இதன்

படிப்பகம்

www.padippakam.com

தற்போதைய செயல்திட்டங்களாகும். இணையத் தளத்தின் கட்டமைப்பு வேலைகள் முடிவடைந்ததும் பதிப்பகத் துறையில் கவனம் செலுத்தலாம் என எண்ணியிருந்தோம். தளக்கட்டமைப்பு வேலைகள் முடிவடையும் முன்னரே நாம் பதிப்புத் துறையில் கால்பதிக்க வேண்டியவர்களாகிவிட்டோம். பதிப்புத் துறையிலும் நிர்ணயமான போக்குகளை கடைப்பிடிக்க விரும்புகின்றோம். அவ்வகையில் முதல் நடவடிக்கையாக இந்த நூலின் ஆசிரியருடன் வரையப்பட்ட உடன்பாட்டு விதிகளின் கீழ் கையெழுத்திட்டுள்ளோம். இதில் நூலாசிரியருக்கான உரிமையும் பதிப்பகத்திற்கான உரிமை யும் வரையறுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் நாம் நூல்களை வெளியிடவும் பதிப்பிக்கவும் எண்ணியுள்ளோம். இந்த முயற்சிகளில் சமூக அக்கறை கொண்ட பல நண்பர்களும் சமூக ஆர்வலர்களும் இணைந்து பணியாற்று கின்றனர். தற்போது உங்கள் கையில் இருப்பது சிறுநூலானாலும் இதற்குப் பின்னால் பலரது கடுமையான உழைப்பு இருக்கின்றது. இதில் தீபன், இரவீந்திரன், சிவரஞ்சினி, முகுந்தன், நூலகர் செல்வராஜா, நல்லையா, வரன், கபிலன், நவநீதன், தர்மகுலசிங்கம், சுமத்திரி, நாகதிலகன், வின்சார்ள்ஸ், தேசம் ஜெயபாலன் போன்ற நண்பர்கள் மிகுந்த ஈடுபாட்டுடனும் உற்சாகத்துடனும் உழைத்தனர். அப்பால் தமிழின் முதல் வெளியீடாக கொணர்வதற்கு பொருத்தமான இந்நூலை விருப்புடன் எழுதி எமக்களித்ததுடன் தொடர்ந்து எழுதவும் விருப்பம் கொண்டுள்ள பி.ஏ.காதர் அவர்களுக்கு எமது தோழமை சார்ந்த வாழ்த்துக்கள்.

**கி.பி.அரவிந்தன்**

நெறியாளர் - அப்பால் தமிழ்
பிரான்ஸ் 01-03-2003
kipian@hotmail.com

படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

சுயநிர்ணய உரிமை தொடர்பான விவாதங்களில் 1976 முதல் 1980 வரை சுமார் ஐந்துவருட காலம் இடையறாது ஈடுபட்ட பின்னர் நீண்ட காலம் அதைப் பற்றி பேசுவதற்கோ எழுதுவதற்கோ எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அப்போது நான் மேற்கொண்ட ஆய்வுகளும் தொகுத்த வாசிப்புக் குறிப்புகளும் தூசு தட்டிப்போயின.

திடீரென மீண்டும் இந்தத் தலைப்பு சூடேறிய விவாதத் தொனிப்பொருளாக மாறியுள்ளது. விடுதலைப் புலிகள் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசத் தொடங்கியவுடன் சகல வெகுஜன தொடர்பூடகங்களும் சுயநிர்ணய உரிமை பற்றி மீண்டும் பேச ஆரம்பித்திருக்கின்றன.

கடந்த 2002 டிசம்பர் நடுப்பகுதியில் TBC வானொலி நடத்திய ஒரு கலந்துரையாடலில் நானும் ஒருவனாகக் கலந்துகொண்டு நீண்ட காலத்திற்குப் பின்னர் சுயநிர்ணய உரிமை பற்றிய எனது கருத்தை முன் வைத்தேன். அதன் பின்னர் பல நண்பர்கள் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினார்கள். நான் முன்வைத்த கருத்துகளை விரிவுபடுத்தி ஒரு நூல் வடிவில் வெளியிடுவது இக்காலகட்டத்தில் மிகப் பயனுள்ளதாக அமையும் எனத் தெரிவித்தனர். ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது- அதாவது அதனை யார் வெளியிடுவது- என்ற பிரச்சினை தீராமலே இருந்தது.

திடீரென பிரான்ஸில் இருந்து தோழர் கி.பி.அரவிந்தன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். 1984-ல் சென்னையில் வைத்து "இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்" என்ற நூலை நான் எழுதிக் கொண்டிருந்தபோது அறிமுகமான அந்த தோழரின் குரலை பதினெட்டு வருடங்கள் கழிந்த பின்னரும் இனம் காண்பதில் அதிகம் சிரமம் இருக்கவில்லை. மீண்டும் எமது நட்பு உயிர்ப்பெற்றது. அவர் எனது ஆய்வொன்றைத் தான் வெளிக் கொணர விரும்புவதாக ஆர்வத்தோடு கூறிய போது சுயநிர்ணய உரிமை தொடர்பான ஒரு சிறு நூலை வெளியிட வேண்டியதன் தேவை எழுந்துள்ளதைப் பற்றி அவரிடம் கலந்துரையாடினேன். ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் அவர் உடனே உற்சாகமான ஒப்புதலை வழங்கினார். எதிர்வரும் பொங்கலுக்கு முன்னர் அந் நூலை வெளிக்கொண்டு வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடிப்பதாகக் கூறி என்னை உடனடியாக எழுதுமாறு தூண்டினார். அதற்கு ஒப்புக்கொண்ட நான் விரைவாக தமிழில் எழுதுவதில் எனக்குள்ள பிரச்சினையை அவருக்கு விளக்கினேன். அவர் நான் சொல்வதை கைப்பிரதியெடுக்கவும் அதனை கணனி

படிப்பகம்

www.padippakam.com

அச்சு செய்வதற்கும் ஏற்பாடு செய்து தருவதாக உவகையோடு ஒப்புக்கொண்டார். இரண்டு நாள் கழித்து மீண்டும் அவர் என்னோடு தொலைபேசியில் பேசினார். தீபன் என்ற ஒரு தோழரை எழுத்துப் பிரதியாக்கம் செய்வதற்கும் கணணிப் பிரதி செய்து தருவதற்கு திருமதி. சிவரஞ்சினி இரவிந்திரன் அவர்களையும் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அவர்கள் என்னோடு தொடர்பு கொள்வார்கள் எனவும் கூறினார். மறுநாள் தோழர் தீபன் என்னோடு தொடர்பு கொண்டார். இருவரும் 2002 டிசம்பர் 29ந் திகதி சந்தித்தோம். நான் சொல்ல அவர் எழுத ஆரம்பித்தார். 2003 முதலாம் திகதி இந் நூல் எழுதி முடிக்கப்பட்டது. பின்னர் அது திருமதி. சிவரஞ்சினி இரவிந்திரன் அவர்களுடைய கரங்களுக்குச் சென்றது. மூவரும் ஒன்றாக சங்கமித்து உணர்வோடு செயல்பட்ட காரணத்தால் பொங்கல் தினத்திற்கு முன்னமே இப்பணி பூர்த்தியாகிவிட்டது.

இந்த குறிப்போடு எனது பணிபூர்த்தியாகிவிட்டதாக நான் நினைத்தேன். ஆனால் இரண்டுநாள் கழித்து தோழர் கி.பி. மீண்டும் தொலைபேசி வழியாக வந்தார். "ஒரு பெரிய நூலில் சொல்லக் கூடிய பல்வேறு விடயங்களை இவ்வளவு சுருக்கமாக 'கெப்ஸ்யூல்' வடிவில் இவ்வளவு சிறப்பாக செய்து தருவீர்கள் என நான் எதிர்பார்க்கவில்லை." என்ற பீடிகையுடன் ஆரம்பித்து "ஆனால் புத்திஜீவிகள் அணியைத்தவிர ஏனைய மட்டங்களால் இதை வாசித்து புரிந்து கொள்ள முடியுமா என்ற பிரச்சினை உள்ளது. அதற்காக அதன் தரத்தை குறைக்கவும் கூடாது. எனவே விளக்கக்குறிப்பு கொடுப்பது அவசியம். அதையும் சிரமம் பாராமல் நீங்கள்தான் செய்ய வேண்டும்." என்ற குண்டை தூக்கிப் போட்டார். அத்துடன் 21 தலைப்புகளை விளக்கக்குறிப்புகளுக்காக தேர்ந்தெடுத்து அனுப்பினார்.

வேறுவழியின்றி அச்சுகமான சுமையை ஏற்றுக் கொண்டேன். அதனைச் செய்து முடிக்க மீண்டும் பரிவாரங்கள் தேவைப்பட்டன. கூப்பிட்ட போதெல்லாம் தீபன் மீண்டும் மீண்டும் வந்தார். ஆர்வம் குன்றாமல் நான் சொல்வதை ரசித்து சுவைத்து - சிலசமயங்களில் பயனுள்ள ஆலோசனைகளைத் தந்து எழுதினார். மறுபடியும் அது திருமதி. சிவரஞ்சினி இரவிந்திரன் அவர்களுடைய கரங்களுக்குச் சென்றது. இத்தடவை அவரது மகன் சுகவீனமாக இருந்தார். இருப்பினும் இந்நூலின் முக்கியத்துவம் கருதி தாமதிக்காமல் கணணிப் பிரதி செய்துதந்தார்.

இந்நூல் வெளிவருவதற்குப் பிரதான காரணமாக இருந்த தோழர் அரவிந்தனுக்கும் அதற்கு வடிவம் கொடுத்த தீபனுக்கும் சிவரஞ்சினி இரவிந்திரனுக்கும் நன்றி என வார்த்தை யில் சொல்வதானால் அது அவர்களது உணர்வுடன் கூடிய பங்களிப்பை அந்நியப்படுத்தியதாக அமையும். ஆகவே நிறைந்த மனதோடு அவர்களுக்கு எனது அன்பை காணிக்கையாக்குகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

இதன் மூலப்பிரதியை மாறுபட்ட கருத்துடைய நான்குபேரிடம் கொடுத்து அபிப்பிராயம் அறிந்தேன். அவர்களில் சிலர் தமது பெயர் குறிப்பிடப்படுவதை விரும்பவில்லை. எனினும் அவர்கள் வழங்கிய பயனுள்ள திருத்தங்கள் சேர்க்கப்பட்டதால் இந்நூல் வளம் பெற்றுள்ளது.

இந்நினைவு என்றென்றும் என் நெஞ்சை விட்டகலாது. இந்நூலின் மூலப்பிரதியின் ஒவ்வொரு வசனத்தையும் ஒவ்வொரு சொல்லையும் மிகக்கவனமாக வாசித்து எனது அனுமதியுடன் நடையழகு திருத்தங்கள் பல செய்து செப்பனிட்ட தோழர் கி.பி.யின் கடின உழைப்புக்கும் அந்த நாகரிகமான பண்புக்கும் தலைவணங்குகிறேன்.

இந்நூல் அச்சு வடிவம் பெற்றவேளை எழுத்துப் பிழை திருத்தம் செய்துதவிய தோழர் ராஜேஷ்குமார் அவர்களுக்கு என்னிதயம் கனிந்த அன்பு.

பி.ஏ.காதர்
இலண்டன்
01-03-2003

தொர்புகளுக்கு: bakader6@hotmail.com

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

நுழைவாயிலில் ஒரு நிமிடம் 01

தேசங்கள், தேசியங்கள்: தோற்றமும் வளர்ச்சியும் 03

தேசியவாதம், தேசியங்களின் சுயநிர்ணய உரிமை: தோற்றமும் மாற்றமும் 06

தேசியங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான சர்ச்சைகள் 19

விடுதலைப்புலிகளின் உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்பான நிலைப்பாடு: ஒரு பார்வை 30

விளக்கக் குறிப்புகள் 36

பின்னிணைப்பு:
The Resolution Of The London International Congress, 1896 60

United Nations:Declaration on Granting Independence to Colonial Countries and Peoples, 1960 61

உசாத்துணை நூல்கள் 63

நூலாசிரியர் பற்றி... 68

படிப்பகம்

www.padippakam.com

# சுயம் நிர்ணயம் உரிமை

தேசியங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய
ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

நாடுகள் கூட தத்தம் தேசியநலனை முன்வைத்தே
சுயநிர்ணய உரிமைக் கொள்கையை
சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்தி வருகின்றன.

# I

## நுழைவாயிலில் ஒரு நிமிடம்

சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையின் தொனிப் பொருளைப் போல் வேறு எந்த விடயமும் அந்தளவு உணர்ச்சி மிகுந்ததாகவும் சர்ச்சை மிகுந்ததாகவும் இதுவரை இருந்ததில்லை. மறுபுறத்தில் இந்தளவுக்கு நீண்ட கால விவாதத்திற்கு உட்படுத்தப் பட்ட மற்றொரு கருத்துருவாக்கத்தையும், வரலாற்றில் காண முடியாது.

ஒரு காலத்தில் சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுத்த பலர் பிற்காலத்தில் அந்தக் கொள்கைக்குத் துரோகம் செய்திருக்கிறார்கள். இதற்கு நல்லதோர் உதாரணம் கார்ல் கவுட்ஸ்கி(1). இவர்தான் முதன்முதலாக சர்வதேச சமூக ஜனநாயக ஒன்றியத்தில்(2) தேசியங்களின் சுயநிர்ணய உரிமையைத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கு முயன்று வெற்றி பெற்றவர். 1886-ல் இலண்டனில் கூடிய இந்த ஒன்றியத்தின் சர்வதேச காங்கிரஸில் இதற்கான தீர்மானத்தை இவரே முன் மொழிந்தார். ஆயினும் 1914-ல் முதலாம் உலக மகா யுத்தம் வெடித்த பொழுது அவர் தனது சொந்தநாடான ஜேர்மனி, ஏனைய நாடுகளை ஆக்கிரமித்து பங்குபோடுவதற்கு மேற்கொண்ட யுத்தத்தை ஆதரிக்கத் தொடங்கினார். இதனால் இவருக்கும் லெனினுக்கும்(3) இடையே கடுமையான கருத்து மோதல்கள் இடம்பெற்றன (லெனின்1914).



படிப்பகம்

www.padippakam.com



இதற்கு மற்றுமொரு உதாரணம், 1913-ல் - மார்க்ஸியமும் தேசிய பிரச்சினையும் (J.V.Stalin,1913) - என்ற வரலாற்றுப் புகழ்மிக்க கட்டுரையை எழுதி, தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை விளக்கமாக முன்வைத்த ஸ்டாலின் (4) பிற்காலத்தில் அக்கொள்கைக்கு முரணாகப் பல சமயங்களில் செயல் பட்டிருக்கிறார். சோவியத் ருசிய தலைவராக இருந்த வி.ஐ.லெனின், அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோவ் வில்சன் ஆகிய இருவரைத் தவிர வரலாற்றில் சுயநிர்ணய உரிமை விடயத்தில் கொள்கை மாறாமல் இருந்தவர்களைக் காண்பது அரிது.

நாடுகள் கூட தத்தம் தேசியநலனை முன்வைத்தே சுயநிர்ணய உரிமைக் கொள்கையை சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்திவருகின்றன. முதலாம் உலக மகா யுத்தத்தின் போது சுயநிர்ணய உரிமையை முன் வைப்பதில் முனைப்பாக நின்ற முதலாவது நாடு என்ற பெருமை அமெரிக்காவுக்கு உண்டு. அமெரிக்க ஜனாதிபதி வில்சன்(5) இவ்விடயத்தில் ஆற்றிய வரலாற்றுப் பங்களிப்பு இன்றும் நினைவுகூரப்படுகிறது. ஆனால் இன்றைய அமெரிக்கா தனக்குச் சாதகமான சமயங்களில் மாத்திரமே இவ்வுரிமையை அங்கீகரிக்கிறது. பல தேசியங்கள் வாழும் ஒரு நாட்டில் எந்த ஒரு தேசியமும் பிரிந்து செல்லக்கூடாது என்ற கொள்கையை அது இப்போது வலியுறுத்தி வருகிறது. அதே சமயம் சீனாவுக்கெதிராக தைவானுக்கு(6) ஆதரவு நல்கி வருகிறது. கொலனித்துவ அடக்கு முறைக்கு உள்ளாகியிருக்கும் நாடுகளுக்கு மாத்திரமே சுயநிர்ணய உரிமை உண்டு எனவும் ஒரு நாட்டுக்குள் வாழும் தேசியங்களுக்கு அவ்வுரிமை கிடையாது என்றும் ஐ.நா. சபையில் பிடிவாதமாக கூறிவரும் இந்தியா, திபெத் பௌத்த மதத் தலைவரான தலாய்லாமாவை(7) வைத்துக் கொண்டு திபெத், சீனாவிலிருந்து பிரிவதை ஆதரிப்பதாகக் கூறி வருகிறது.

இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போல அன்டனியோ கெசாஸ்சி(8) (Antonio Cassese, 1995) உள்ளக சுயநிர்ணய உரிமை, வெளியக சுயநிர்ணய உரிமை என இரண்டு பிரிவாக சுயநிர்ணய உரிமையை வகைப்படுத்திய பின்னர் இது தொடர்பான சர்ச்சை தற்போது மேலும் வலுவடைந்திருக்கிறது

00000



படிப்பகம்

www.padippakam.com

1700-ம் ஆண்டளவிலேயே மேற்கு ஐரோப்பாவில் இத்தகைய நவீன தேசியங்கள் முதன் முதலாக உருவாகின. அந்நூற்றாண்டில் இவ்வகையான நாற்பத்தைந்து அரசுகளும், 1945-ல் 65 அரசுகளும் உலகெங்கும் காணப்பட்டன. தற்போது சுமார் 200 நாடுகள் அல்லது அரசுகள் உள்ளன.
(Alexander Rotenberg,2001)

# 2

# தேசங்கள், தேசியங்கள்: தோற்றமும் வளர்ச்சியும்

குரங்கிலிருந்து மனிதர் தோன்றிய காலம் முதல் அவர்கள் ஒரு சமூகமாகவே வாழ்ந்து வருகின்றனர். இந்நீண்ட சமூக வாழ்க்கையானது ஒவ்வொரு சமூகங்களிடையேயும் ஒரு பொது மொழியையும், ஒரு பொதுக் கலாச்சாரப் பண்பாட்டு அடையாளத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

ஆரம்பத்தில் மனித சமூகம் பூர்வீக கோத்திர சமூகங்களாகப் பிளவுண்டு கிடந்தது. அதன்பின்னர் அவை அரசினால் ஆளப்படும் சமூகங்களாக வளர்ந்தன. நீண்ட காலமாக மனித சமூகமானது இயற்கைத் தடைகளை (கடல், உயரமான மலை, நீண்ட சதுப்பு நிலம் போன்றவை) கடக்க முடியாமல் அவரவர் வாழும் பிரதேசங்களில் சிறைப்பட்டுக்கிடந்தது.



படிப்பகம்

www.padippakam.com



நிலப்பிரபுத்துவ சமூதாயத்தில் உழைப்பாளர்கள் கொத்தடிமைகளாக நிலத்தோடு பிணைக்கப்பட்டு கிராம பொருளாதாரத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். முதலாளித்துவப் புரட்சி மனித சமூதாயப் பரிணாம வளர்ச்சியில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது. போக்குவரத்துச் சாதனங்களின் அபிவிருத்தியும் தொலைத் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியும் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் நெருக்கமாகப் பின்னிப்பிணைத்தன. இவ்வளர்ச்சி விரிவான சந்தையையும் மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்தையும் உருவாக்கி இச்சமூகங்களை நெருக்கமாக இணைத்தன. இதன் மூலம் நிலையான தேசங்களும் புது வடிவிலான தேசிய சமூகங்களும் உருவாகின. முதலாளித்துவப் புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் நிலையான தேசம் என்று எதுவும் இருக்கவில்லை. அடிக்கடி இடம்பெற்ற நிலப்பிரபுத்துவ யுத்தங்களால் தேசங்களின் எல்லைகள் சுருங்கியும், விரிந்தும், மாறியும், மறைந்தும் வந்தன. ஆகவே முதலாளித்துவப் புரட்சியின் பின்னரே நிலையான தேசியங்கள் உருவாகின. அதுவரை இன்று நாடுகளாக அடையாளம் காணப்படும் சமூக-புவியியல் அலகுகள் பற்பல நிலையற்ற சிற்றரசுகளாக சிதறிக்கிடந்தன.

1700-ம் ஆண்டளவிலேயே மேற்கு ஐரோப்பாவில் இத்தகைய நவீன தேசியங்கள் முதன் முதலாக உருவாகின. அந்நூற்றாண்டில் இவ்வகையான நாற்பத்தைந்து அரசுகளும், 1945-ல் 65 அரசுகளும் உலகெங்கும் காணப்பட்டன. தற்போது சுமார் 200 நாடுகள் அல்லது அரசுகள் உள்ளன. (Alexander Rotenberg,2001)

முதலாளித்துவ புரட்சியின் பின்னர் தேசங்களும் தேசியங்களும் நான்கு விதமாக உருவாகின.

***தேசிய அரசுகள்:*** மேற்கு ஐரோப்பாவிலே இயந்திர கைத்தொழில் புரட்சி மூலம் உருவான முதலாளித்துவ நாடுகள் மிகவும் மத்தியத்துவப் படுத்தப்பட்ட தேசிய அரசுகளாக உருவாகின. இங்குதான் முதன் முதலாக நவீன தேசியங்கள் உருவாகின. இதில் பிரித்தானியா மாத்திரம் வித்தியாசமான அரசாகத் திகழ்ந்தது.

***பல் தேசிய அரசுகள்:*** கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு மட்ட வளர்ச்சிகள் கொண்ட பல்வேறு தேசியங்கள் உருப்பெற்று பல்தேசிய அரசுகள் உருவாகின. (உதாரணம்: ஆஸ்த்திரியா-ஹங்கேரி, செக்கஸ்லோவாக்கியா......).

***குடியேற்ற அரசுகள்:*** வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில்



படிப்பகம்

www.padippakam.com



இருந்து வேறு கண்டங்களுக்கு இடம்பெயர்ந்த தேசியங்கள் அங்கு புதிய குடியேற்றங்களை நிறுவின. அவை புதிய தேசியங்களாகப் பரிணமித்ததுடன் நாடுகள் பல உருவாகவும் வழிவகுத்தன. (உதாரணம்: அமெரிக்கா, கனடா,........).

***கொலனித்துவ அரசுகள்:*** தொழில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகள். வளர்ச்சியில் பின்தங்கிய மக்கள் வாழ்ந்த பிரதேசங்களை ஆக்கிரமித்துத் தமது அரசுகளை உருவாக்கியதன் மூலம் பல கொலனித்துவ அரசுகள் உருவாகின. (உதாரணம்: இலங்கை, இந்தியா..........).

இத்தேசங்களில் எல்லாம் பொது மொழியையும் பொதுவான கலாச்சார பண்பாட்டு அடையாளங்களையும் கொண்ட சமூகங்கள் வெவ்வேறு மட்ட தேசிய வளர்ச்சியைக் கொண்டு உருவாகின. தேசியம் அல்லது தேசியஇனம் என்பதற்கு ஸ்டாலின் (J.V.Stalin,1913) முதல் ஏர்னஸ்ட் ஜெல்னர் (Earnest Gellner,1983) வரை பலர் பல வரைவிலக்கணங்களை வகுத்துள்ளனர். அவற்றைத் தொகுத்துப் பின்வருமாறு கூறலாம்.

"Self- Identifying stable modern community of people, who share a sense of group identity and solidarity based on common language, common culture, and (in general) common territory."

***"பொதுவான மொழி, பொதுவான கலாச்சாரம், பொதுவான பிரதேசம் (பெரும்பாலான சந்தர்ப்பங்களில்) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமக்கிடையே குழும உணர்வையும் ஒருமைப்பாட்டையும் பகிர்ந்து கொள்ளும் சுய அடையாளமுடைய நிலையான நவீன மக்கள் சமூகமே தேசியமாகும்."***

இவ்வாறான தேசிய சமூகங்கள் உலகெங்கும் 7000 முதல் 10,000 வரை இருப்பதாக மானிடவியலாளர்கள் கணித்துள்ளார்கள்.

00000



படிப்பகம்

www.padippakam.com

ஆதியிலே மனிதன் காடுகளில் அலைந்தபொழுது தனது கோத்திரத்திற்கு வெளியே யாரைக் கண்டாலும் அவனை அடித்துக் கொன்று சாப்பிட்டான். அந்த மனிதமாமிசம் உண்ணும் பழக்கம் நாகரிக மனிதனின் உள்ளத்துக்குள் இன்னும் ஒளிந்திருக்கிறது. தேசிய உணர்வும் சரி மத உணர்வும் சரி மொழி உணர்வும் சரி வெறியாக மாறும்பொழுது அந்தக் காட்டுமிராண்டி நிலைக்கு மனிதன் மீண்டும் திரும்பிவிடுகிறான். தேசிய வெறி ஏனைய அனைத்து வெறிகளையும் விட உக்கிரம் வாய்ந்தது

**(N.I. Bukharin,1915)**

# 3

# தேசியவாதம், தேசியங்களின் சுயநிர்ணய உரிமை: தோற்றமும் மாற்றமும்

முன் அத்தியாயத்தில் நாம் நான்கு வகையான அரசு உருவாக்கங்களைப் பற்றிப் பார்த்தோம். அவற்றில் பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள் வலுவான மத்தியத்துவப் படுத்தப்பட்ட ஒற்றையரசுகளைக் கொண்டிருந்தன. இந்நாடுகளில் (Nationhood) தேச உருவாக்கம் என்ற முழக்கமே செல்வாக்குப் பெற்றிருந்தது. நாட்டுப்பற்றுணர்வு இங்கு ஒரு பாத்திரம் வகித்தாலும் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்ட உணர்வு தோன்றுவதற்கான வாய்ப்புகள் அப்போது இருக்கவில்லை. இதற்கு விதிவிலக்காக பிரித்தானியாவினால் மேலாதிக்கம் செலுத்தப்பட்ட ஐரிஷ் மக்களின் போராட்டம் அமைந்தது. மொத்தத்தில் பெரிய பிரித்தானியா முற்றிலும் வித்தியாசமான தன்மை கொண்டிருந்தது. இங்கு பலம் வாய்ந்த அரசை இங்கிலாந்து தனது கைகளில் வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்டு ஸ்கொத்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து மக்களை தனது பிடிக்குள் இணைத்துக் கொண்டது. எனினும் அவை தனித் துவத்தை இழக்கவில்லை. ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த பலவீனமான பலசமூகக் குழுக்கள் பிரதான சமூகக் குழுக்களுடன் அரைத்துக் கலக்கப்பட்டன. விதிவிலக்காக தமது தனித்துவம் பேணிய சில சமூகக்குழுக்கள் தேசியங்களாக பிற்காலத்தில் உருவானபோதுதான் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் அல்லது இயக்கங்கள் சில நாடுகளில் உருவாகின. (ஸ்பெயின் பாஸ்க் மக்களை இதற்கு உதாரணம் கூறலாம்.)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே ஒரு அரசுக்குள் வாழ்ந்த பல தேசியங்களில் ஒன்று, பல்வேறு காரணிகளால் ஏனைய தேசிய சமூகங்களை விட முன்னணிக்கு வந்தது. அதன் மூலம் அரசு அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்ட அத்தேசியங்கள் தமது மேலாதிக்கத்தை ஏனைய சமூகங்கள் மீது திணிக்கத் தொடங்கின, பாரபட்சம் காட்டத் தொடங்கின. சற்றுக் காலம் கழித்து, விழிப்புற் றெழுந்த பாரபட்சம் காட்டப்பட்ட சமூகங்கள் தமது உரிமைக்காக குரல் கொடுத்தபோது அவற்றை நசுக்குவதற்கு அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. எனவே தேசிய ஒடுக்குமுறைக்கெதிராக ஒடுக்கப்படும் தேசியங்களின் மத்தியில் இருந்து போராட்டங்கள் வெடித்தன. சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன. தேசிய விடுதலை இயக்கங்கள் உருவாகின. இந்நாடு களில் ஒடுக்கும் தேசியங்கள் மத்தியிலிருந்து பெருந்தேசியவாதமும், ஒடுக்கப்படும் தேசியங்கள் மத்தியிலிருந்து ஒடுக்குமுறைக்கெதிரான தேசியவாதமும் உருவாகத் தொடங்கின. இந்நாடுகளில் ஒரே அரசுக்குள் வாழும் ஒரு தேசியத்திற்கெதிராக மற்றொரு தேசியம் போராடும் நிலைமையே காணப்பட்டது. வெளியார் ஆக்கிரமிப்பிற் கெதிரான போராட்டமாக அவை அப்போது திகழவில்லை.

குடியேற்ற நாடுகளில் காலக்கிரமத்திலே குடியேற்றவாசிகள், புதிய தேசியங்களாக உருவாகி தம்மீது மேலாதிக்கம் செலுத்திய தமது தாய்நாட்டிற்கு எதிராக போராடத் தொடங்கினர். இங்கு வெளியார் மேலாதிக்கத்திற்கெதிரான தேசிய உணர்வும் தேசிய விடுதலை இயக்கமும் பரிணமித்து போராட்ட வடிவத்தை எடுத்தது. 1776-ல் நிகழ்ந்த அமெரிக்க சுதந்திரபோர் (9) இதன் ஆரம்பத்தைக் குறித்தது.

ஐரோப்பிய நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்ட கொலனித்துவ நாடுகள் சிறிது காலம் உறக்க நிலையிலிருந்து பின்னர் விழித் தெழுந்தன. இங்கு கொலனித்துவ பிடியிலிருந்து விடுதலையும்,



படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரமும் கோரி இயக்கங்கள் உருவாகத் தொடங்கின. இங்கெல்லாம் நாளடைவில் தேசிய வாதம் பரவிக்கொண்டது.

தேசிய ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு தனி அரசை அமைத்துக் கொண்டு வாழும் உரிமைக்கான போராட்டம் முதன் முதலாக ஐரிஷ் மக்களிடமிருந்தே வெடித்தது. ஐரிஷ் மக்களின் போராட்டம்தான் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை உலகத்திற்கு அறிமுகப்படுத்தி வைத்தது. 1776-ல் பிரித்தானியாவிற்கெதிராக எழுச்சிபெற்ற அமெரிக்க சுதந்திரப்போர், சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கும் போராட்டத்திற்கும் மேலும் வலுச்சேர்த்தது. அதனையடுத்து 1789-ல் வெடித்த பிரான்சியப் புரட்சி சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்திற்கு புது உத்வேகத்தையும் புது உள்ளடக்கத்தையும் கொடுத்தது. பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக வரலாற்றில் முதல் தடவையாக குடியரசு ஒன்று உருவாகியது. (புராதன ஏதென்ஸ் குடியரசு இதற்கு விதி விலக்கு) இதனால் அரச பக்தி என்ற கருத்தாக்கத்திற்குப் பதிலாக மக்களாட்சி என்ற புதிய எண்ணக்கரு தேசியவாதத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டது. மன்னராட்சியை நிறுவுவதற்குப் பதிலாக மக்களாட்சியை நிறுவுவது என்ற முழக்கம் தேசிய வாதத்திற்குப் புதிய அர்த்தத்தையும் புதிய வலிமையையும் சேர்த்தது. பிரான்சியப் புரட்சியின் தாக்கம் பல இடங்களில் எதிரொலித்தது. இதன் விளைவாக 1810-ல் முதல் 1820 வரை தென் அமெரிக்க நாடுகளில் குடியரசிற்கான போராட்டம் புயலாக வீசியது. ஆனால் மேற்கு ஐரோப்பிய நாடுகள் பல, குடியரசுக் கொள்கைக்கு அஞ்சி முடியாட்சியுடன் சமரசம் செய்து கொண்டன. இவ்வாறாக 1822-ல் போர்த்துகல் நாடும், 1830-ல் நெதர்லாந்தும், 1816-ல் இத்தாலியும், 1832-ல் கிரிசும், 1871-ல் ஜெர்மனியும் உருவாகின.

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பரிணமித்தது. இந்த இடைக்காலத்தில் இடம்பெற்ற தேசியப் போராட்டங்கள் அனைத்தும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியுடன் இணைந்ததாகவே காணப்பட்டன. இக்காலப்பகுதியில் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டிற்கு வலுவேற்றிய இரண்டு சம்பவங்களாக அமெரிக்க சுதந்திரப்போர் வெற்றி பெற்றமையையும் ஐரிஷ் மக்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை கார்ல் மார்க்ஸ் ஆதரித்ததையும் குறிப்பிடலாம். அமெரிக்க சுதந்திரபோர் ஒரு தேசியம் தனது சொந்தப் போராட்டத்தின் மூலம் சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்க முடியும் என்ற பாடத்தை உலகத்திற்கு முதற்தடவையாகப் புகட்டியது. ஐரிஷ் போராட்டத்திற்கு மார்க்ஸ் வழங்கிய ஆதரவு சமூக விஞ்ஞானிகளிடையே சுய நிர்ணய உரிமை தொடர்பான சர்ச்சையைக் கிளப்பி அதற்கு ஒரு



படிப்பகம்

www.padippakam.com



அங்கீகாரத்தை அறிவுலகில் பெற்றுக் கொடுத்தது. இக்கால கட்டத்தில் இடம் பெற்ற மற்றுமொரு முக்கியமான நிகழ்வு, கனடாவிலே (கனடா-கியூபெக்) சமஷ்டி ஆட்சி முறை 1867-ல் ஏற்படுத்தப்பட்டமையாகும். இதுவே உலகின் மிகப்பழைய சமஷ்டி எனக் கருதப்படுகிறது. இது, சுய நிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்வதை மாத்திரமல்ல இவ்வாறு இணக்கமான வழிமுறைகளில் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையும் உள்ளடக்கிய ஒன்று என்ற உண்மையை உலகிற்கு முதல்தடவையாக உணர்த்தியது.

இக்காலப்பகுதியில் இடம்பெற்ற மற்றமொரு முக்கியமான நிகழ்வு யாதெனில் 1896-ம் ஆண்டு கார்ல் கவுட்ஸ்கி தலைமையில் லண்டனில் கூடிய சர்வதேச காங்கிரஸ், தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியமையாகும். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். (பார்க்க: பின்னிணைப்பு -1). இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு, சுய நிர்ணய உரிமை தொடர்பாக மார்க்ஸ் ஏற்படுத்திய கருத்தின் தாக்கமே பிரதான காரணமாக இருந்தது. இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சார்ந்த சமூக ஜனநாயகவாதிகள் கலந்து கொண்டனர். அவர்களில் பிற்காலத்தில் ரஷ்ய சோஷலிசப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய லெனினும் ஒருவர். இங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அடுத்து, பல நாடுகளைச் சேர்ந்த சமூக ஜனநாயக கட்சிகள் சுய நிர்ணய உரிமையை ஆதரித்து, தீர்மானத்தை நிறைவேற்றின. பல நாடுகளில் இது தொடர்பான பலத்த சர்ச்சைகள் ஏற்பட்டு இக்கருத்தாக்கம் பற்றிய விழிப்புணர்ச்சி விரிவுற்றது.

இருபதாம் நூற்றாண்டு, ஏகாதிபத்திய யுகத்தின் தொடக்கத்தைப் பறைசாற்றிக்கொண்டு புலர்ந்தது. மனித குலம் அதுவரை கண்டிராத அவலங்களை இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி சந்தித்தது. இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி பல்வேறு விதமான பாரிய தேசிய எழுச்சிகளையும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும் அதற்கெதிரான தீவிரமான போராட்டங்களையும் தரிசித்தது. தேசிய அடக்குமுறைக்கு எதிரான எழுச்சிகளும், குறுகிய தேசியவாதமும், பெருந்தேசிய வெறியும் முட்டி மோதிக்கொண்டு உச்சகட்டத்தை அடைந்த காலகட்டம் இதுவென கூறலாம்.

1905-ல் மூன்று முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றன. ஒன்று சுவீடனில் இருந்து நோர்வே (தற்போது இலங்கை பிரச்சினையில் கரிசனை காட்டும் நாடு) சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பிரிந்தது. சமாதானமான முறையிலே நாகரிகமாக இரு நாடுகள் சுய நிர்ணய



படிப்பகம்

www.padippakam.com



உரிமையைக் கையாண்ட முதலாவது நிகழ்வு இதுவாகும். இதனால் சுய நிர்ணய உரிமை என்பது ஜனநாயகத்தின் இன்றியமையாத ஒரு ஆயுதமாக பரவலாகக் கருதும் மனப்பாங்கு வளர்ந்தது. இரண்டாவது முதல் தடவையாக ஐரோப்பிய நாடொன்றை ஆசிய நாடொன்று யுத்தத்தில் வெற்றி கொண்டது. ஜப்பானுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே -போர்ட் ஆர்தர்- (10) துறைமுகத்தில் நடைபெற்ற யுத்தத்தில் ரஷ்யா தோல்வி கண்டமை ஆசிய நாடுகளில் தன்னம்பிக்கையையும் தேசிய உணர்வையும் கிளர்ந்தெழச் செய்தது. இது தொடர்பாக நேருவும் தனது மகள் இந்திராகாந்திக்கு, சிறையிலிருந்து எழுதிய கடிதத்தில் அழகுபட விபரித்திருக்கிறார். மூன்றாவதாக, ரஷ்யாவிலே வெடித்த தொழிலாளர்களின் புரட்சி (11) தோல்வியைத் தழுவினாலும் அது உலகெங்கும் உள்ள தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1914-ல் மனித குலம் கண்டிராத நாசகார யுத்தம் ஒன்றை உலகம் சந்தித்தது. 1914முதல் 1918 வரை நடைபெற்ற முதலாவது உலக மகாயுத்தத்தின் போது 90 இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். கொலனித்துவ நாடுகளை கொள்ளையடிப்பதற்காக மேற்கொள்ளப் பட்ட இந்த யுத்தத்தின் போது தேசியவாதம் உச்சகட்டத்தை அடைந்தது. சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை ஒவ்வொரு கொள்ளைக்கார நாடும் தனக்கு ஏற்றமுறையில் வியாக்கியானம் செய்தது. தாய்நாட்டைக் காப்பது என்ற பெயரில் தேசிய வெறி தட்டியெழுப்பப்பட்டு ஏகாதிபத்திய நோக்கங்களுக்காக இந்த யுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்யுத்தத்தில் ஜேர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, துருக்கி ஆகிய நாடுகள் ஓரணியில் கூட்டுச் சேர்ந்திருந்தன. பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகள் மற்றுமோர் அணியில் திரண்டன. இரு அணிகளும் தேசிய உணர்வைத் தங்களது கொள்ளைக்கார நோக்கத்திற்குப் பயன்படுத்தின.

உலகமகா யுத்தம் வெடிப்பதற்கு முன்னர் கொலனித்துவ மக்களினதும் தேசியங்களினதும் சுய நிர்ணய உரிமையை ஆதரித்துக் குரல் கொடுத்தவர்கள் யுத்தம் வெடித்ததும் தத்தம் நாடுகள் ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதையும் பங்குபோட்டுக் கொள்வதையும் நியாயப்படுத்தத் தொடங்கினர். இவர்களில் பிரதான இடத்தை கார்ல் கவுட்ஸ்கி வகித்தார். அவர் தாய்நாடு என்ற பெயரில் ஜேர்மனி நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆதரித்தார். இதற்கு மாறாக லெனின் இக்கொள்ளைக்கார யுத்தத்திற்கு எதிராகவும் தேசிய சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் தொழிலாளவர்க்கத்தின் மத்தியில் கருத்துப் போராட்டத்தை நடத்தி அதற்குத் தலைமை தாங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com



இதற்கிடையில் 1917-ல் ரஷ்யாவில் இடம்பெற்ற அக்டோபர் புரட்சி(12) மனிதகுல வரலாற்றில் ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தியது. முதற்தடவையாக தொழிலாளர்கள் தலைமையில் சோசலிசப் புரட்சி ஒன்று வெற்றி பெற்றது. ஆட்சிக்கு வந்த லெனின் தலைமையிலான கம்யூனிஸ்ட்கட்சி கொலனிய மக்களின் விடுதலைப் போராட்டத்தை யும் சுயநிர்ணய உரிமையையும் ஆதரித்துக் குரல் கொடுத்தது. லெனின் உலக தொழிலாளர்களினதும் உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட தேசியங்களினதும் இரட்சகராகக் கருதப்பட்டார்.

முதலாம் யுத்த முடிவில் ஜேர்மனி தலைமையிலான அணி தோல்வியுற்றது. தோல்வியடைந்த ஏகாதிபத்தியங்களின் பிடியில் இருந்த பல நாடுகள் விடுதலை பெற்றன. இந்நாடுகளின் விடுதலை யைத் துரிதப்படுத்தக்கூடிய விதத்திலும் போருக்குப் பிந்திய நிலைமையை நெறிப்படுத்தும் வகையிலும் அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சன் 1918-ம் ஆண்டு தேசியங்களின் சுய நிர்ணய உரிமை உள்ளடங்கிய தனது 14 அம்ச திட்டத்தை முன் வைத்தார். இத்திட்டம் ஆசிய ஆப்பிரிக்க மக்களின் ஆதரவைப் பெற்றது.

உலக மகாயுத்தத்தின் முடிவில் ரஷ்யாவின் லெனினும், அமெரிக்காவின் வில்சனும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய இருபெரும் தலைவர்களாக உலக அரங்கில் கருதப்பட்டனர். இவ்விரு தலைவர்களும் கொலனித்துவ நுகத்தடியில் இருந்த மக்களின் விடுதலையைக் கோருவதில் பொதுத் தன்மையைக் கொண்டிருந்தாலும் இருவரிடமும் சில வேறுபாடுகளும் இருந்தன. லெனின் சுயநிர்ணய உரிமையைப் புரட்சியுடன் இணைத்துப்பார்த்தார். வில்சன் அதனை ஜனநாயக சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் நோக்கினார் (Elizabeth M Jamilah Kone,1998). வில்சன் தனது அமெரிக்க அரசால் ஒடுக்கப்படும் கறுப்பினத்தவருக்கு சுய நிர்ணய உரிமை வழங்காத அதே சமயம் ஏனைய ஏகாதிபத்தியங்களின் பிடியில் உள்ள கொலனித்துவ மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். ஆனால் லெனின் தனது சொந்த ரஷ்ய பெருந் தேசியவாதத்திற்கெதிராகவும் கொலனித்துவ ஒடுக்குமுறைக்கு எதிராகவும் சுயநிர்ணய உரிமையை உயர்த்திப்பிடித்தார். இதன் தாக்கம் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளெங்கும் எதிரொலித்தது. 1919-ல் அனைத்து ஆப்பிரிக்க நாடுகளின் காங்கிரஸ் கூடி கொலனிய நாடுகளின் சுயநிர்ணய உரிமையை முன்வைத்தது. யுத்தமுடிவில் 1919-ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட வார்சேயில் ஒப்பந்தத்திலும்(13) சுயநிர்ணய உரிமை பிரகடனப்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட தற்போதைய ஐ.நா.வின் முன்னோடியான "தேசங்களின் லீக"(14)



படிப்பகம்

www.padippakam.com



(League of Nations) தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தது. 1926-ல் ஜெனிவா மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட அடிமை ஒழிப்பு ஒப்பந்தம் தேசங்களின் விடுதலைக்கு மற்றமொரு படிக் கல்லாக அமைந்தது.

முதலாம் உலகமகாயுத்தம் ஓய்ந்த பின்னரும் அது உருவாக்கிய விளைவுகளில் இருந்து உலகம் முற்றாக மீள வில்லை. யுத்தம் மூட்டிய தேசிய வெறி இன்னும் நீறுபூத்த நெருப்பாகத் தகித்துக்கொண்டிருந்தது. தோல்வியடைந்த ஜேர்மனி, தனது இழந்த அந்தஸ்தை நினைத்து ஏங்கியது, வெற்றி பெற்ற நாடுகளுக்கு ஹிட்லரின் தலைமையில் பாடம் படிப்பிக்கத் துடித்தது. 1930களில் ஹிட்லரின் நாசிஸ பசிக்கு 60 இலட்சம் யூதர்கள் (இவர்களுள் கம்யூனிஸ்டுகளும், நாடோடிகளும் அடங்குவர்) பலி கொடுக்கப்பட்டனர். மற்றொரு உலகமகா யுத்தம் இரண்டு தசாப்தங் களில் வெடிக்குமென எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் இரண்டாம் உலகமகா யுத்தம் வெடித்து தனது கோரப்பசிக்கு ஐந்து கோடியே ஐம்பது இலட்சம் மக்களை இரையாக்கிக் கொண்டது. மீண்டும் ஒருமுறை தேசியவாதம் தேசிய வெறியாக மாறி மனிதனைக் காட்டுமிராண்டியாக மாற்றியது.

ஆதியிலே மனிதன் காடுகளில் அலைந்தபொழுது தனது கோத்திரத்திற்கு வெளியே யாரைக் கண்டாலும் அவனை அடித்துக் கொன்று சாப்பிட்டான். அந்த மனிதமாமிசம் உண்ணும் பழக்கம் நாகரிக மனிதனின் உள்ளத்துக்குள் இன்னும் ஒளிந்திருக்கிறது. தேசிய உணர்வும் சரி மத உணர்வும் சரி மொழி உணர்வும் சரி வெறியாக மாறும்பொழுது அந்தக் காட்டுமிராண்டி நிலைக்கு மனிதன் மீண்டும் திரும்பிவிடுகிறான். தேசிய வெறி ஏனைய அனைத்து வெறிகளையும் விட உக்கிரம் வாய்ந்தது (N.I.Bukharin,1915).

இரண்டாம் உலகமகா யுத்த முடிவில் உலகத் தேசப்படம் வெகுவாக மாறியிருந்தது. கொலனிகள் அடிமைத்தளையிலிருந்து மீள்வதற்கு சுயநிர்ணய உரிமை முழக்கத்தை உயர்த்திப் பிடித்தன. யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்புமே சாராம்சத்தில் தோல்வியைத் தான் தழுவியிருந்தன. ஜேர்மனியின் உலகத்தைக் கட்டியாளும் ஆதிக்க வெறி முற்றாக முறியடிக்கப்பட்டது. அதே சமயம் வெற்றி பெற்ற அணியில் முன்னணி வகித்த பிரித்தானியா, அதாவது அதுவரையில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தைக் கொண்டு விரிவடைந் திருந்த பிரித்தானியா, யுத்தமுடிவில் பலவீனப்பட்டுப் போயிருந்தது.

மொத்தத்தில் பழைய ஏகாதிபத்தியம் அடியோடு ஆட்டம்



படிப்பகம்

www.padippakam.com



கண்டிருந்தது. அதுவரை அடிமைப்பட்டிருந்த கொலனிகளில் தேசிய இயக்கங்களும் சுயநிர்ணய உரிமை முழக்கங்களும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பலமாக ஒலித்தன. இனிமேல் அவற்றைப் பழைய பாணியில் துப்பாக்கி முனையிலே அடக்கியாள முடியாது என்பது உணரப்பட்டது. காந்தி, நேதாஜி ஆகியோரின் தலைமையிலான இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் தடுத்து நிறுத்த முடியாத ஒன்றாகிவிட்டது. உலக சனத்தொகையில் நாலில் ஒரு பங்கை கொண்டிருந்த சீனா, மாவோ சேதுங் தலைமையில் சோசலிசப் புரட்சியை நோக்கி வீறு நடை போட்டுக்கொண்டிருந்தது. அதுவரை உறக்கநிலையில் இருந்த ஆப்பிரிக்கக் கண்டம் விழித்தெழுந்தது. ஆகவே ஒடுக்கப்பட்ட தேசியங்களின் உத்வேகம் பெற்ற உணர்ச்சி வேகத்திற்கு ஏற்ப ஏகாதிபத்தியங்கள் தமது சுரண்டல் முறைமையில் உருமாற்றம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தமது முன்னைய கொலனிகளில் புதிய ஏற்பாட்டின் கீழ் அதே ஏகாதிபத்திய சுரண்டல் முறையைத் தொடர்ந்தன. அதாவது சுதந்திரம் என்ற பெயரில் அரசியல் பொறுப்பை தமக்கு விசுவாசமான ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு பொருளாதார நலன்களை அவை பேணிக்கொண்டன.

இரண்டாம் உலகமகா யுத்த முடிவில் பாசிசம் தோற்கடிக்கப் பட்டிருந்தது. ஆனால் கொலனித்துவம் ஒழிக்கப்படவில்லை. அது புனர் ஜென்மம் எடுத்தது. பழைய கொலனித்துவ முறைக்குப் பதிலாக நவகொலனித்துவம் மாற்றீடு செய்து கொண்டது. பல புதிய நாடுகள் அரங்கிற்கு வந்தன. அவற்றில் சில ஏகாதிபத்திய வாதிகளால் செயற்கையாக உருவாக்கப்பட்டவை. மத்திய கிழக்கிலே அரபு நாடுகள் கூறுபோடப்பட்டன. ஜேர்மனியும் (மேற்கு ஜேர்மனி-கிழக்கு ஜேர்மனி) இந்தியாவும் (இந்தியா-பாகிஸ்தான்) கொரியாவும் (வடகொரியா-தென்கொரியா) வியட்நாமும்(வட வியட்நாம்-தென்வியட்நாம்) சீனாவும் (சீனா-தைவான்-ஹொங்கொங்) என கூறு போடப்பட்டன. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் சுதந்திரம் பெற்ற பல நாடுகள் இயற்கையான எல்லைகளைக் கொண்டிருக்கவில்லை. ஏகாதிபத்தியங்கள் தமது நிர்வாக வசதிக்காக உருவாக்கிய நிர்வாக அலகுகளாகவே அவை திகழ்ந்தன. இந்நாடுகள் பெரும்பாலும் பல தேசியங்களைக் கொண்ட பல்தேசிய அரசுகளாக இருந்த போதும் அதற்குள் வாழும் அனைத்து தேசியங்களினதும் நலன்களைப் பேணும் விதத்தில் நிர்வாக எல்லைகள் வகுக்கப்படவில்லை. அதில் வாழும் சமூ கங்கள் அனைத்தும் பங்கேற்கக்கூடிய ஆட்சிமுறை உருவாக்கப் படவில்லை. எனவே ஏகாதிபத்தியங்களுக்கு இக்கட்டமைப்பைச் சீர் குலைக்காமல் தமது சுரண்டலை வேறு வழியில் தொடர்வது



படிப்பகம்

www.padippakam.com



சிரமமான காரியமாக இருக்கவில்லை. மறுபுறத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்த சுதேச ஆட்சியாளர்கள் பிரதிநிதித்துவப் படுத்திய தேசியங்களினதும் வர்க்கங்களினதும் நலன்களுக்கு உகந்தவையாக இத்தகைய செயற்கையான ஆட்சிமுறைகளும் நிர்வாக எல்லைகளும் அமைந்திருந்தன.

இந்நாடுகளில் அதிகாரத்திற்கு வந்தவர்கள் உள்நாட்டு மூல வளங்களைப் பயன்படுத்தவும் தமது நாட்டின் சமூகத் தன்மைக்கேற்ப, புதிய நிர்வாக ஆட்சிமுறையை மாற்றியமைக்கவும் முயற்சிசெய்யாமல் பிரித்தாளும் தந்திரோபாயத்தைக் கொண்டிருந்த ஏகாதிபத்தியவாதிகளின் அதே நிர்வாக இயந்திரத்தை தொடர்ந்தும் இயக்கினர். மாற்றுப் பொருளாதார வேலைத்திட்டம் எதுவும் இவர்களிடம் இருக்கவில்லை. எனவே, வெகு விரைவில் அவர் களிடமே கடன் கேட்டுக் கையேந்த வேண்டியநிலைக்கு இந்நாடுகள் தள்ளப்பட்டன. ஏகாதிபத்திய சுரண்டலில் முன்னர் துப்பாக்கி வகித்த பாத்திரத்தை இப்போது கடனுதவி வகிக்கத் தொடங்கியது. இதற்கு சிறந்த உதாரணம் ஆப்பிரிக்க நாடுகளாகும். அறுபது களிலே அவை சுதந்திரம் பெற்றன. அந்நாடுகளை ஆட்சி செய்த வெள்ளையர்கள் தமது துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு அந்நாடுகளை விட்டு வெளியேறினார்கள். அதன் பிறகு வெளிநாட்டு வங்கிகள் அங்கு வந்தன. கடன்களை வாரி வழங்கின. எழுபது களில் -பத்து வருடங்களுக்குள்- அந்நாடுகள் கடனுக்கு வட்டி செலுத்த முடியாமல் மூச்சுத் திணறின. பஞ்சம் தலைவிரித்தாடத் தொடங்கியது. ஜனநாயக சிவில் ஆட்சிமுறைகளைக் கொண்டிருந்த நாடுகளில் கூட இராணுவ சதிகளின் மூலம் இராணுவம் ஆட்சிக்கு வந்தது. இரண்டாம் மகாயுத்தத்தின் பின்னர் தேசிய உணர்வுடன் பெருமையோடு பெற்றுக் கொண்ட சுதந்திரம் அவர்களிடம் வாங்கிய கடனுக்கு வட்டியாகத் திருப்பித் தரப்பட்டது (Alexandre Rotenberg, 2001).

புரட்சியின் மூலம் ஏகாதிபத்தியத்தை தமது நாட்டிலிருந்து விரட்டியடித்த சீனா மாத்திரம் தனது பொருளாதார நிர்வாக அரசியல் கட்டமைப்பை முற்றாக மாற்றியமைத்துக் கொண்டதன் மூலம் தப்பித்துக் கொண்டது.

எப்படியோ, இரண்டாம் உலக மகாயுத்த முடிவின் போது பல நாடுகள் சுதந்திரம் பெறுவதற்கு, தேசியவாதமும் சுயநிர்ணய உரிமையும் காரணமாக இருந்தன. இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுற்ற 1945-ம் ஆண்டுக்கும் 1968-ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 66 நாடுகள் சுதந்திரம் பெற்றன. 1957 ஆம் ஆண்டில் கறுப்பின மக்கள் வாழும் கொலனிகளில் சுதந்திரம்



படிப்பகம்

www.padippakam.com



பெற்ற முதலாவது நாடு என்ற பெருமையை கோல்ட் கோஸ்ட் (Gold Coast) பெற்றது. 1962-ல் அல்ஜீரியா சுதந்திரம் பெற்றது.

1949-ல் நிகழ்ந்த சீனப்புரட்சி தேசிய விடுதலை இயக்கங்களின் பாய்ச்சலுக்கு உத்வேகம் அளித்தது. வரலாற்றில் முதற் தடவையாக தேசியவாதத்தின் துணையோடும் சுயநிர்ணய உரிமையின் துணையோடும் ஒரு நாடு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி அல்லாத புதிய ஜனநாயக சோசலிச புரட்சியை வெற்றிகரமாக செய்து முடித்தது. இதன் தாக்கம் கிழக்கு ஆசியா முழுவதும் எதிரொலித்தது. குறிப்பாக வியட்நாம் ஹோசிமின் தலைமையிலே சீன முன்மாதிரியைப் பின்பற்றி தேசிய விடுதலைப் போராட்டத்தை சோசலிச புரட்சியுடன் இணைக்க முயற்சி செய்தது. அதன் பின்னர் பெரும்பாலான தேசிய விடுதலை இயக்கங்கள் சோசலிசப் புரட்சியை தனது இலக்காகக் கொள்ள ஆரம்பித்தன.

தேசிய விடுதலை இயக்கங்களின் மத்தியில் சோசலிசக் கருத்துகள் ஏற்படுத்திய தாக்கம் ஏகாதிபத்தியங்களைக் குலை நடுங்கச் செய்தன. எனவே அவை சுய நிர்ணய உரிமைக்குப் பதிலாக மனித உரிமையைப் பற்றிக் கூடுதலாகப் பேசத் தொடங்கின. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் உலகில் ஏற்பட்டிருந்த மாற்றங்களுக்கேற்ப தம்மை வடிவமைத்துக் கொண்டு கொலனித்துவ முறையின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் கட்டமைப்பு சிதையாமல் பாதுகாப்பதற்கு பலம் வாய்ந்த நிறுவனம் ஒன்று தேவைப்பட்டது. ஆனால் அதை நிறைவேற்றக் கூடிய பலம் -தேசங்களின் லீக்- கிற்கு இருக்கவில்லை. அது ஏற்கனவே செத்து மடிந்துவிட்டது. இரு உலக மகா யுத்தங்களிலும் பாதிக்கப்படாமல் தப்பிக்கொண்ட அமெரிக்கா அணுகுண்டை தன் கையில் வைத்துக் கொண்டு உலக அரங்கில் ஒரு வல்லரசாக உருவாகியிருந்தது. அதன் முன்முயற்சியால் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் (பிரித்தானியா), சீனா, ரஷ்யா ஆகிய நான்கு நாடுகள் ஒன்று கூடி டும்பார்ட்டன் ஒக்ஸ் (Dumbarton Oaks) என்னும் இடத்தில் ஒரு உச்சிமாநாட்டை 1944-இல் நடத்தின. இங்கு ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. 1945 அக்டோபர் மாதம் 24ந் திகதி 51 நாடுகளைக் கொண்டதாக இன்றைய ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. அதுவரை சுயநிர்ணய உரிமை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையாக இருந்ததே தவிர ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட சட்ட வரையறை உள்ளடக்கப்பட்ட ஏற்பாடாக அது திகழவில்லை. முதற் தடவையாக 1945-ல் ஐக்கிய நாடுகள் சாசனம் சுயநிர்ணய உரிமைக்கு அவ்வந்தஸ்தை வழங்கியது. எனினும் ஐ.நா வுக்கு முன்னர் இருந்த



படிப்பகம்

www.padippakam.com



தேசங்களின் லீக் காலத்தில் சுயநிர்ணய உரிமைக்கு இயல்பாக கிடைத்திருந்த அங்கீகாரம் ஐ.நா. உருவாக்கப்பட்ட பிறகு படிப்படியாக குறைக்கப்பட்டது. அதற்கு காரணம் வல்லரசுகள் அனைத்தும் சோவியத் யூனியன் உட்பட தமது செல்வாக்கு பிராந்தியங்கள் தமது கைகளிலிருந்து நழுவிச் செல்வதை விரும்பாதது தான். இவர்களது நோக்கங்களை வெளிப்படுத்தும் வகையிலேயே 1945 ஐ.நா. சாசனம் அமைந்தது. 19அதிகாரங்களையும் 111 வாசகங்களையும் கொண்ட இச் சாசனத்தில் இரண்டு இடங்களில் மாத்திரந்தான் வெளிப்படையாக சுயநிர்ணய உரிமைபற்றி பேசப் பட்டிருக்கிறது. அத்துடன் சுய-நிர்ணய உரிமையை ஒரு உரிமைப் பிரகடனமாக அல்லாமல் அதனை ஒரு கொள்கையாகவே பிரகடனப்படுத்தியது. மேலும் சுயநிர்ணய உரிமையின் தாற்பரியம் மனித உரிமைகளை மேலோங்கச் செய்வதுதான் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அச்சாசனத்தில் 11வது அதிகாரத்தில் கொலனிகளில் அடிமைப்பட்டிருந்த மக்களைப் பற்றிக் குறிப்பிடும் போது சுய-நிர்ணய உரிமையைப் பற்றி குறிப்பிடாமல் சுய ஆட்சி பற்றியே குறிப்பிடப்படுகிறது. இதைவிட 1948-ல் ஐ.நா. நிறைவேற்றிய சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தில் வெளிப்படையாக சுய-நிர்ணய உரிமையைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை (Elizabeth M Jamilah Kone, 1998).

தனி மனித அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டால் கூட்டு சமூக உரிமையான சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு தேவையில்லை என்ற கருத்தை ஐ.நா நிறுவனம் மறைமுகமாக உருவாக்கி வந்தது. இவ்வாதத்திலுள்ள குறை நிறைகளை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

சோவியத் முகாமுக்கும் அமெரிக்கா முகாமுக்கும் இடையேயான பனிப்போர் (cold war) நடைபெற்று வந்த காலகட்டத்தில் சுயநிர்ணய உரிமை பின்னுக்குத் தள்ளப்பட்டது. அதற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. 1945-ல் 51 நாடுகளைக் கொண்டிருந்த ஐ.நா.வின் அங்கத்துவத் தொகை 1960களில் மும்மடங்காக அதிகரித்திருந்தது. உலக மக்கள் தொகையில் கால்வாசிப் பேரைக் கொண்டிருந்த சீனாவும் 17,000 பேரை மாத்திரமே கொண்டிருந்த பாலோவும் (Palau - பசுபிக் மாக்கடலில் உள்ள தீவுகளில் ஒன்று) அங்கத்துவ நாடுகளாக அதிலிருந்தன. ஒரு சமயத்தில் ஐ.நா பொதுச்செயலாளர் புருத்தஸ் புருத்தஸ் காலி (Boutros Boutros Ghali) இந் நிலைமையையிட்டு வெளிப்படையாகவே அச்சத் தொனியில் பேச ஆரம்பித்தார். இந்த வேகத்தில் புதிய



படிப்பகம்

www.padippakam.com



நாடுகள் உருவாகுமானால் 2020-ம் ஆண்டில் ஐ.நா.வில் 400 நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் என மதிப்பிட்டார். ஐ.நாவில் மூன்றாம் உலக நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தால் தமது ஆதிக்கம் ஆட்டம் கண்டுவிடும் என வல்லரசுகள் அஞ்சத் தொடங்கின. எனவே சுயநிர்ணய உரிமையின் உட்பொருளை மழுங்கடிக்கச் செய்யும் விதத்தில் பல்வேறு விதமான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. சுயநிர்ணய உரிமையானது அடிமைப் படுத்தப்பட்ட கொலனிய நாடுகளுக்கு மட்டுமே தவிர அதில் வாழும் தேசிய சமூகங்களுக்கு அல்ல என்பது அதில் பிரதான கோட்பாடாகும். இதற்கு முன்னர் ரஷ்ய ஜனாதிபதியாக இருந்த பிரஸ்னோவ், தேசியங்களின் மட்டுப் படுத்தப்பட்ட இறைமையைப் பற்றிப் (Limited sovereignty) பேசியிருந்தார். இதன் மறைமுக அர்த்தம் ரஷ்யாவின் மேலாதிக்கத்தை ஏற்க மறுத்து அதன் செல்வாக்கின் கீழுள்ள எந்த ஒரு நாடும் பிரிந்து செல்ல முயன்றால் அவற்றிற்கெதிராக ஆயுத பலத்தைப் பிரயோகிக்கும் அதிகாரம் ரஷ்யாவுக்கு உண்டு என்பதாகும்.

1960-ம் ஆண்டு டிசம்பர் 14ம் திகதி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிறைவேற்றிய 1514 (XV) இலக்க தீர்மானம் அதாவது “காலனிய நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவதற்கான பிரகடனம்.” சுயநிர்ணய உரிமையின் ஜீவத்துடிப்புக்குப் பலத்த அடியைக் கொடுத்துள்ளது. இப்பிரகடனத்தின் (பார்க்க: பின்னிணைப்பு–2) இரண்டாம் அலகு தேசியங்கள் தமது அரசியல் அந்தஸ்து, பொருளாதார சமூக கலாச்சார அபிவிருத்தி தொடர்பாக, சுதந்திரமாக தீர்மானம் எடுப்பதற்கான சுயநிர்ணய உரிமை அனைத்து மக்களுக்கும் உண்டு எனக் கூறுகிறது. ஆனால் பிரதேச உரிமையும் பிரிந்து சென்று அரசை அமைக்கும் உரிமையும் அதில் கைவிடப் பட்டுள்ளது. அதே சமயம் அதன் 6ம் அலகு தேசிய ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் சீர்குலைப்பதற்காகச் செய்யப்படும் எந்த ஒரு முயற்சியும் ஐ.நா சாசனத்திற்கு முரணானது எனப் பிரகடனப்படுத்துகிறது. இதன் மூலம் பிரிந்து செல்லும் உரிமையை முற்றாகவே அது நிராகரித்துள்ளது.

வேடிக்கை என்னவென்றால், 1991-ல் சோவியத் முகாம் சிதைந்த போது அமெரிக்கா தலைமையிலான ஏனைய நாடுகள் சுயநிர்ணய உரிமையை மீண்டும் ஒருமுறை தூக்கிப்பிடித்தன. முன்னைய யூகோஸ்லாவியா சிதைவுற்றபோது இதற்கு ஒரு படி மேலே போய் அடிப்படை மனித உரிமைப்பிரச்சினையை சுயநிர்ணய உரிமையுடன் இணைத்து அவசர அவசரமாக அவற்றின் பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரித்தன.



படிப்பகம்

www.padippakam.com



முன்னைய யூகோஸ்லாவியாவில் இழைக்கப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பான சர்வதேச நீதி விசாரணைக் குழுவின் தலைவராக இருந்த அன்டானியோ கசாசி "மக்களின் சுயநிர்ணய உரிமை" என்ற பெயரிலே 1995-ல் வெளியிட்ட நூலில் கொலனிகளுக்கு மாத்திரமே பிரிந்து செல்லும் ***வெளியக சுயநிர்ணய உரிமை*** உண்டு, ஒரு நாட்டுக்குள் வாழுகின்ற தேசியங்களுக்குப் பிரிந்து செல்லாமல் தமது கலாச்சார, பொருளாதார, அரசியல் நிலைமைகளை தமது சுய விருப்பத்தின்பேரில் அமைத்துக் கொண்டு வாழும் ***உள்ளக சுயநிர்ணய உரிமை*** மாத்திரமே உண்டு என வரையறுத்துள்ளார். இதன் மூலம் தேசியங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை உட்பட தமது தலைவிதியை தாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமையை உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமையைத் தேசியங்களுக்கு மறுத்துள்ளார். இவரது இந்தக் கோட்பாட்டையே இன்று ஐ.நா. உயர்த்திப் பிடிக்கிறது.

00000



படிப்பகம்

www.padippakam.com

OK

**அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால், சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவது என்பது ஓர் ஒற்றை வழிப்பாதை அல்ல என்பதுதான். ஒரு தேசிய சமூகம் மாத்திரம் தீர்மானித்து அதனை அமுல்படுத்தும் நிலைமை பொதுவாக இருப்பதில்லை. ஒடுக்கப்படும் ஒரு தேசியம் அதற்கெதிரான போராட்டத்தைத் தொடங்கும்பொழுது அல்லது பிரிவினை கோரிக்கையை முன் வைக்கும்பொழுது ஒடுக்கும் தேசியத்தின் மத்தியிலிருந்தும் பெரும் தேசியவாதம் வெறித்தனமாகக் கிளம்புகிறது. தேசிய ஒடுக்குமுறை மேலும் அதிகரிக்கிறது. இந்நிலைமைகளின் போது ஒடுக்கப்படும் தேசியங்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய திட்டவட்டமான ஏற்பாடு சர்வதேச அரங்கில் இதுவரை கிடையாது.**

# 4

# தேசியங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான சர்ச்சைகள்

விடுதலைப்புலிகள் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றிப்பேச ஆரம்பித்திருக்கும் இன்றைய சூழலில் இது தொடர்பான விவாதமும் கரிசனையும் தமிழ்மக்கள் மத்தியில் அதிகரித்திருப்பது இயல் பானது. பலர் பலவிதமான விளக்கங்களை இதற்களித்து வருகிறார்கள். எனவே இவ்விடயம் தொடர்பாக ஒரு தெளிவான விளக்கத்தை வழங்குவது அவசியமாகிறது.

முதலில் சுயநிர்ணய உரிமை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டு அப்பால் நகரலாம். எலிசபெத் ஜமீலா கோன் என்பவர் விளக்கியவாறு சுயநிர்ணய உரிமை என்பதனை சுயம் -



படிப்பகம்

www.padippakam.com



நிர்ணயம் - உரிமை (Right - Self - Determination) என மூன்று தனித்தனிச் சொற்களாகப் பிரித்தால் அதன் அர்த்தம் தெளிவாகும்.

*சுயம்* - என்பது ஒரு தேசிய சமூகம் சுயமாக தனது தலைவிதி எதுவாக இருக்கலாம்? தான் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியல் வடிவம் எதுவாக இருக்கலாம்? என்பதைப் பற்றி தானே சுயமாக முடிவெடுப்பது மட்டுமல்ல, அம்முடிவுகளில் தலையிடும் உரிமை வேறு யாருக்கும் கிடையாது என்பதையும் குறிக்கிறது.

*நிர்ணயம்* - என்பது அதனை நிர்ணயிப்பது வேறு யாருமல்ல அந்தந்தத் தேசிய சமூகங்களே என்பதைக் குறிக்கிறது.

*உரிமை* - என்பது இது ஒவ்வொரு தேசியத்திற்கும் உள்ள பிறப்புரிமையே தவிர சலுகை அல்ல என்பதைக் குறிக்கிறது.

ஆகவே சுய நிர்ணய உரிமை என்பது ஒவ்வொரு தேசிய சமூகமும் தனது அரசியல் தலைவிதியை, தான் சுதந்திரமாக வாழும் அரசியல் வடிவத்தை, தானே தீர்மானிக்கும் உரிமை உடையது என்பதைக் குறிக்கிறது. இது பிரிந்து போகும் உரிமையையும் உள்ளடக்கியதாகும். பிரிந்து போகும் உரிமை என்பதை லெனினின் வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால் கணவன், மனைவி உறவில் உள்ள விவாகரத்து உரிமையைப் போன்றது. விவாகரத்து உரிமையுண்டு என்பதற்காக கணவனும் மனைவியும் பிரிந்து செல்லத் தேவையில்லை. இருவருக்கும் இடையிலான உறவு சகிக்க முடியாததாகி முரண்பாடு உச்ச கட்டத்தை அடையும்போதே விவாகரத்து உரிமை பயன்படுத்தப் படுகிறது. அதைப்போலவே பிரிந்து செல்வது என்பது கடைசி நடவடிக்கையாகும். ஒரு சுமூகமான குடும்ப வாழ்க்கையில் விவாகரத்து உரிமை எவ்வாறு கணவன்-மனைவி உறவில் ஒருவரை யொருவர் ஒடுக்குவதற்கு உரிமை இல்லை என்பதற்கான ஒரு அடித்தளத்தை அமைத்துத் தருகிறதோ அதைப்போல்தான் தேசிய சமூகங்களுக்கிடையிலான உறவில் சுயநிர்ணய உரிமையானது ஒவ்வொரு தேசிய சமூகத்திற்கும் பாதுகாப்பை வழங்கி அவர்களுக்கிடையேயான உறவை சீர்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.

ஒரு தேசிய சமூகம் பிரிந்து செல்ல விரும்பும் போது, அதற்கான அவசியம் அங்கு நிச்சயமாக இருக்குமானால், அதற்கான வாய்ப்பும், அதற்கான அகப் புறச் சூழலும் சாதகமாக அமையுமானால் அது சாத்தியமாகும். ஒரு துளி இரத்தம் கூட சிந்தாமல் இரண்டு தேசியங்கள் ஒன்றாக வாழ்ந்து ஜனநாயகமுறை



படிப்பகம்

www.padippakam.com



யில் பிரிந்து சென்றதை உலக வரலாறு கண்டிருக்கிறது. சுவீடனில் இருந்து நோர்வே பிரிந்தமை இதற்கான பழைய உதாரணமாகும். செக்கும் ஸ்லோவாகியாவும்(15) ஜனநாயக முறையில் பிரிந்து சென்றது அண்மைக்கால உதாரணமாகும். ஒடுக்கும் ஒரு தேசியத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிகரமாக பிரிந்து சென்று தனியரசை அமைத்துக்கொண்ட பல தேசிய சமூகங்கள் உண்டு. பிரித்தானிய ஆட்சியில் இருந்து அமெரிக்கா பிரிந்தது முதல் அண்மைக் காலத்தில் எரித்திரியாவும் (16) கிழக்கு திமோரும் (17) பிரிந்து தனி நாடுகள் அமைந்தமை வரையிலான பல உதாரணங்கள் இதற்குண்டு.

இதைத் தவிர சமஷ்டி முறையில் தேசியங்கள் தேசிய ஒடுக்குமுறைக்கு தீர்வு கண்ட பல உதாரணங்களை உலகம் கண்டிருக்கிறது. கனடாவின் சமஷ்டி முறை (இங்கு கியூபெக் மாநிலத்தின் பிரச்சினை இன்னும் முழுமையாக தீர்க்கப்பட வில்லை) இந்தியாவின் மாநில ஆட்சி முறை (இங்கும் மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்குமிடையிலான உறவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பல இன்னுமுள்ளன) போன்றவை இதற்கு சில உதாரணங்கள். சுவிட்சர்லாந்திலுள்ள கன்டன் முறை அந்நாட்டுக்கே உரிய முறையில் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமைந்துள்ளது. அதேபோல செயற்கையாகப் பிரிக்கப்பட்ட சில தேசியங்கள் மீண்டும் இணைந்துள்ளன. கிழக்கு ஜேர்மனி - மேற்கு ஜேர்மனி என பிரிக்கப்பட்டிருந்த ஜேர்மனி மீண்டும் ஒன்றிணைந்திருப்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இதில் உள்ள அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால், சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவது என்பது ஓர் ஒற்றை வழிப்பாதை அல்ல என்பதுதான். ஒரு தேசிய சமூகம் மாத்திரம் தீர்மானித்து அதனை அமுல்படுத்தும் நிலைமை பொதுவாக இருப்பதில்லை. ஒடுக்கப்படும் ஒரு தேசியம் அதற்கெதிரான போராட்டத்தைத் தொடங்கும்பொழுது அல்லது பிரிவினை கோரிக்கையை முன் வைக்கும்பொழுது ஒடுக்கும் தேசியத்தின் மத்தியிலிருந்தும் பெருந் தேசியவாதம் வெறித்தனமாகக் கிளம்புகிறது. தேசிய ஒடுக்குமுறை மேலும் அதிகரிக்கிறது. இந்நிலைமைகளின் போது ஒடுக்கப்படும் தேசியங்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய திட்டவட்டமான ஏற்பாடு சர்வதேச அரங்கில் இதுவரை கிடையாது.

ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றத்தில் கூட சுயநிர்ணய உரிமையைப் பிரிவினைக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய சட்ட வாய்ப்புகள் அரிதாகவே உள்ளன. சாராம்சத்தில், ஐ.நா. என்பது



படிப்பகம்

www.padippakam.com



அரசுகளையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் எந்தெந்தத் தேசியம் மேலாதிக்கம் செலுத்துகிறதோ அந்தந்த தேசியங்களின் கருத்தே ஐ.நா.வில் எதிரொலிக்கிறது. வெகுஜன அபிப்பிராயமும் எழுச்சிகளும் ஐ.நா.வில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் கூட முக்கிய தீர்மானங்களை ஒரு சில வல்லரசுகளே மேற்கொள்கின்றன. அந்நாடுகள் தமது இராணுவ வலிமையால் மாத்திரம் அல்ல நிதிப் பலத்தாலும் கூட ஐ.நா மீதும் அதன் அங்கத்துவ நாடுகள் மீதும் நிர்பந்தத்தைக் கொண்டு வருகின்றன. ஐ.நா.வுக்கு வழங்கப்படும் நிதி உதவியில் பெரும்பகுதியை இவ்வல்லரசுகளே வழங்குகின்றன.

மறுபுறத்தில் பிரிவினைக் கோரிக்கைகள் அனைத்தும் நியாய மானவையாகவும் இயல்பானவையாகவும் இருப்பதில்லை. சில பிரிவினைவாத இயக்கங்களை ஏகாதிபத்தியங்களும் தேசிய ஆதிக்கவாத சக்திகளும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளன அல்லது தாமே ஊட்டி வளர்த்துள்ளன. பஞ்சாபில் காலிஸ்தான் இயக்கம் இந்திராகாந்தியால் தன்னல நோக்கத் திற்காக தூண்டிவிடப்பட்டது என்பது இதற்கான உதாரணமாகும். ஜேர்மனிக்கெதிராக ஸ்லாவியர்களை அன்றைய ஜாரிச ரஷ்யா (18) தூண்டிவிட்டபோது ஜரிஷ் போராட்டத்தை ஆதரித்த அதே மார்க்ஸ் ஸ்லாவியர்களின் போராட்டத்தை எதிர்த்தமை இதற்கான ஒரு நல்ல உதாரணமாகும்.

## உள்ளக சுயநிர்ணய உரிமையும் வெளியக சுயநிர்ணய உரிமையும்:

இன்று கூறப்படும் உள்ளக, வெளியக சுய நிர்ணய உரிமைகள் பற்றி விளங்கிக் கொள்வதற்கான கருத்தாடலை தொடங்க வேண்டுமானால், இந்த சுயநிர்ணய உரிமை என்பது உண்மையில் யாருக்கு என்னும் கேள்வியிலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும்.

இன்று ஐ.நா.விலே மேலோங்கியிருக்கும் சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்தானது விடுதலை கோரும் கொலனிகளுக்கும், அரசுகளுக்கும் உரிய ஒன்றே தவிர தேசிய சமூகங்களுக்கு உரியது அல்ல என்பதாகும். பல சமூக ஆய்வாளர்களும் கூட இக்கருத்தைத்தான் இப்போது முனைப்பாக முன்வைத்து வருகிறார்கள். 1987-ல் ஐ.நா.விலே இந்தியா இக்கருத்தை பகிரங்கமாக முன்வைத்தது. ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழு பியா∴ப்ரா (Biafra) (19) மக்கள் நைஜீரியாவிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com



பிரிந்து செல்ல விரும்பியதை இதன் அடிப்படையிலேயே நிராகரித்தது. கனடாவின் கியூபெக் மாநிலம் முன்வைத்த தனிநாட்டுக் கோரிக்கையும் இதன் அடிப்படையிலேயே நிராகரிக்கப்பட்டது.

ஆனால் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் சுயநிர்ணய உரிமை என்பதற்கு விரிவான அடித்தளம் உண்டு. உண்மையில் இவ்வுரிமை பாரபட்சம் காட்டப்படும் பூர்வீக குடிகளுக்கும் சின்னஞ்சிறிய சமூகங்களுக்கும் கூட உண்டு. எல்லா சமூகங்களும் எண்ணிக்கையில் ஒரே அளவானவையாக இருப்பதில்லை. அதைப் போலவே அவற்றின் கலாச்சார சமூக வளர்ச்சியும் வாழ்விட சூழலும் பரம்பலும் சம மட்டத்தில் இருப்பதில்லை. எனவே சுய-நிர்ணய உரிமை அந்தந்த சமூகங்களின் இருப்பு நிலைமைக்கேற்ப தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதையே வலி யுறுத்துகிறது. இவ்வடிப்படையில்தான் 1913-ம் ஆண்டு லெனின் தலைமையில் இரசிய போல்சுவிக் கட்சி தேசியப் பிரச்சினை தொடர்பான தனது வேலைத் திட்டத்தை முன் வைத்தது. இதில் பிரிந்து செல்லக் கூடிய சூழலைக் கொண்டிருந்த தேசியங்களுக்கு, பிரிந்து செல்லும் உரிமை உட்பட முழுமையான சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதேசமயம் அவ்வாறு பிரிந்து செல்ல இயலாத சூழலில் வாழ்ந்த தேசியங்களது நலன் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இவர்களது சுய-நிர்ணய உரிமை உள்ளகத்தன்மை கொண்டதாக, அதாவது தமது தாய்மொழியில் கல்வி கற்பதற்கும் தமது மொழியில் நீதி மன்றங்களில் வழக்காடுவதற்கும் தமது மொழியில் சகல திணைக் களங்களோடும் தொடர்பு கொள்வதற்கும் தமது கலாச்சாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்திக் கொள்வதற்கும் தமது பிரதேசத்தின் மூல வளங்களுக்கு தாமே உரிமையுடையவர்களாக வாழ்வதற்கும் தமது நிர்வாகத்தைத் தாமே நடத்துவதற்கும் ஏனைய தேசியங்களோடு சரிநிகராக வாழ்வதற்கும் உரிமை உத்திரவாதப்படுத்தப்பட்டிருந்து.

அமெரிக்க அதிபராக இருந்த வூட்ரோ வில்சன் உலக மகாயுத்த முடிவில் முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் கூட இந்த அம்சம் வெளிப்படுகிறது. அதில் ஒவ்வொரு தேசிய மக்களுக்கும் தமது சொந்த அரசின் வடிவத்தை தேர்ந்தெடுக்கும் உரிமை இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஜனநாயக பூர்வமான உள்ளக சுயநிர்ணய உரிமையைக் குறிப்பதாகும். அதேசமயம் அதில் பிறர் ஆட்சியிலிருந்து விடுபட்டு இறைமை கொண்ட மக்களாக வாழும் உரிமையும் அவர்களுக்கு இருக்க வேண்டும் என மேலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது சாராம்சத்தில் வெளியக சுயநிர்ணய



படிப்பகம்

www.padippakam.com



உரிமையைக் குறிப்பதாகும்.

நெல்சன் பீரி (Nelson Peery) என்பவர் மூன்றாவது கம்யூனிச அகிலம் (20) தேசியங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக மேற்கொண்ட சரியான தீர்மானங்களை ஆராய்ந்து ( அவர் உள்ளக வெளியக சொற்பதங்களை பயன்படுத்தாதபோதும் ) அக்கருத்துக்கு விரிவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார். இவர் தேசியங்கள் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியப்பாட்டின் அளவைக் கொண்டு ஒவ்வொரு தேசியத்தினதும் எதார்த்த தன்மைக்கேற்ப அதனை மூன்று பிரிவாக பிரித்து அவற்றின் உரிமைகளை வரையறுத்திருக்கிறார்.

முதலில் தேசியங்களை (Nation) அவர் குறிப்பிடுகிறார். பிரிந்து செல்லக்கூடிய பிரதேச அடித்தளத்தைக் கொண்ட சமூகங் களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை உண்டு என்கிறார். (உதாரணம், வடக்கு கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்)

இரண்டாவதாக, பிரிந்து செல்லக் கூடிய சூழல் இல்லாத, ஆனால் ஒரு பிரதேசத்திலாவது அடர்த்தியாக வாழுகின்ற எண்ணிக்கையில் குறைவான தேசியங்களே சிறுபான்மை தேசிய இனம் (Minority Nationality) எனக் குறிப்பிட்டுள்ளார். (உதாரணம், மலையகத் தமிழ் மக்கள்) இவர்களுக்குக் பிரிந்து செல்லும் வாய்ப்பு இல்லாத போதும் தாம் வாழும் பிரதேசத்தில் சுய ஆட்சி அல்லது சுய நிர்வாகம் போன்ற ஏற்பாடுகளை அமைத்துக் கொண்டு வாழும் சுயநிர்ணய உரிமை உண்டு என விபரிக்கின்றார்.

மூன்றாவதாக, எந்த ஒரு பிரதேசத்திலும் அடர்த்தியாக வாழாமல் ஆங்காங்கே பரந்து வாழும் தனித்துவமான தேசியங்களையும் ( உதாரணம்- இலங்கையில் வாழும் பறங்கியர்) ஒரு பிரதேசத்தில் செறிவாக வாழ்ந்து சுயாட்சி அல்லது சுய நிர்வாக ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்தாலும் அதற்கு வெளியே பரந்து வாழ்கின்ற மக்களையும் (வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழுகின்ற ஈழத்தமிழர்) தேசிய சிறுபான்மையினர் (National minority) எனக் குறிப்பிட்டு இவர்களுக்கு சம உரிமையை உறுதிப்படுத்தும் சிறப்புச் சட்டங்களும் ஏற்பாடுகளும் வழங்கப்படவேண்டும், அவற்றைப் பெறும் சுயநிர்ணய உரிமை இவர்களுக்கு உண்டு எனவும் இவர் குறிப்பிடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com



இவர் பயன்படுத்தியிருக்கும் சொற்பதங்கள் தொடர்பான சர்ச்சையில் ஈடுபடாமல் அதன் சாராம்சத்தை மாத்திரம் கருத்திற் கொண்டால் சுயநிர்ணய உரிமையின் உண்மையான தன்மையும் அதன் பல்வேறு அம்சங்களும் தெளிவாக விளங்கும்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லாமல் அரசுக்குள்ளேயே அதில் வாழும் சமூகங்களின் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் உரிமையைக் குறிக்கின்றது. உள்ளக சுய-நிர்ணய உரிமை என்ற சொற்பதத்தைப் பிரயோகிக்காமல் பல நாடுகள் இக்கருத்தையே இதுவரை வலியுறுத்தி வந்திருக்கின்றன. சீனா ஒற்றையாட்சின் கீழ் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தை 1950 களிலிருந்தே முன்வைத்து வருகிறது. சீனாவில் வாழும் மொத்தச் சிறுபான்மை மக்களின் தொகை ஐந்து சதவீதத்திற்கும் குறைவானதாகும். இதில் பெரும்பாலான தேசியங்கள் பிரிந்து செல்லக்கூடிய சூழலில் வாழவில்லை. ஆயினும் அங்கு வாழும் சின்னஞ்சிறிய தேசியங்களுக்குக் கூட சுய நிர்வாக அலகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உலகின் மிகச்சிறிய தேசியம் எனக் கருதப்படும் ஹோசே (Hoche) மக்களுக்கு கூட (இவர்களது தொகை 2000 பேர் மாத்திரமே) நிர்வாக அலகு வழங்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயம் பிரிந்து செல்லக்கூடிய சூழலில் உள்ள திபெத்திய மக்களின் பிரிந்து செல்லும் உரிமையை சீனா அங்கீகரிக்க மறுத்து வருகிறது.

இதுவரை காலமும் சுயநிர்ணய உரிமையின் ஒன்றோடொன்று பிரிக்கமுடியாத அம்சமாகவே உள்ளக - வெளியக உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல கருதப்பட்டன. சாராம்சத்தில் பிரிந்து செல்லக்கூடிய சூழலைக் கொண்டுள்ள தேசியங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையும் பிரிந்து செல்ல இயலாத சூழலில் உள்ள மக்களுக்கு பிரிந்து செல்லாமல் தனக்குரிய அரசாங்க வடிவத்தை தேர்ந்தெடுக்கும் சுயநிர்ணய உரிமையும் உண்டு என்பதையுமே அது குறித்தது. ஆனால் 1960 களுக்குப் பின்னர் ஐ.நா உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதன் அர்த்தத்தை மாற்றியமைத்துள்ளது. ஒரு அரசுக்குள் வாழும் எந்த தேசிய சமூகமும் அது பிரிந்து செல்லும் சூழலில் வாழ்ந்தாலும் கூட அதற்கு பிரிந்து செல்லும் உரிமை கிடையாது என திட்டவட்டமாக வரையறுக்கிறது. இதன் மூலம் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் ஆத்மா கொலை செய்யப்பட்டிருக்கிறது.

ஏனெனில் தேசியங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசின் சுயநிர்ணய உரிமையாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் இறைமை பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றில் தலை



படிப்பகம்

www.padippakam.com



யிடுவதற்கு பிற சக்திகளுக்கு உரிமை கிடையாது எனவும் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதற்கு எந்த ஒரு தேசியத்திற்கும் உரிமை கிடையாது எனவும் ஐ.நா. பிரகடனப்படுத்தியதன் மூலம் நாடுகளுக்கிடையிலான உறவுகளைச் சமநிலைப்படுத்துவதில் ஒரு புதிய ஏற்பாட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனால் அதற்கேற்ப ஒரு நாட்டுக்குள் வாழும் பல்வேறு தேசியங்களுக்கிடையிலான உறவை சமநிலைப் படுத்தக்கூடியதான எந்த ஏற்பாட்டையும் முன்வைக்கத் தவறியுள்ளது. உதாரணமாக ஒரு தேசியம், தனது அரசினால் தனக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பாகவோ தனக்கு காட்டப்படும் பாரபட்சம் தொடர்பாகவோ தன்மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைக்கு எதிராகவோ முறையீடு செய்வதற்கும் நிவாரணம் பெறுவதற்கும் எந்த ஒரு நிறுவனப்படுத்தப்பட்ட ஏற்பாட்டையும் ஐ.நா. கொண்டிருக்கவில்லை. இதனால் அரசுகள் மேற்கொள்ளும் தேசிய ஒடுக்குமுறைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு எந்த ஒரு ஏற்பாடும் இல்லாதிருப்பதுடன் ஒடுக்கும் தேசியங்களின் கரங்கள் பலப்படுத்தப்படுகின்றன. சாராம்சத்தில் ஒடுக்கப்படும் தேசியங்கள் தம்மை ஒடுக்கும் தேசியங்களின் தயவில் தமது தலை விதியை தீர்மானிக்க வேண்டிய பரிதாபகரமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இவ்வுண்மை 1998 யுனெஸ்கோ நிபுணர்கள் மாநாட்டு அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 1993-ல் இளவரசர் ஹான்ஸ் அடம் II சுயநிர்வாகத்தின் மூலம் சுயநிர்ணய உரிமையை நடைமுறைபடுத்துவது தொடர்பாக நகல் பிரேரணை ஒன்றை ஐ.நா. பொதுசபையில் முன்வைத்தார். அதில் சமாதானமான முறையில் சுயநிர்ணய உரிமையை அமுல்படுத்தக்கூடிய நடைமுறைகளும் கட்டமைப்பும் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால் அப்பிரேரணைக்கு ஆக்கபூர்வமான ஆதரவைப் பெரும்பாலான அங்கத்துவ நாடுகள் வழங்கவில்லை. மேலும் சர்வதேச நீதிமன்றம் சஹ்ராயஸ் (Sahrauis) (21) வழக்கில் அதன் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக அபிப்பிராயத் தீர்ப்பு வழங்கிய போதும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. அதனை நடைமுறைபடுத்தும் அதிகாரமோ ஆற்றலோ அந்நீதிமன்றத்திற்கு இருக்கவில்லை.

**தனிநபர் சுயநிர்ணய உரிமையும் கூட்டு சுயநிர்ணய உரிமையும்.**

ஐ.நா. உருவாவதற்கு முன்னர் இருந்த "தேசங்களின் லீக்" சுயநிர்ணய உரிமை என்பதை ஒரு தேசியத்திற்குரிய கூட்டுரிமை யாகவே கருதியது. ஆனால் ஐ.நா. உருவான காலம் முதல் சமூ கத்தின் உரிமையைவிட தனிநபரின் அடிப்படை மனித உரிமை களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. ஒவ்வொரு தனி



படிப்பகம்

www.padippakam.com



மனிதனதும் வாழும் உரிமையும் மொழி, கலாச்சார, பொருளாதார, அரசியல் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டால் சமூகத்தின் உரிமை தானாகப் பாதுகாக்கப்படும் என்ற வாதம் இதனை நியாயப் படுத்துவதற்காக முன்வைக்கப்படுகிறது. ஹறி வோரன் (HarryVaron) போன்றோர் இதற்கு ஒரு படி மேலே போய் சமூகத்தின் சுயாதிபத்தியத்திற்குப் பதிலாக தனி மனிதர்களின் சுயாதி பத்தியத்தை வலியுறுத்தத் தொடங்கினர்.

சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தின்படி ஒவ்வொரு மனிதனுக்கும் சில அடிப்படை மனித உரிமைகள் உள்ளன. தான் என்ன ஆடை உடுத்த வேண்டும், தான் என்ன உண்ண வேண்டும் என்பதையும் அதைவிட பேச்சுரிமை, மொழிஉரிமை, கூட்டம்கூடும் உரிமை, சுயவிருப்பத்தின் பேரில் திருமணம் செய்யும் உரிமை, தனக்கு விருப்பமான மதத்தைத் தேர்ந்தெடுக்கவும் கைவிடவும் உள்ள உரிமை, போன்ற பல உரிமைகளை கொண்டிருக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அதே சமயம் ஒருவர் மற்றவர் உரிமையை மீறாமல் இருக்கவேண்டும். ஆனால் சமூகத்தின் கூட்டுரிமை தனிமனித உரிமையைவிட மேலானது. சமூகத்தின் நலன் பாதுகாக்கப்பட்டால்தான் தனிமனிதனின் நலனும் பாதுகாக்கப்படும். சமூகத்தின் கூட்டு முயற்சியின் மூலமே தனி நபர்களது பல ஜீவாதார உரிமைகள் பாதுகாக்கப்பட முடியும். தேசியவெறி, தேசிய காழ்ப்புணர்வு, மதவெறி, சாதிவெறி போன்ற வெறிகள் ஒரு சமூகத்திடையே ஊட்டப்பட்டு அவை மற்றொரு சமூ கத்தை அழிக்கும்பொழுது தனிநபர் உரிமைகள் அவர்களைப் பாதுகாக்கப் போவதில்லை. நாசிஸ பேரின வெறிக்கு எதிராக தனித்தனியாக யூதர்கள் எதைத்தான் சாதித்தார்கள்? பல தேசியங்கள் கூட்டு சேர்ந்தே அதனை முறியடிக்க முடிந்தது. தேசியத்தின் அடையாளங்களையும் தேசிய உரிமைகளையும் தேசியமாக ஒன்றுபட்டுத்தான் வெற்றி கொள்ள முடியும். அடிப்படை மனித உரிமை மீறலை சமூகத்தின் கூட்டுரிமைக்கு மேலாகத் தூக்கிப் பிடிப்பதில் உள்ள ஆபத்து யாதெனில், சமூக பிரக்ஞை இழக்கப்பட்டு தனது உரிமைகளைப் பற்றி மாத்திரமே அக்கறைகொள்ளத் தொடங்கும்போது, அயல்வீட்டாருக்கு ஆபத்து ஒன்று வரும்போது கூட தனது சொந்த பாதுகாப்பை பற்றி மாத்திரமே சிந்திக்கும் சுயநலவாதியாக அவனை மாற்றி சமூகத்தி லிருந்து அந்நியப்படுத்திவிடுகிறது. ஒவ்வொருவனும் தனது உரிமைக்காக நீதிமன்றம் செல்வதைப்பற்றி மாத்திரமே சிந்தித்து கூட்டுச் செயல்பாட்டிலிருந்து ஒதுங்கி நிற்கத் தூண்டுகிறது. இதன்மூலம் சமூகம் தனது கூட்டுப்பலத்தை இழந்து பலவீனப்பட்டு போய்விடுகிறது. மேற்கத்தைய நாடுகள் மூன்றாம் உலக மக்களினதும் தமது நாட்டின் தொழிலாள வர்க்கத்தினதும் கூட்டுச்



படிப்பகம்

www.padippakam.com



செயற்பாட்டையும் பலத்தையும் மழுங்கடிக்கச் செய்வதற்காகவே தனிமனித உரிமையைத் தூக்கிப்பிடிக்கின்றன என சில சமூக விஞ்ஞானிகள் கூறுவதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஒரு ஒடுக்கப்படும் சமூகம் ஒரு சமூகமாக எழுந்து சுயநிர்ணய உரிமையைக் கோருவதை விட ஒவ்வொருவனும் தனித்தனியாக நீதிமன்றம் செல்வது அவர்களைப் பொறுத்தளவில் தமது நலனைப் பாதுகாக்கும் விடயமாகும்.

இறுதியாக, உலகெங்கும் சிறிதும் பெரிதுமாக சுமார் 10,000 தேசியங்கள் வாழுகின்றன. சிறுசிறு பூர்வீக குடிகளையும் சேர்த்துக் கணக்கிட்டால் இத்தொகை மேலும் அதிகமாக இருக்கும். இவை அனைத்தும் பிரிந்து சென்று தனி அரசை அமைத்துக் கொண்டு வாழவேண்டும் என்ற நியதியும் கிடையாது. அத்தகைய ஒரு நிலைமை மனித குல வளர்ச்சிக்கு உகந்ததென யாரும் வாதிடவும் முடியாது. அதே சமயம் ஒரு சமூகம் தான் எண்ணிக்கையில் பெரும்பான்மை வகிப்பதை வைத்துக்கொண்டு தனக்குத்தான் கூடுதலான தேசிய உரிமை இருக்கிறதென வாதிட முடியாது. தேசியசமூகங்கள் எண்ணிக்கையளவில் பெரியவையாக இருப்பினும் சரி சிறியவையாக இருப்பினும் சரி அவை உரிமையில் சமமானவை. எந்த ஒரு தேசியத்திற்கும் மற்றொரு தேசியத்தை ஒடுக்குவதற்கு உரிமை கிடையாது. இதற்கான ஜனநாயக வரையறைக்குட்பட்ட உயர்ந்தபட்ச உத்திரவாதத்தையும் மிகச் சாத்தியமான அடித்தளத்தையும் மாத்திரமே சுயநிர்ணய உரிமை கொண்டிருக்கிறது. நாளை (இந்த நாள் இன்னும் பத்தாயிரம் வருடங்கள் கழித்தும் வரலாம்) முழு உலக சமூகங்களும் ஒன்றிணைந்து உலக தேசியம் ஒன்று உருவாகும் காலம் வரை தேசிய முரண்பாடும் தேசிய ஒடுக்குமுறையும் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமும் இருக்கவே செய்யும். இக்காலகட்டம் முழுவதும் சுயநிர்ணய உரிமை ஒரு முற்போக்கு பாத்திரத்தையே வகிக்கும்.

சுயநிர்ணய உரிமையானது தன்னகத்தே புரட்சிகளையும் போராட்டங்களையும் தோற்றுவிக்கக் கூடிய ஆற்றல் மிக்க வித்துக்களைக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை மறைக்க இயலாது. அதற்காக அதனை ஒரு பயங்கரவாதக் கோரிக்கையாக எவரும் முத்திரை குத்திவிட முடியாது. சிறு தேசிய சமூகங்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தி அவர்களது குரலுக்கு வலிமை சேர்க்கும் ஓர் அடிப்படையை இவ்வுரிமை வழங்குகிறது. மறுபுறத்தில் ஒரு தேசிய சமூகத்தின் உரிமையை மற்றொன்று மீறாமல் பரஸ்பர நல்லெண்ணம், சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் தேசியங்களுக்கிடையில் உளப்பூர்வமான ஐக்கியம்



படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுவதற்கு இவ்வுரிமை மாத்திரமே வலிகோலுகிறது.

இதனாற்றான் 1998 நவம்பர் மாதம் 21ந் திகதி முதல் 27ந் திகதி வரை யுனெஸ்கோவினால் பாசிலோனா (Barcelona-spain) நகரில் சுயநிர்ணய உரிமை தொடர்பாக நடத்தப்பட்ட சர்வதேச நிபுணர்களின் மாநாடு விரிவான விவாதத்தின் பின்னர் சுயநிர்ணய உரிமை, தேசியங்களைப் பிளவுபடுத்துவதற்குப் பதிலாக தேசியங்களுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஓர் அடிப்படையை நல்கி சச்சரவுகள் ஏற்படுவதைத் தடுக்க உதவுகிறது என்ற முடிவுக்கு வந்தது (UNESCO CENTRE ,1999 ).

00000



படிப்பகம்

www.padippakam.com

தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய உட்கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிய புதிய வடிவிலான சமஷ்டிமுறை ஒன்று மாற்றீடாக அமைந்து இனிமேல் ஏற்படப்போகும் இழப்புகளை தவிர்க்குமானால் அதனை மனிதாபிமானமுள்ள எவராலும் எதிர்க்க முடியாது. தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினைக்கு பிரிவினை ஒன்றுதான் தீர்வு என்பதல்ல. ஆனால் இதுவரை கொடுக்கப்பட்ட விலையை ஈடுசெய்யக் கூடிய திருப்திகரமான வடிவத்தை அது கொண்டிருக்க வேண்டும்.

## 5.

# விடுதலைப்புலிகளின் உள்ளக சுயநிர்ணய உரிமை தொடர்பான நிலைப்பாடு — ஒரு பார்வை.

விடுதலைப்புலிகள் முதற்தடவையாக உள்ளக சுயநிர்ணய உரிமைக்குட்பட்ட தீர்வு ஒன்றினைக் காணத்தயாராக இருப்பதாகவும் சமஷ்டி பற்றி பரிசீலனை செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வல்லரசுகளின் முகாம் இரண்டாகப் பிளவுபட்டு பனிப்போர் நடைபெற்ற காலத்தில் இருந்த சர்வதேச சூழல் இப்போது வெகுவாக மாற்றமடைந்துள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகள் அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகளின் ஆதிக்கத்தை இன்று ஏற்றுக் கொண்டிருக்கின்றன. உலகமயமாக்கல் என்ற பெயரில் அவர்களின் பொருளாதாரச் சந்தை விரிவடைந்து செல்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



குறிப்பாக, 2001 செப்டம்பர் 11ந் திகதி உலக வர்த்தக மையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் அமெரிக்கா, சர்வதேச சூழலை தனக்கு சாதகமான முறையிலே மாற்றியமைத்துக் கொண்டுள்ளது.

சோவியத் யூனியன் சிதைவடைய முன்னர் தென் ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் கரம் இராணுவரீதியில் மேலோங்க வில்லை. அதுவரை இந்தியா, சோவியத் யூனியனின் ஆதரவோடு தனிப்பெரும் பிராந்திய வல்லரசாகத் திகழ்ந்து வந்தது.

ஆனால் தற்போது உருவாகியுள்ள சூழலைப் பயன்படுத்திக் கொண்டு இப்பிராந்தியத்தில் காலூன்ற அமெரிக்கா முயல்கிறது. இப்பிராந்தியத்தில் புவியியல் ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை மீது அதன் கவனம் மீண்டும் திரும்பியுள்ளது. அதற்கு இலங்கையில் கால் பதிக்க ஒரு காரணம் தேவை. வழமை போல உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவது என்ற போர்வையில் அல்லது சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் அது இந்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகக் களத்தில் இறங்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்துவது எனக் கூறிக்கொண்டு ரணிலுக்கு ஆதரவளிப்பது அல்லது சமாதானத்தை ஏற்படுத்துவது எனக் கூறிக்கொண்டு இருதரப்பையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தான் அதன் நோக்கம்; இதில் எதையும் செய்ய அமெரிக்கா தயாராகவுள்ளது. ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் மற்றொரு நாடு தலையிடக் கூடா தென்ற ஐ.நா. கொள்கை யெல்லாம் - நாடுகளின் சுயநிர்ணய உரிமையெல்லாம் - சொந்த நலன் என்று வரும்போது அதற்கு ஒரு பொருட்டே அல்ல. இந்த நிலைமையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. சந்திரிக்காவின் கரத்தைப் பலப்படுத்தி அதன் மூலம் தனது நிலை-யைக் காப்பாற்றிக் கொள்ள அது எத்தனிக்கிறது. எனவே இலங்கையின் அரசியல் இன்று வல்லரசுகளின் சதுரங்க ஆட்டத்துக்குள் முற்றாக இழுத்து வரப்பட்டுள்ளது.

இப்பின்னணியில், மாறியுள்ள சர்வதேச, பிராந்திய, சூழலுக்கேற்ப தனது இராஜதந்திர வியூகத்தை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விடுதலைப்புலிகள் சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையை விட்டு மெல்ல நழுவிச் செல்கிறார்களா அல்லது நிலைமையைப் புரிந்து கொண்டு காயை சரியான திசையில் நகர்த்துகிறார்களா? இதுதான் இன்றைய கேள்வியாகும்.



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் புலிகள் தற்போது உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றி கூறுவதன் சாராம்சம்:, பிரிந்து செல்லும் உரிமை எமக்குண்டு. அதனை நாம் பிரயோகிக்காமல் இருக்க சம்மதிக்க வேண்டுமானால் உள்ளகத்தில் - அதாவது அரசின் எல்லைக்குள் - திருப்திகரமான தனி நாட்டுக் கோரிக்கையை மாற்றீடு செய்யக்கூடிய தீர்வு ஒன்றை அரசு வழங்க வேண்டும். அது சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் என்பதாக இருந்தால் அதனை ஒரு சரியான இராஜதந்திரம் எனக்கொள்ளலாம்.

இதற்கு ஒரு படி மேலே போய் சர்வதேச அழுத்தத்தை இலங்கை அரசின்மீது திசைதிருப்பி, தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினைக்குத் தீர்வாக புதிய வடிவிலான சமஷ்டி முறை ஒன்றை மாற்றீடாக அமைத்துக் கொள்வதில் விடுதலைப் புலிகள் வெற்றி பெறுவார்களேயானால் - அதற்கான சாத்தியம் மிக குறைவாக இருந்தபோதும் - அது ஒரு வரலாற்றுச் சாதனை யாகவே இருக்கும்.

தமிழ் மக்கள் கேட்கும் எதையும் - மாவட்ட சபையைக் கூட - சிங்கள பெருந்தேசியவாத அரசுகள் வழங்கத் தயா ராக இருக்கவில்லை. சில சிங்களத் தலைவர்கள் சில நீதியான தீர்வுகளை முன் வழங்க சிற்சில சூழல்களின் நிர்ப்பந்தம் காரணமாக முன்வந்த போது எதிர்க்கட்சிகள் பெருந்தேசிய வாத பேரியக்கங்களை நடத்தி அவற்றை முறியடித்த வரலாறு இலங்கைக்குண்டு. பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டபோது ஜே.ஆர். தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி கண்டி தலதா மாளிகைக்கு கொழும்பிலிருந்து ஊர்வலமாக செல்ல முயன்றது. கம்பஹாவில் வைத்து இவ்வூர்வலம் அடித்துக் கலைக்கப்பட்டாலும் அவ்வொப்பந்தம் கைவிடப்பட்டது. பின்னர் டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தான போது விகாரமாதேவி பூங்காவில் சிறிமா தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு அவ்வொப்பந்தமும் கைவிடப்பட்டது. இந்தியாவின் தலையீட்டால் மாகாணசபை முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது ஐக்கிய தேசியக்கட்சி அரசிலிருந்து கொண்டே அதன் பிரதமர் பிரேமதாச அதனை எதிர்த்தார். அதற்கு எதிராக ஜே.வி.பி தெற்கில் தனது இரண்டாவது கிளர்ச்சியை நடத்தியது. சந்திரிகா தனது வேறு சில அரசியல் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக தமிழ் மக்களுக்கு ஓரளவு நியாயம் வழங்கக்கூடிய அரசியல் யாப்புத் திருத்தமூலத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த போது இதே ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி கடும் எதிர்ப்பைக் காட்டியது.



படிப்பகம்

www.padippakam.com



எனவே தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய உட்கூறுகள் அனைத்தையும் உள்ளடக்கிய புதிய வடிவிலான சமஷ்டிமுறை ஒன்று மாற்றீடாக அமைந்து இனிமேல் ஏற்படப்போகும் இழப்புகளை தவிர்க்குமானால் அதனை மனிதாபிமானமுள்ள எவராலும் எதிர்க்க முடியாது. தேசிய ஒடுக்குமுறைப் பிரச்சினைக்கு பிரிவினை ஒன்றுதான் தீர்வு என்பதல்ல. ஆனால் இதுவரை கொடுக்கப்பட்ட விலையை ஈடுசெய்யயக் கூடிய திருப்திகரமான வடிவத்தை அது கொண்டிருக்க வேண்டும்.

அதேசமயம் ஐ.நா.வின் 1960-ம் ஆண்டு தீர்மானம் கூறுவதைப் போல ஒரு அரசுக்குள் வாழும் தேசியங்களுக்கு வெளியக சுயநிர்ணய உரிமை - அதாவது பிரிந்து செல்லும் உரிமை கிடையாது என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அல்லது அன்டனியோ கசாசி முன்வைத்த உள்ளக சுயநிர்ணய உரிமையை அதே ரீதியில் அங்கீகரித்துக் கொண்டு சிங்களப் பெருந்தேசிய வாதத்தின் மேலாதிக்கத்திற்கு அடிபணிந்த ஒரு தீர்வை, புலிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்றால் அது முற்றுமுழுதான சரணாகதி என்றே அர்த்தப்படும்.

இதுவரையிலான இராஜதந்திர சதுரங்க ஆட்டத்தில் விடுதலைப் புலிகள் சரியானமுறையில் காய்களை நகர்த்தியுள்ளார்கள் என்றே கூறவேண்டும். எதிர்காலத்தில் போக்குகள் எந்த திசையை நோக்கி நகரப்போகின்றன என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## சமஷ்டி முறையில் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள்.

இன்று சமஷ்டி முறை பற்றி முன்னெப்போதும் இல்லாதளவுக்கு பரவலாகப் பேசப்படுகிறது. உலகில் இதுவரை முன்வைக்கப் பட்ட எந்த சமஷ்டி முறையும் முழுமையான தீர்வை, தேசியப் பிரச்சினையில், கொண்டுவராத போதும் கூட இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளில் சமஷ்டி முறையும் ஒன்று என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் சர்வதேச அனுபவங்களைக் கருத்தில் கொண்டு புதுவகையான சமஷ்டி முறை ஒன்றைப்பற்றி ஆராயலாம். அதில் கவனம் செலுத்த வேண்டிய பிரதான விடயங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



படிப்பகம்

www.padippakam.com



பழைய கொலனித்துவமுறை வீழ்ச்சியடைந்தபோது பல புதிய நாடுகள் உலக அரங்கில் உதயமாகின. இந்நாடுகளின் எல்லைகள் விஞ்ஞானரீதியாகவோ தேசியங்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்திலோ சமூக பொருளாதார கலாச்சார அம்சங்களை கருத்தில் கொண்டதாகவோ அமையவில்லை. அதன் எல்லைகள் அரசியல் நோக்கத்துடனும் கொலனித்துவ வாதிகளின் நிர்வாக வசதிக்கேற்பவும் வரையப்பட்டவை. அநேக இடங்களில் அவை பிரித்தாளும் தந்திரத்தின் கருவிகளாக அமைந்தன. பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் தமது பெருந்தேசிய மேலாதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கே நிர்வாக எல்லைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், மீள்வரைவு செய்திருக்கிறார்கள். உதாரணமாக 1833-ல் கோல்புருக் - கேமரான் சீர்திருத்தம் இலங்கையை முதன்முறையாக ஐந்து மாகாணங்களாகப் பிரித்தது. அப்போது அதன் நோக்கம் கண்டி இராச்சியத்தின் பலத்தைச் சீர்குலைப்பதாகும். அதன் பின்னர் 1886 ஆண்டு அதே நோக்கத்திற்காக மத்திய மாகாணத்திலிருந்து பதுளைப் பிரதேசத்தைப் பிரித்து ஊவா மாகாணத்தை அமைத்தது. வடக்கு மாகாணமும் வடமத்திய மாகாணமும் முன்னர் ஒரே மாகாணமாகவே இருந்தது. பிற்காலத்திலேயே அது பிரிக்கப்பட்டது. 1889-ல் தான் சப்ரகமுவ மாகாணம் உருவாக்கப்பட்டது. வன்னி மாவட்டத்தில் தமிழ் மக்களின் இனச் செறிவை மாற்றியமைக்கும் விதத்தில் சிங்களக் குடியேற்றங்களை அமைத்து நிர்வாக மாவட்ட எல்லைகளை எவ்வாறெல்லாம் மாற்றியமைத்தனர் என்பதை விளக்க வேண்டியதில்லை. மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை செயற்கையான முறையில் துண்டாடி நிர்வாக மாவட்ட எல்லைகளை வரைந்து எப்படியெல்லாம் அவர்களது எண்ணிக்கைப் பலத்தைச் சிதறடித்து வருகிறார்கள் என்பது பற்றிய உண்மைகள் வெளியாகுமானால் அது அதிர்ச்சிகரமான செய்தியாகவே இருக்கும். எனவே நிர்வாக மாவட்ட எல்லைகளை தேசிய பிரச்சினையைத் தீர்த்து பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் விதத்தில் மீள்வரைவு செய்வதே சமஷ்டி முறையின் தொடக்கப் புள்ளியாக இருக்கும். நியாயமான முறையில் இவ் நிர்வாக எல்லைகள் வரையப்பட்டாலே அங்கு வாழும் தேசியங்கள் அனைத்திற்கும் நீதி கிடைப்பதில் பாதித் தூரத்தையாவது கடக்கலாம்

இதனையடுத்து சமஷ்டி முறையில் நில உரிமை, நிதி மூல வளங்களைக் கையாளும் உரிமை, தமது பாதுகாப்பை தாமே உறுதி செய்து கொள்ளும் உரிமை, தமது மொழியில் நிர்வாகம் நடத்தும் உரிமை என்பன தொடர்பான தெளிவான கொள்கை வகுக்கப்பட்டு அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



அடுத்து இலங்கை சிங்கள பௌத்த நாடு என அரசியல் யாப்பில் உறுதி செய்யப்பட்டிருப்பதை மாற்றி மத சார்பற்ற, மொழி சம அந்தஸ்து உடைய நாடாக ஏற்று பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் சமஷ்டி முறை அமைந்தால் அது அர்த்த முள்ளதாக இருக்கும்.

00000



படிப்பகம்

www.padippakam.com

# விளக்கக் குறிப்புகள்

1. கார்ல் கவுட்ஸ்கி ( **Karl Kautsky**)
(16 **October** 1854 - 17 **October** 1938).

மார்க்ஸிசத்தின் மூலவர்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகிய இருவரும் மறைந்த பின்னர் அவர்களது தத்துவார்த்த வாரிசாக கருதப்பட்டவர் கார்ல் கவுட்ஸ்கி. இவர் பிரேக் நகரில் யூத பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவரது பெற்றோர்கள் அருமையான கலைஞர்கள். தந்தை ஒரு ஓவியர். தாயார் ஒரு நாவலாசிரியரும் நடிகையும் ஆவார். இவர் வீயென்னா பல்கலைகழகத்தில் படிக்கும் போது 1875-ல் ஆஸ்த்ரிய சமூக ஜனநாயக கட்சியில் இணைந்தார். இக்காலப் பகுதியில் பத்திரிகை ஆசிரியராக பிரகாசித்த இவர் 1883-ல் டை நியூ ஸைட் (DIE NEVE ZEIT) என்னும் சஞ்சிகையை நிறுவி அதன் பிரதம ஆசிரியராக பணியாற்றினார். இச்சஞ்சிகை ஜெர்மனியில் வெளியான போதும் சர்வதேச தொழிலாள வர்க்க இயக்கத்தின் தத்துவார்த்த வெளியீடாக இது கருதப்பட்டது. 1885 முதல் 1890 வரை இவர் கார்ல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகியோருடன் இணைந்து இலண்டனில் இருந்து செயல்பட்டார். பின்னர் வீயென்னாவுக்கு திரும்பி மார்க்ஸிச கருத்துக்களை சர்வதேச அரங்கில் பரப்பி வந்தார். 1889-ல் உலகின் பல பாகங்களிலிருந்து சோசலிச கட்சிகள் ஒன்றுகூடி இரண்டாவது கம்யூனிச அகிலத்தை நிறுவிய போது அதன் முக்கிய தலைவர்களில் ஒருவராக இவர் திகழ்ந்தார். 1896-ல் நிகழ்ந்த இவ்விரண்டாம் அகிலத்தின் மாநாட்டில் இவர் தேசியங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியதுடன் உலக அரங்கில் ஒரு விவாதத்தையும் தோற்றுவித்தார். கார்ல் மார்க்ஸ் எழுதிய உபரிமதிப்பின் தத்துவம் என்ற நூலை தொகுத்து வெளியிட்டவரும் இவரேயாகும். இரண்டாம் அகிலத்தில் எட்வர்ட் பென்ஸ்டைன் ( Edward Bernstein ) திரிபுவாத கருத்துகளை முன்வைத்த போது அதற்கு எதிரான கருத்துப் போராட்டத் திற்கு இவரே தலைமை தாங்கினார். முதலாம் உலக மகா யுத்தம் மூளும் வரைக்கும் தேசியங்களின் சுய நிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு எதிராகவும் உறுதியாக குரல் கொடுத்துவந்த இவர் 1914-ல் யுத்தம் மூண்டதும் ஜெர்மனிக்கு ஆதரவளிக்கத் தொடங்கினார். எனவே இவருக்கு எதிராக லெனின் தலைமையில் பெரும் கருத்து மோதல் தொடங்கியது. இதன் பயனாக 1917-ல் அவர் நிறுவிய



படிப்பகம்

www.padippakam.com



பத்திரிகையில் இருந்தும் வெளியேற்றப்பட்டார். அதன்பின்னர் சர்வதேச அரங்கில் அவரது செல்வாக்கு குறைய ஆரம்பித்தது.

2. இரண்டாவது கம்யூனிச அகிலம். (Second International)

உலக தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற முழக்கத்தை முன்வைத்து உலகெங்கும் உள்ள தொழிலாளர் வர்க்க அமைப்புகளை ஒரு குடையின்கீழ் கொண்டுவர கார்ல் மார்க்ஸ் முயற்சி செய்தார். இவரது முயற்சியின் பயனாக 1864ம் ஆண்டு இலண்டன் நகரில் சர்வதேச உழைப்பாளர் சங்கம் ( International Workingmen's Association) உருவாக்கப்பட்டது. இது பிற்காலத்தில் முதலாவது கம்யூனிச அகிலம் என அழைக்கப் பட்டது. இவ்வமைப்பிற்குள் கார்ல் மார்க்சுக்கும் அராஜகவாதத்தை பிரதிநித்துவப் படுத்திய மிகாயில் பாகுனிக்கும் ( Mikhail Bakunin ) இடையே இடம்பெற்ற கடும் கருத்து மோதல்கள் இவ் வமைப்பை பலவீனப்படுத்தியது. ஆதலால் 1876-ல் அது செயலி ழந்து போனது. சிறிது காலத்தின் பின்னர் உலக தொழிலாள வர்க்க அமைப்புகளின் ஒன்றியம் ஒன்றின் தேவை வெகுவாக உணரப் பட்டது. இதற்கான முயற்சிக்கு அப்போது மார்க்ஸ் உயி-ரோடு இல்லாத போதும் ஏங்கெல்ஸின் ஒத்துழைப்பு கிடைத்து வந்தது. 1889-ல் இரண்டாவது சர்வதேச அகிலம் உருவாக்கப் பட்டது. அதன் தலைமையகம் பெல்ஜியத்தில் இயங்கியது. அதன் தலைவராக அமில் வென்டர்வால்ட் (Emile Vendervelde) தெரிவு செய்யப்பட்டார். இதன் முக்கிய தலைவர்களாக பிரடெரிக் ஏங்கெல்ஸ், ஆகஸ்ட் பிபெல் (August Bebel), கார்ல் கவுட்ஸ்கி, பிளாக்கானோவ் (Plekhanov), லெனின் ஆகியோர் திகழ்ந்தனர். இவ்விரண்டாம் அகிலத்தின் சர்வதேச காங்கிரஸ் இலண்டனில் செயின்ட் மார்டின் மண்டபத்தில் 1896 ஜீலை 27ம் திகதி முதல் ஆகஸ்ட் முதலாம் திகதி வரை நடைபெற்ற போதே கார்ல் கவுட்ஸ்கியால் தேசியங்களின் சுய நிர்ணய உரிமை தொடர்பான தீர்மானம் முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. 1914-ல் முதலாம் உலக யுத்தம் வெடித்த போது பல்வேறு நாடுகளைச் சார்ந்த சமூக ஜனநாயக கட்சிகள் தத்தம் நாடுகள் போரில் ஈடுபடுவதை நாட்டுப்பற்று என்ற பெயரில் ஆதரிக்கத் தொடங்கிய போது இந்த இரண்டாவது அகிலமும் செயலிழந்தது.



படிப்பகம்

www.padippakam.com



3. விளாதிமிர் இலியீச் லெனின் ( V.I. Lenin ) (1870 –1924).

மார்க்ஸ் ஏங்கெலஸ் ஆகிய இருவருக்கும் அடுத்தபடியாக மார்க்சியவாதிகளால் பெரிதும் மதிக்கப்படுகிற லெனினுடைய உண்மையான பெயர் விளாதிமிர் இலியிச் உலியானவ் (Vladimir Ilyich Ulyanov) ஆகும். இரஷ்யாவில் பாயும் லேனா என்ற பெயர் கொண்ட நதியின் பெயரை மையமாகக் கொண்டு லெனின் என்ற புனைப்பெயரில் பிற்காலத்தில் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு உலகத் தலைவர்களில் ஒருவராக உயர்ந்தார். இவரது தந்தை ஒரு கல்வி இலாகா அதிகாரி ஆவார். இவரது அண்ணனான அலெக்ஸாண்டர் ஐ உலியானவ் மீது இவருக்கு அளவற்ற பாசம் இருந்தது. இரஷ்யாவை ஆட்சி செய்த ஜார் மன்னர் வம்சத்தில் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராக கொதித்தெழுந்த வீர இளைஞர்களில் இவரது அண்ணனும் ஒருவர். இவர் மூலமாகத் தான் லெனின் மார்க்ஸிய கருத்துக்களோடு பரிச்சயமானார். ஆனால் அலெக்ஸாண்டர் சமூகத்தை மாற்றுவதற்காக தேர்ந்தெடுத்த வழி அவரைத் தனி நபர் வன்செயல் பாதைக்கு இழுத்துச் சென்றது. மன்னர் பரம்பரையைச் சார்ந்த மூன் றாவது அலெக்ஸாண்டரை கொலை செய்வதற்கு முயற்சி செய்து கைதான இவரது அண்ணனுக்கு 1887-ல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவரது இந்த இலட்சிய மரணம்தான் படிப்பில் சிறந்த மாணவராக திகழ்ந்த லெனினை புரட்சிகர பாதைக்கு இழுத்து வந்தது. அதன் பின்னர் மார்க்ஸியத்தை முறைப்படி கற்கத் தொடங்கினார். இரஷ்யாவின் சூழலுக்கேற்ப புரட்சிகரமான கட்டுப்பாடான கட்சி ஒன்றை கட்டியெழுப்புவதில் அவர் வெற்றிகண்டார். புரட்சிகரமான இறுக்கமான கட்சி ஒன்றை கட்டியெழுப்பும் கருத்துப் போராட்டத்தில் சோசலிச கருத்தை கொண்டிருந்த தலைவர்கள் போல்ஷ்விக், மென்ஷ்விக் என இரண்டு அணிகளாகப் பிரிந்தனர். போல்ஷ்விக் என்ற இரஷ்ய பதம் பெரும்பான்மை என்ற அர்த்தத்தையும் மென்ஷ்விக் என்ற பதம் சிறுபான்மை என்ற அர்த்தத்தையும் குறிக்கிறது. இதில் புரட்சிகரமான இறுக்கமான கட்டுப்பாடு மிக்க தொழிலாள வர்க்க தலைமையிலான கட்சி ஒன்றை உருவாக்காமல் புரட்சிக்கு தலை மை தாங்குவது சாத்தியமில்லை என்ற கருத்தை கொண்டிருந்த போல்ஷ்விக் அணியினருக்கு லெனின் தலைமை தாங்கினார்.

இரஷ்யா முழவதும் ஆங்காங்கே சிதறிக் கிடந்த சிறு சிறு சோசலிசவாத குழுக்களை ஒருமித்த கருத்தின் கீழ் எவ்வாறு ஒன்று திரட்டுவது என்று சிந்தித்த லெனின் இந்நோக்கத்தை மனதிற் கொண்டு "இஸ்க்ரா" (தீப்பொறி) என்ற பெயரில் தத்துவார்த்த பத்திரிகை ஒன்றை நடத்தினார். இப்பத்திரிகை மூலமாக அணிதிரட்டப்பட்ட பல்வேறு அணிகள் நடத்திய மகாநாட்டிலேயே



படிப்பகம்

www.padippakam.com



போல்ஷ்விக், மென்ஷ்விக் என்ற இப்பிளவு ஏற்பட்டது. மார்க்ஸிய மூலவர்களான மார்க்சும் ஏங்கெல்சும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தத்துவத்தை உருவாக்கி தந்திருந்தனர். ஆனால் அவர்கள் முன்வைத்த தத்துவத்தின் அடிப்படையில் சோசலிச புரட்சி ஒன்றைக் காணும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. வரலாற்றில் முதல் தடலையாக வெற்றி பெற்ற சோசலிச புரட்சி ஒன்றுக்கு தலைமை தாங்கிய பெருமை லெனினையே சாரும்.

1917-ல் அக்டோபர் மாதம் இரஷ்யாவில் நடைபெற்ற சோசலிச புரட்சிக்கு இவரே தலைமை தாங்கினார். அங்கு உருவான புரட்சிகர அரசாங்கத்தின் முதலாவது தலைவராகவும் இவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு மார்க்சிய தத்துவவியலாளன் என்ற முறையில் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய இவரது நிலைப்பாடே மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆகவே தான் ஏகாதிபத்திய யுகத்தின் மார்க்சிசமே லெனினிசம் என மார்க்சியவாதிகளால் கூறப்படுகிறது. அத்துடன் ஒரு புரட்சிகரமான கட்சியை கட்டுப்பாடான முறையில் எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பான அவரது வழிகாட்டலும் தொழிலாள வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்குமிடையான உறவு பற்றிய அவரது கருத்தும் தொழிலாள வர்க்க தலைமையில் நடத்தப்படும் புரட்சி ஒன்றின் மூலமே சோசலிசத்தை உருவாக்க முடியும் என்ற அவரது நிலைப்பாடும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் சோசலிச சமுதாயத்தை உருவாக்க முடியாது என்ற அவரது கொள்கையும், காலனிய மக்களினதும் தேசியங்களினதும் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை சோசலிச புரட்சியுடன் இணைக்க முடியும் என்ற கோட்பாடும் லெனினிசத்தின் பிரதான அம்சங்களாக கருதப்படுகின்றன. அக்டோபர் புரட்சி நடைபெற்ற ஒரு வருடத்திற்குள் அதாவது 1918 ஆகஸ்ட் 30ம் திகதி பான்யா கப்லான் (Fanya Kaplan) என்ற பெண் பயங்கரவாதியால் லெனின் கழுத்திலும் தோள்பட்டையிலும் சுடப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பினார். ஆயினும் அதன் பாதிப்பிலிருந்து அவர் முற்றாக விடுபடவில்லை. சிறிதுகாலம் உடல் நலம் தேறி இரஷ்யாவில் சோசலிச நிர்மாணத்தை கட்டியெழுப்புவதற்கு தலைமை கொடுத்தாலும் 1924 ஜனவரி 21ம் திகதி திடீரென காலமானார். அவர் உலகத் தொழிலாளர்களதும் ஒடுக்கப்பட்ட தேசியங்களினதும் ஒப்பற்ற தலைவராக இன்றும் கருதப்படுகிறார்.

### 4. ஜோசப் ஸ்டாலின் (Joseph Stalin) (1879 – 1953).

இரஷ்யாவின் ஜார்ஜிய மாநிலத்தில் செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகனாக 21-12-1879-ல் பிறந்த இவரது



படிப்பகம்

www.padippakam.com



உண்மையான பெயர் அயோசிப் விசாரினோவிச் ஸ்குவாஸ்விலி (Losif Vissarionovich Dzhugashvili). தனது ஆரம்ப கல்வியை கோரி என்ற ஊரிலுள்ள கிறிஸ்துவ பாடசாலை ஒன்றில் தொடங்கினார். இங்கு இவர் சிறந்த மாணவனாக திகழ்ந்ததால் கல்வி ஊக்கத் தொகைக்கான தேர்வில் சித்தி எய்தி டிப்லிஸ் நகரிலுள்ள கிறிஸ்துவ மதவாத பாடசாலைக்கு மேல்படிப்புக்காக அனுப்பப் பட்டார். அங்கு ஜார்ஜிய தேசியவாதத்தையும் சோசலிசத்தையும் முன் வைத்து இயங்கிய இரஷ்ய குழுக்களில் ஒன்றான மிசாமே தாசி என்ற இயக்கத்தில் இணைந்து செயல்பட்டதினால் பட்டப்படிப்பை முடிக்கும் தருவாயில் பள்ளியை விட்டு விலக்கப்பட்டார். அதன் பின்னர் பாடம் படிப்பிப்பவராகவும் பின்னர் எழுதுவினைஞராகவும் பணியாற்றினார்.

1901-ல் சோசலிச ஜனநாயக கட்சியில் முழுநேர ஊழியராக இணைந்தார். 1905-ல் இரஷ்யாவில் இடம்பெற்ற தோல்வியடைந்த புரட்சியில் இணைந்து தீவிர பங்காற்றியதன் மூலம் காவலாளிகளின் கவனத்தை ஈர்த்த அவர் கைது செய்யப்பட்டு சைபீரியாவில் மூன்று மாதம் சிறை வைக்கப்பட்டார். 1905-ல் டிசம்பர் மாதம் பின்லாந்தில் நடைபெற்ற போல்ஷ்விக்குகளின் தேசிய மாநாட்டில்தான் இவர் முதல் தடவை யாக லெனினைச் சந்தித்தார். இருவரும் ஏற்கனவே அறிந்திருந்த போதும் இச்சந்திப்பின் பின்னர் இவர்கள் இருவருக்குமிடையிலான நெருக்கம் அதிகரித்தது. கட்சியின் இரகசிய பணிகளில் தனது திறமையை வெளிப்படுத்திய ஸ்டாலின் லெனினின் அபிமானத்தைப் பெற்றார். பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒவ்வொரு தடவையும் திகிலூட்டும் வகையில் தப்பி வந்து கட்சியின் இரகசிய வேலையில் ஈடுபட்ட அவரது திறமை கட்சியின் உள்வட்டத்தில் அவரை ஒரு வீர புருஷராக சித்தரித்துக் காட்டியது. 1912-ல் கிராக்கோ நகரில் இரகசியமான முறையில் நடைபெற்ற கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு வீயென்னா நகருக்குச் சென்ற ஸ்டாலின் அங்கு லெனினின் நேரடி வழிகாட்டலின் கீழ் உலகப் பிரசித்தி பெற்ற ***மார்க்சிசமும் தேசியப் பிரச்சினையும்*** என்ற நூலை 1913-ல் எழுதினார். ஏற்கனவே டிப்லிஸ் நகரிலிருந்து வெளியான கட்சி பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்த ஸ்டாலினின் எழுத் தாற்றல் இந்நூலில் வெளிப்பட்டது. 1917 அக்டோபர் புரட்சியில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட ஸ்டாலின், லெனின் தலைமையில் அமைக்கப்பட்ட தொழிலாள வர்க்க அரசாங்கத்தில் தேசியங்களின் பிரச்சினைகளை கையாளுவதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்ட அமைச்சின் கொமசாரிஸாக (அமைச்சர்) நியமிக்கப்பட்டார். அதுவரை தேசியங்களின் சிறைச்சாலை என்று வர்ணிக்கப் பட்ட இரஷ்யாவில் ஜனநாயக ரீதியில் தேசியப் பிரச்சினையை



படிப்பகம்

www.padippakam.com



தீர்ப்பதற்கு இவரது தலைமையிலான அமைச்சே செயல் திட்டங்களை வரைந்து அமுல்படுத்தியது. இப்பதவியை இவர் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வகித்தார்.

கட்சிக்குள் இவருக்கும் லியோ ட்ராஸ்கிக்கும் இடையே தொடர்ச்சியான முரண்பாடுகள் நிலவி வந்தன. லெனினின் அகால மரணத்தின் பின் போட்டி நிலவிய போதும் லெனினின் இடத்திற்கு கட்சியால் இவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். படிப்படியாக ட்ராஸ்கியின் அதிகாரம் குறைக்கப்பட்டு 1927-ல் அல்மா ஆட்டா சிறையில் தடுத்து வைக்கப்பட்டார். 1929-ல் அவர் சோவியத் யூனியனை விட்டு நாடு கடத்தப்பட்டார். அதன் பின்னர் ஸ்டாலின் சர்வ அதிகாரம் கொண்ட தனி பெரும் தலைவராக செயல்பட்டார். இவர் காலத்தில் பின் தங்கிய இரஷ்ய பொருளாதாரத்தை நவீனமயப்படுத்து வதற்கு இவர் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகள் அதன் பக்க விளைவாக சமூக பிரச்சினைகளை தோற்றுவித்தன. அதற்கு எதிரான குரல்களும் எழுச்சிகளும் ஈவீரக்கமின்றி நசுக்கப்பட்டன. எனினும் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது தனது முழு பலத்தோடு இரஷ்யாவின் மீது படையெடுத்த ஹிட்லரின் நாசிஸ படைகளிடமிருந்து அந்நாட்டை பாதுகாத்த பெருமை இவரையே சாரும். அதுமாத்திரம் அல்ல நாசிஸத்திற்கெதிரான போரில் பெருமளவு தியாகம் செய்து, சிறப்பான நவீன யுத்த தந்திரங்களைப் பாவித்து அதன் முதகெலும்பை சோவியத் படைகள் முறியடித்த பின்னரே ஏனைய மேற்கத்தைய நாடுகள் ஹிட்லருக் கெதிரான இரண்டாவது யுத்த முனையை திறக்கத் துணிந்தன.

1934-ல் ஸ்டாலினை கொலை செய்துவிட்டு கட்சியின் மத்திய குழுத் தலைவரான செர்ஜி கிரோவ் (Sergei Kirov) என்பவரை அவருடைய இடத்திற்கு கொண்டு வருவதற்கான சதி முயற்சி ஒன்று அம்பலமானதையடுத்து அதே வருடம் டிசம்பர் மாதம் கிரோவ் கொலை செய்யப்பட்டார். அதன்பின்னர் ஸ்டாலின் அனைவரையும் சந்தேகப்படத் தொடங்கினார். சகிப்புத்தன்மையற்றவராக மாறினார். கட்சியிலுள்ள பலருக்கும் மரணதண்டனை வழங்கப் பட்டது. பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் சிறைபிடிக்கப்பட்டு கட்டாய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். 1935 முதல் 1939 வரை இத்தகைய பாரதூரமான தவறுகள் உச்ச கட்டத்தை அடைந்தன. ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்ட தேசியங்களின் இரட்சகனாகக் கருதப்பட்ட ஸ்டாலின் பிற்காலத்தில் தான் முன் வைத்த கொள்கைகளுக்கு முரணாக மாபெரும் தவறு களை இழைத்தார். அவர் உயிரோடு இருந்தவரை அவரை நேரடியாக விமர்சிக்கும் துணிவு கட்சியில் யாருக்கும் வரவில்லை. கட்சியில் உள்ள எல்லோரும் அவரை துதிபாடத் தொடங்



படிப்பகம்

www.padippakam.com



கினர். ஸ்டாலின் மீதான தனி நபர் வழிபாடு உச்சகட்டத்தை அடைந்தது. அவரது இறுதிகாலத்தில் அவரை துதிபாடிக் கொண்டு கட்சியின் தலைமை பீடத்திற்கு வந்தவர் தான் நிக்கிட்டா குருசேவ் (Nikita Khrushchev). 1953 மார்ச் 5ம் திகதி மூளை இரத்த அழுத்தம் காரணமாக ஸ்டாலின் திடீரென மரணம் அடைந்தார். அப்போது குறிப்பாக இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் அவர் இரும்பு மனிதராகவும் உலகத் தலைவர்களில் ஒருவராகவும் பலராலும் போற்றப்பட்டார். இவரது மரணத்தின் பின்னர் பதவிக்கு வந்த குருசேவ் 1956 பிப்ரவரி மாதம் நடைபெற்ற இருபதாவது கட்சி மாநாட்டில் ஸ்டாலினின் கொள்கையை நிராகரித்ததுடன் அதுவரை பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்து ஸ்டாலினின் சடலத்தைக் கூட செஞ்சதுக்கத்திலிருந்து அப்புறப்படுத்தி னார். ஸ்டாலினை கடுமையாக விமர்சிப்பவர்கள் கூட இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது சோவியத் யூனியனை பாதுகாப் பதில் அவர் வகித்த பாத்திரத்தை பாராட்டுகின்றனர்.

### 5. வூட்ரோ வில்சன் (Woodrow Wilson) (1856 – 1924)

1913 முதல் 1921ம் ஆண்டு வரை அமெரிக்காவின் 28வது ஜனாதிபதியாக இருந்த இவர் பிரஸ்பைட்டீரியன் (Presbyterian) மதவாத குடும்பத்தில் பிறந்தவர். இவர் தனது காலம் முழுவதும் மத நம்பிக்கை மிகுந்த மிதவாதியாகவே வாழ்ந்தார். இவர் நியூ ஜெர்ஸி பள்ளியில் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்தார். இவர் படித்த இந்த பாடசாலை பின்னர் பிரின்ஸ்டன் பல்கலைகழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இங்கு அவர் அரசியல் பொருளாதார விரிவுரையாளராக பணியாற்றிய பொழுது பல புத்தகங்களை எழுதி யுள்ளார். அங்கு அனைவரையும் கவர்ந்த இவர் அப்பல்கலை கழகத்தின் தலைவராக 1902-ல் தெரிவு செய்யப்பட்டார். 1910-ல் ஜனநாயகக் கட்சி அவரை நியூஜெர்ஸி மாநில கவர்னருக்கான வேட்பாளராக நிறுத்தியது. அத்தேர்தலில் அவர் அமோக வெற்றி பெற்றதன் மூலம் அமெரிக்காவின் தேசிய அரசியலில் பிரவேசித்தார். "புதிய சுதந்திரம்" என்ற பெயரில் தனது கொள்கைகளை முன்வைத்து பிரபல்யமடைந்தார். 1912-ல் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர் முதலாம் உலக மகா யுத்தத்தின் போது கடும் சவால் களை சந்திக்க வேண்டியிருந்தது.

முதலாம் உலக மகா யுத்தம் மூளாமல் தடுப்பதற்கு இவர் மேற்கொண்ட முயற்சிகள் இவரை உலக அரங்கில் பிரபல்யம் பெறச் செய்தது. இவரது ஆலோசகரான கேர்னல் கவுஸ் என்பவரை



படிப்பகம்

www.padippakam.com



தனது சமாதான சிறப்பு தூதுவராக ஐரோப்பாவுக்கு அனுப்பி பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இப்பேச்சு வார்த்தைகள் யுத்தம் மூளும் சூழ்நிலையை பின் தள்ளுவதில் ஆரம்பத்தில் வெற்றி கண்டாலும் யுத்தம் ஒன்று வெடிப்பதை தடுத்து நிறுத்த முடியவில்லை. யுத்தம் வெடித்தவுடன் அமெரிக்கா யுத்தத்தில் பங்கு கொள்ளாது நடுநிலைமை வகிக்கும் என 1914 ஆகஸ்ட் 19ம் திகதி ஜனாதிபதி வில்சன் பிரகடனப்படுத்தினார். மீண்டும் தனது தூதுவரை ஐரோப்பாவிற்கு அனுப்பி யுத்தத்தை நிறுத்த முயன்றார். எனினும் ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் அமெரிக்க கப்பல்களை தொடர்ச்சியாக தாக்கி அழித்து வந்ததி னால் 1917 ஏப்ரல் 6ம் திகதி அமெரிக்கா யுத்தப்பிரகடனத்தை அறிவித்தது. 1918 நவம்பர் 9ம் திகதி ஜெர்மன் அரசன் இரண்டாம் கெய்சர் வில்ஹெம் பதவியிறக்கப்பட்ட பின்னர் யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தம் முடிவுற்றதும் ஜனாதிபதி வில்சன் சமாதானத் திற்கான 14 அம்ச திட்டத்தை முன் வைத்தார். இத்திட்டம் தேசியங்களின் சுய நிர்ணய உரிமையையும் காலனிகளின் சுதந்திரத்தையும் மையமாகக் கொண்டிருந்தது. ஏற்கனவே அவர் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் காரணமாக உலக சமாதான தூதுவராக உலகெங்கும் உள்ள மிதவாதிகளால் அவர் அப்போது போற்றப்பட்டிருந்தார். யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி வேறு வழியின்றி அவருக்கிருந்த தார்மீக பலத்தின் மீது நம்பிக்கை வைத்தே, நேச நாடுகள் முன்வைத்த நிபந்தனைக்கு கட்டுப்பட்டு சரணடைந்தது. வில்சனின் 14 அம்ச திட்டத்தின் அடிப்படையில் தனக்கு கௌரவமான தீர்வு ஒன்று கிடைக்குமென ஜெர்மனி அப்போது நம்பியது. ஆனால் அவரால் ஜெர்மனிக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை. வில்சன் முன்வைத்த 14 அம்ச திட்டம் அடிப்படையில் பல மாற்றங்களுக்கு உள்ளானது. வெற்றி பெற்ற நேச நாடுகள் பல திருத்தங்களை அதில் திணித்தன. இதன் விளைவாக ஜெர்மனி தனது கொலனி களை இழந்ததுடன் பல கசப்பான, அவமானகரமான, நிபந்தனை களுக்கும் கட்டுப்பட வேண்டியிருந்தது. 1919 ஜனவரி 18ம் திகதி பாரிஸ் நகரில் சமாதான மாநாடு என்ற பெயரில் வல்லரசு களுக்கிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தை ஜூன் 28ம் திகதி வார்சேல்ஸ் ஒப்பந்தத்தில் (Versailles Treaty) ஜெர்மனி கைச்சாத்திட்டதுடன் முடிவுக்கு வந்தது. பிற்காலத்தில் வரலாற்று ஆசிரியர் சிலர் ஜெர்மனி மீது திணிக்கப்பட்ட அவமானகரமான வார்சேல்ஸ் ஒப்பந்தமே பழிவாங்கும் வெறி கொண்ட பாசிஸ ஹிட்லரை தோற்றுவித்தது என விபரித்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால் இவ்வார்சேல்ஸ் ஒப்பந்தத்தை அமெரிக்க செனட் சபை அங்கீகரிக்கவில்லை. அங்கு மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப் பின் போது அது நிராகரிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறாயினும் 1919க்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. எனினும் அவர் இன்றளவும் அமெரிக்காவின் சர்ச்சைக்குரிய மனிதராகவே திகழ்ந்து வருகிறார். சிலர் அவரை அநாவசியமாக அமெரிக்காவை யுத்தத்தில் சிக்க வைத்த தலைவர் என விமர்சிக்கின்றனர். வேறு சிலர் அவரை அமெரிக்காவை யுத்தத்திலிருந்து காப்பாற்றியவர் எனவும் உலக சமாதான தூதுவர் எனவும் விபரிக்கின்றனர். ஆயினும் தேசியங்களினிதும் கொலனிகளதும் சுய நிர்ணய உரிமையை உலக அரசியலில் அங்கீகரிக்கச் செய்த இருபெரும் தலைவர்களில் ஒருவர் என இவர் கருதப்படுகிறார். இதில் மற்றவர் ரஷ்ய தலைவரான லெனின் ஆவர். ஜனாதிபதி வில்சனின் முன் முயற்சியின் காரணமாகவே உலகில் மற்றொரு மகா யுத்தம் மூளாமல் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு தேசியங்களின் லீக் (League Of Nations) உருவானது.

**6. தைவான் (Taiwan).**

இது மக்கள் சீனாவின் பிரதான நிலப்பரப்பிற்கு வெளியே உள்ள ஒரு தீவாகும். இத்தீவுக்கு போர்மோசா (Formosa) தீவு என மற்றொரு பெயரும் உண்டு. கடந்த காலங்களிலும் இத்தீவு தன்னை சுதந்திர நாடாக அமைப்பதற்கு அவ்வப்போது முயன்றிருக்கிறது. உதாரணமாக 1895-ல் சீன - ஜப்பான் யுத்த முடிவில் இத்தீவு தன்னை சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தியது. ஆனால் ஒரு வாரத்திற்குள்ளாக ஜப்பான் அதனை ஆக்கிரமித்து தனது ஆளுமையின் கீழ் கொண்டு வந்தது. சீனாவின் குவிங் வம்ச அரசர்கள் மீண்டும் இத்தீவை மீட்டெடுத்தனர். இக்காலப் பகுதியில் சீனாவின் பெரும்நிலத்தை விட இத்தீவு முன்னேறிய பகுதியாக திகழ்ந்தது. தைவானைப் போலவே சீனாவின் பல பகுதிகள் அவ்வப்போது கொலனித்துவ வாதிகளால் ஆக்கிரமிக்கப்படுவதும் விடுவிக்கப்படுவதும் முன்னர் சர்வசாதாரணமாக நடைபெற்ற வந்தன. 1923 முதல் சீனாவின் தேசியப்பிதா என்றழைக்கப்படும் சுன் யெட் சன் (Sun-Yet-Sen) தலைமையில் உருவான குவாமின் தாங் (Kuomintang) என்ற தேசிய ஐக்கிய முன்னணி தலைமையில் தொடர்ச்சியாக நீண்டகாலம் தைவான் தீவு சீனாவின் ஒரு பிராந்தியமாகவே இருந்து வந்தது. அதன் பின்னர் மாவோ தலைமையில் நடைபெற்ற சீனப்புரட்சியின் போதும் தைவான் இணைந்திருந்தது. ஆயினும் சுன்யெட்சனின் மறைவிற்குப் பிறகு குவாமின் தாங்கின் தலைமைப் பதவிக்கு வந்த சியாங்காய் சேக் (Chiang-Kai-Shek) ஏகாதிபத்தியவாதிகளின் துணையோடு சீன கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்கள் விடுதலைப் போராட்டத்தையும் நசுக்க முற்பட்டார். இதனால் இருதரப்புக்கும் ஏற்பட்ட உள்நாட்டு



படிப்பகம்

www.padippakam.com



யுத்தம் சீனப் புரட்சியாக 1949ம் ஆண்டில் முடிவுற்றது. இதனால் சியாங்காய் சேக்கும் அவரது படையினரும் ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவோடு சீனாவைவிட்டு தைவானுக்கு தப்பியோடி அதனை ஒரு தனி நாடாக பிரகடனப்படுத்தினர். இங்கு 1987ம் ஆண்டு வரை அவசர கால சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தப்பட்டது. இந்த குட்டித்தீவையே வல்லரசுகள் முழு சீனாவினதும் பிரதி நிதியாக அங்கீகரித்ததுடன் ஐ.நா.விலும் அதற்கு உறுப்புரிமை வழங்கினர். மக்கள் சீனாவிற்கு ஐ.நா.வில் அங்கத்துவம் ஆரம்பத்தில் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவில் மாவோ தலைமையில் வெற்றி பெற்ற புரட்சி அரசாங்கத்தின் ஆட்சி அதிக காலம் நீடிக்காது என ஏகாதி பத்தியங்கள் நம்பியிருந்தன. அதனை சீர்குலைப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டன. ஏகாதிபத்தியங்களின் முயற்சிகள் யாவும் தோல்வியடைந்து மக்கள் சீனா ஒரு வல்லரசாக தலை நிமிர்ந்தபோது தவிர்க்க முடியாமல் அவை இரண்டு சீனா என்ற கொள்கையை முன் வைத்தன. ஆனால் சீனாவோ தைவான் தனது நாட்டின் ஒரு பகுதி, சீனா ஒரே தேசம் என்ற கொள்கையையே முன்வைத்து வருகிறது. தற்போது வரலாற்று நிர்பந்தம் காரணமாக சீனாவின் நிலைபாட்டையே ஐ.நா. ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அமெரிக்கா மறைமுகமாகவும் நேரடியாகவும் தைவானுக்கு இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கி சீனாவுக்கு எதிராக அதனை வளர்த்து வருகிறது.

### 7. தலாய் லாமா (Dalai Lama) (1935-)

திபெத் பௌத்த மதத்தின் பிரதான தலைவர் தலாய் லாமா என அழைக்கப்படுகிறார். தலாய் லாமா என்பவர் புத்த பெருமானின் மறு அவதாரம் என இம்மக்களால் கருதப்படுகிறார். தற்போது இந்தியாவில் வாழ்ந்து கொண்டு திபெத் போட்டி அரசாங்கத்தை நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் தலாய் லாமாவின் உண்மையான பெயர் டென்சின் கெயட்சோ (Tenzin Gyatso) வாகும். இவர் தலாய்லாமாக்கள் வரிசையில் வந்த 14வது தலாய் லாமா வாகும். இவர் திபெத் மக்களின் ஆன்மீக அரசியல் தலைவராக 1940 பிப்ரவரி 22ம் திகதி முதல் 13ம் தலாய் லாமாவால் பிரகடனப்படுத்தப்பட்டார். இரண்டு வயது முதலே தலாய் லாமாவாக அங்கீகரிக்கப்பட்ட இவர் இவ்வாறு அதிகாரம் மிக்க தலைவராக பிரகடனப்படுத்தப்பட்ட போது அவருக்கு ஐந்து வயதும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. தனது ஆறாம் வயதில் பௌத்த மெய்ஞானத்தில் கல்வி பயிலத் தொடங்கிய இவர் 25வது வயதில் தனது பட்டப்படிப்பை முடித்தார்.

உலகின் கூரை என அழைக்கப்படும் திபெத் உலகின் மிக



படிப்பகம்

www.padippakam.com



உயரமான பீடபூமியாகும். இந்தியாவையும் சீன திபெத்தையும் பிரிப்பது இமயமலையாகும். முதலாளித்துவ கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் எந்த ஒரு நாட்டின் எல்லையும் நிரந்தரமாக இருந்ததில்லை. திபெத்தும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்கு வாழும் மக்கள் திபெத்திய பௌத்த மத அடையாளங் கொண்ட தனித்துவமாக மக்கள் சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். இப்பிரதேசம் தனி அரசாக கடந்த காலங்களில் அவ்வப்போது திகழ்ந்துள்ளது. சீனாவில் கம்யூனிச கட்சியின் தலைமையிலான புரட்சி 1949-ல் வெற்றி பெற்ற பின்னர் 1950 நவம்பர் 17ம் திகதி திபெத் சுதந்திரத்தை தலாய்லாமா பிரகடனப்படுத்தினார். இதனையடுத்து சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் திபெத்திற்குள் பிரவேசித்தது. 1954-ல் பீகிங் சென்று மாவோ சேதுங்குடனும் ஏனைய கம்யூனிச தலைவர்களுடனும் தலாய்லாமா பேச்சுவார்த்தை நடாத்தினார். அதனையடுத்து ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டதைப் போல தோன்றியது. அதைத் தொடர்ந்து 1956-ல் இரண்டாயிரத்து ஐநூறாம் (2500 ம்) பௌத்த ஜெயந்தி கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் இந்தியா செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்தியா சென்று பாரதப் பிரதமர் நேரு, மற்றும் பல இந்திய தலைவர்களைச் சந்தித்துவிட்டு அவர் திபெத் திரும்பினார். அதன் பின்னர் திபெத் சுதந்திர இயக்கம் மீண்டும் தீவிரமடைந்தது. 1959ம் ஆண்டு மார்ச் 10ம் திகதி தீபெத்திற்கு சுதந்திரம் கோரியும் சீன மக்கள் விடுதலை இராணுவத்தை வெளியேறக் கோரியும் பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் பட்டன. இக்கிளர்ச்சி சீனாவால் உடனடியாக நசுக்கப்பட்டது. திபெத்தை விட்டு வெளியேறிய தலாய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்து 1960ம் ஆண்டு முதல் இந்தியாவில் தாரம் சாலாவில் வாழ்ந்து வருகிறார். இங்கிருந்து தீபெத்திற்கு சுதந்திரம் கோரி போட்டி அரசாங்கத்தை நடத்தி வருகிறார். இவருக்கு பல மேற்கத்தைய நாடுகள் கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கி வருகிறன. சாத்வீக முறையில் சுதந்திர போராட்டத்தை நடத்தி வருவதை அங்கீகரித்து இவருக்கு 1989ம் ஆண்டிற்கான சமாதான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

### 8. ஆண்டனியோ கெசாசி (**Antonio Cassese**).

நீதித்துறையில் உலகளாவிய ரீதியிலே ஒரு கௌரவ மான ஸ்தானத்தை வகிக்கும் இவர் தனது தொழிலை சர்வதேச சட்ட பேராசிரியாக 1972-ல் தொடங்கினார். உலகின் பிரசித்தி பெற்றதான புளோரன்ஸ், ஒக்ஸ்.்.பர்ட், பாரிஸ், கேம்பிரிட்ஜ் போன்ற பல பல்கலைக்கழகங்களில் இவர் கடமையாற்றியுள்ளார். பின்னர் 1989 முதல் 1993 வரை ஐரோப்பிய கவுன்ஸிலின் சித்திரவதை



படிப்பகம்

www.padippakam.com

OK-



தடுப்பு குழுவின் தலைவராகத் திகழ்ந்தார். அதன் பின்னர் 1993-ல் முன்னாள் யூகோஸ்லாவியாவில் இடம்பெற்ற குற்றச்செயல்களை விசாரிப்பதற்கு, ஐ.நா.வினால் உருவாக்கப்பட்ட சர்வதேச நீதி மன்றத்தின் (International Criminal Tribunal for the Former Yugoslavia) தலைவராக நியமிக்கப்பட்டார். 1994 முதல் ருவாண்டாவின் குற்ற செயல்களை விசாரிப்பதற்காக ஐ.நா.வினால் உருவாக்கப்பட்ட நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 1995-ல் மீண்டும் இவர் முன்னைய யூகோஸ்லாவியாவின் குற்ற செயல்களை விசாரிப்பதற்கான சர்வதேச நீதி மன்றத்தின் (1993 முதல் 1997 வரை) தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் சர்வதேச சட்டங்களுக்கான ஐரோப்பிய சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் திகழ்ந்து வருகிறார். தற்போது மீண்டும் புளோரன்ஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றிவரும் இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் மக்களின் சுய நிர்ணய உரிமை (Self-Determination of People) என்ற நூல் சர்வதேச அரங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சட்ட அடிப்படை களை முன்வைத்து எழுதப்பட்ட இந்நூலில் உள்ளக சுய நிர்ணய உரிமை, வெளியக சுய நிர்ணய உரிமை என இரு பிரிவாக மக்களின் சுய நிர்ணய உரிமை பிரிக்கப்பட்டுள்ளது. இவரது இந்த விளக்கத்தை பல வல்லரசுகள் தூக்கிப் பிடித்தாலும் உலகெங்கு முள்ள விடுதலை இயக்கங்களும் பெரும்பாலான சமூக விஞ்ஞானி களும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

## 9. அமெரிக்க சுதந்திரப் போர் (1776).

அமெரிக்காவானது (USA) பெரிய பிரித்தானியாவிலிருந்து குடியேறியவர்களையும் குடியேற்றப்பட்டவர்களையும் பெரும் பான்மையினராகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு நாடாகும். பெரிய பிரித்தானியாவிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்தால் பிரிக்கப் பட்டுள்ள இந்நாட்டை தனது மாநிலங்களில் ஒன்றாகவே பிரித்தானியா அப்போது கருதி வந்தது. அங்கு வரி அறவிடுவது முதல் சகல நிர்வாக விவகாரங்களும் பிரித்தானியாவின் கட்டுப் பாட்டிலேயே இருந்து வந்தன. நாளடைவில் அமெரிக்க குடியேற்ற வாசிகளுக்கும் அவர்களின் தாய்நாடாகிய பெரிய பிரித்தானியா விற்கும் இடையிலான முரண்பாடு வலுவடைந்து வந்தது. 1740-ல் முதல் தடவையாக அமெரிக்காவில் சுதந்திர பேரெழுச்சி வெடித்தது. 1775-ல் மீண்டும் ஒரு முறை ஃபிடெல்பியா நகரம் அமெரிக்காவின் அரசியல் கேந்திர மையமாக மாறியது. அமெரிக்காவின் பல மாநிலங்கள் ஒன்றுகூடி சுயமாக காங்கிரஸ் ஆட்சி முறையை நிறுவி பிரித்தானிய மன்னரான ஜார்ஜுக்கு ஒரு பணிவான மனுவை தயாரித்து சமர்ப்பித்தன. இது "ஒலிவ் கிளை"



படிப்பகம்

www.padippakam.com



மனு என விவரிக்கப்படுகின்றது. இதில் 1775-ல் முன்பனிக் காலத்தில் தாம் அமைத்துக் கொண்ட காங்கிரஸ் ஆட்சி முறையை அங்கீகரிக்குமாறு அவை கோரியிருந்தன. தமது பணிவான வேண்டுகோளுக்கு மேன்மைக்குரிய மாமன்னரிடமிருந்து சாதகமான பதில் வருமென அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இம் மனு இலண்டனை ஆகஸ்ட் மாதம் சென்றடைந்தது. அதற்கான பதில் அக்டோபர் மாதம் அவர்களுக்கு கிடைத்தது. அம்மனுவை பெற்றுக் கொள்வதற்கோ அதனை கொண்டு சென்ற தூதுவரை சந்திப்பதற்கோ அரசர் தயாராக இல்லை என்ற அதிர்ச்சியான செய்திதான் அவர்களுக்கு பதிலாகக் கிடைத்தது. அது மாத்திரமல்ல இந்நிகழ்வால் கடும் சீற்றம் கொண்ட ஜார்ஜ் மன்னன் தமது சொந்த அமெரிக்க பிரஜைகளுக்கு எதிராக போர் தொடுத்தான். இதற்குத் தேவையான படையினரை உள்நாட்டுக்குள் திரட்டமுடியாமல் போனதால் ஜெர்மனிய இளவரசர்களிடமிருந்து கூலிப்படைகளை வாடகைக்கு அமர்த்தியிருந்தான். அதுவரை அமெரிக்காவின் சுதந்திரம் என்பது ஒவ்வொருவரும் தமக்குள் முணுமுணுத்துக் கொண்ட விடயமாக இருந்தது. இப்போதோ வீறுகொண்ட சுதந்திர போராக அது வெடித்தது. 1776 ஏப்ரல் 12ம் திகதி அமெரிக்க மாநிலங்கள் இதுபற்றி தீர்மானங்கள் நிறைவேற்ற தொடங்கின.

வட கரோலினா மாநிலம் முதலாவதாக சுதந்திரத் தீர்மானத்தை நிறைவேற்றி பெருமையீட்டிக் கொண்டது. அதனை யடுத்து ரோட்ஸ் தீவும், மஸ்செஸ்டஸ்ஸும் பின்னர் வெர்ஜீனியாவும் அதனுடன் இணைந்து கொண்டன. 1776 மே 15ம் திகதி ஜான் ஆடெம்ஸ் தலைமையில் சுதந்திரமான அரசாங்கங்களை அமைத்து கொள்வதற்கான உரிமை பிரகடனப்படுத்தப்பட்டது. இதனையடுத்து பல சுயாட்சி மாநிலங்களாக அவை தம்மை பிரகடனப்படுத்திக் கொண்டன. இவ்வாறு தனித்தனி சுயாட்சிப் பிரதேசங்கள் உருவாகி அவை ஜூன் மாதத்தில் தமது தூதுவர்களை காங்கிரசுக்கு அனுப்பி வைத்தன. ஜூன் 7ம் திகதி அவ்வாறு வெர்ஜீனியா சுதந்திர மாநிலத்திலிருந்து காங்கிரசுக்கு அனுப்பப்பட்ட ரிச்சர்ட் ஹென்றி லீ (Richard Henry Lee) என்பவர் பிரித்தானிய முடியிலி ருந்து விடுபட்ட சுதந்திரமான ஐக்கிய குடியேற்ற மாநிலங்களின் ஒன்றியமாக நாம் அனைவரும் இணைய வேண்டும் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை அக்காங்கிரஸில் முன் மொழிந்தார். ஒன்றியத்தில் இணைவதற்கு மூன்று வார கால அவகாசம் வழங்கப்பட்டதுடன், அமெரிக்காவின் சுதந்திர பிரகடனத்தை உரிய முறையில் வரைவதற்கு ஒரு குழுவும் வாக் கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்ற தாமஸ் ஜெபர்சன் (Thomas Jefferson) அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஜூலை முதலாம்



படிப்பகம்

www.padippakam.com



திகதி நியூயார்க் தவிர்ந்த ஏனைய கொலனிகள் தமது பிரதிநிதிகளுக்கு அதற்கான முழு அதிகாரத்தையும் வழங்கின. ஜூலை 2ம் திகதி மாலை சுதந்திர பிரகடனம் பனிரெண்டு மாநிலங்களால் ஏகமனதாக அங்கிகரிக்கப்பட்டது. ஆனால் நியூயார்க் மாத்திரம் வாக்களிக்கவில்லை. ஜெபர்சன் அமெரிக்க சுதந்திர பிரகடனத்தை வரைய 1776 ஜூலை 4ம் திகதி பன்னிரெண்டு மாநிலங்களால் அப்பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் தேசிய விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. ஜீலை 9ம் திகதி நியூயார்க் மாநிலமும் கையெழுத்து வைத்தவுடன் அமெரிக்காவின் 13 மாநிலங்களின் பிரகடனமாக அது நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு அமைதி வழியில் சுய நிர்ணய உரிமையை பிரயோகிக்க முயன்ற அமெரிக்க மக்களை ஆயுத போராட்டத்திற்கு தூண்டி அமெரிக்க சுதந்திர போரை துரிதப்படுத்தியதன் மூலம் பிரித்தானியா தனது செல்வ வளம் மிக்க குடியேற்ற நாடு ஒன்றை இழந்தது.

## 10. 1905 போர்ட் ஆர்தர் யுத்தம் (**Port Arthur Battle**).

மஞ்சூரியாவையும் கொரியாவையும் தமக்கிடையேயான செல்வாக்கு பிராந்தியங்களாக பகிர்ந்து கொள்வதற்கு ஜப்பான் ரஷ்யாவிடம் ஒரு திட்டத்தை முன்வைத்தது. இத்திட்டம் ரஷ்யாவினால் நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து 1904 பிப்ரவரி மாதம் 8ம் திகதி சீனாவில் உள்ள போர்ட் ஆர்தர் துறைமுகத்தில் நிலை கொண்டிருந்த ரஷ்ய கடற்படை முகாம் மீது ஜப்பான் திடீர் தாக்குதல் ஒன்றை மேற் கொண்டது. இப்போர் 1905 ஜனவரி மாதம் வரை நீடித்தது. இருபதாம் நூற்றாண்டில் தொடக்கத்தில் இடம்பெற்ற முதலாவது பாரிய சமர் இதுவாகும். யுத்தத்தின் முடிவில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த போர்ட் ஆர்தர் துறைமுகம் ஜப்பான் வசமானது. அத்துடன் அவ்வருடம் மார்ச் மாதத்தில் இரஷ்ய துருப்புகளும் சீனாவின் சென்யாங் நகரில் வைத்து ஜப்பானியர்களால் தோற்கடிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட அவமானத்தைச் சரி செய்து கொள்வதற்காக ரஷ்யாவின் ஜார் மன்னனான இரண்டாவது நிக்கலஸ், (Czar Nicholas II ) தனது பலமிக்க பால்டிக் கப்பல் படையை ஜப்பான் கடற்படையைத் தோற்கடிப்பதற்காக அனுப்பி வைத்தான். சுசிமா நீரிணையில் மே 27ம் திகதி மூண்ட இருநாள் சமரில் மேலும் 33 கப்பல்களை இரஷ்யா இழந்தது. ஜப்பான் தரப்பில் சிறு இழப்புகளே ஏற்பட்டிருந்தன. இத்தோல்வியை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt) தலைமையில் மேற் கொள்ளப்பட்ட மத்தியஸ்தத்தின் கீழ் இரஷ்யா ஜப்பானுடன் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நேர்ந்தது. இதுவே ஐரோப்பிய நாடொன்று ஐரோப்பிய நாடல்லாத மற்றொரு நாட்டிடம் தோல்வி



படிப்பகம்

www.padippakam.com



கண்ட முதலாவது நிகழ்வாகும். அதுவரை ஐரோப்பிய நாடு ஒன்றை பிற நாடு எதுவும் வெற்றி கொள்ள முடியாது என்ற கற்பனாவாத நம்பிக்கையே நிலவி வந்தது. இந்த நம்பிக்கையை முறியடிக்கும் வகையில் ஆசிய நாடொன்று ஐரோப்பிய நாடான இரஷ்யாவை வெற்றி கொண்டது ஆசிய ஆபிரிக்க நாடுகளில் ஆக்கிரமிக்கு உட்பட்டிருந்த கொலனித்துவ மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் சுதந்திர வேட்கையையும் அதிகரிக்கச் செய்தது.

## 11. 1905 – தோல்வியடைந்த இரஷ்யப் புரட்சி

1905ம் ஆண்டு போர்ட் ஆர்தர் துறைமுகத்தில் ஜப்பானிடம் இரஷ்யா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து உள்நாட்டில் நெருக்கடி நிலைமை உருவானது. யுத்தத்தின் பாதிப்புகள் இரஷ்யப் பொது மக்களை பொருளாதார ரீதியில் வெகுவாகப் பாதித்தது. வேலை நிறுத்தங்களும் மக்கள் போராட்டங்களும் வெடித்தன. இதனை போல்ஷ்விக்குகளும், மென்ஷ்விக்குகளும் புரட்சிகர போராட்டமாக நெறிப்படுத்த முனைந்தனர். இத்தருணத்தில் இரஷ்ய பழைமைவாத கிறிஸ்துவ மத குருவான கோகி கபான் (Georgii Gapon) தலைமையில் தொழிலாளர் அமைப்பு ஒன்று திடீரென தலையெடுத்தது. இதற்கு இரஷ்ய பொலிசாரின் ஆதரவும் கிடைத்தது. மதகுரு கபான் தலைமையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் ஒன்று கூடினார்கள். அவர்கள் ஜார் மன்னனுக்கு துதிபாடியபடியும் வினயமாக தமது கோரிக்கைகளை பதாகைகளில் தாங்கிய வண்ணமும் ஊர்வலமாகச் சென்றனர். ஆனால் ஜாரின் துருப்புகள் சாத்வீகமாக சென்ற அம்மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் செய்தன. இத்துப்பாக்கிச் சூட்டில் பல ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காரணத்தினால் அத்தினம் இரத்த ஞாயிறு என அழைக்கப்பட்டது. இச்சம்பவம் பொதுமக்களையும் தொழிலாளர்களையும் ஆத்திரங்கொள்ளச் செய்து ஜார் மன்னனுக் கெதிரான கிளர்ச்சியை தூண்டிவிட்டது. எனினும் ஒழுங்கமைக்கப் படாத இந்த திடீர் புரட்சி குரூரமான முறையில் நசுக்கப்பட்டது.

## 12. அக்டோபர் புரட்சி (1917).

1917ம் ஆண்டுக்கு முன்னர் இரஷ்ய நாடானது ஐரோப்பாவின் பின் தங்கிய நாடுகளில் ஒன்றாக இருந்து வந்தது. அங்கு முடியாட்சி நிலவியது. ஜார் மன்னன் முழு அதிகாரங்களையும் தன்னுடைய கையில் வைத்துக் கொண்டிருந்தான். அங்கு டூமா (Duma) என்ற பெயரில்



படிப்பகம்

www.padippakam.com



பாராளுமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தாலும் அதற்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. இரஷ்யாவின் கடைசி மன்னனான நிக்கலஸ் திறமையற்றவனாக இருந்தான். அவனது மனைவி ரஷ்புடின் (Gregroy Rasputin) என்ற மாயாவியின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாள். அந்நாட்டில் வறியவர்களின் நிலைமை மேலும் மோசம் அடைந்தது. அந்நாட்டில் ஐந்தில் நான்கு பேர் விவசாயிகள். அவர்களது நிலைமை நாளுக்கு நாள் மேலும் மோசமாகிவந்தது. மக்களின் அதிருப்திகள் ஜனநாயக வழிகளில் வெளிப்படும் போது அரசனின் விசேட படைபிரிவான கோசெக்ஸ் (Cossacks) அவற்றை ஈவிரக்கமின்றி நசுக்கின. முதலாம் உலக மகா யுத்தத்தில் இரஷ்யா இணைந்து கொண்ட போது இந்நிலைமை மேலும் மோசமடைந்தது. போர் முனைக்கு அனுப்பப்பட்ட படைவீரர்களுக்கு தேவையான ஆயதங்களோ, உணவு, உடைகளோ வழங்கப்பட வில்லை. ரயில்வே பாதை மிகவும் மோசமான நிலையிலிருந்தது. எனவே ஜெர்மன் படையிடம் இரஷ்யா படுதோல்வி கண்டது. மக்கள் பட்டினியால் வாடத் தொடங்கினர். இச்சமயத்தில் ஜார் மன்னன் மற்றுமொரு முட்டாள்தனமான காரியத்தைச் செய்தான். 1915-ல் தனது படைத் தளபதியை நீக்கிவிட்டு அவனே தளபதியாக நின்று யுத்தத்தை வழி நடத்தினான். இதனால் யுத்தத்தின் தோல்விக்கான முழுப் பொறுப்பும் நேரடியாக அவன் தலையிலேயே விழுந்தது. ரஷ்புடின், மன்னனின் மனைவியை தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொண்டு மற்றொரு அரசனைப் போல செயல்பட்டான். அவனது அட்டூழியமும் அடக்குமுறையும் மக்களின் ஆத்திரத்தை மேலும் தூண்டியது. இதன் பின்னணியில் இரஷ்யத் தொழிலாளர்கள் பெரும் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். விவசாயிகள் கிளர்ச்சிகளை மேற்கொண்டார்கள். இரஷ்யாவின் ஆதிக்கத்தின் கீழ் ஒடுக்கப்பட்ட தேசியங்கள் விடுதலைக்காக போராடின. இதன் பின்னணியில் 1917 பிப்ரவரி மாதம் முதலாவது புரட்சி வெடித்தது. ரஷ்புடின் அரண்மனைக்குள்ளேயே கொல்லப்பட்டான். மார்ச் 2ம் திகதி இரண்டாவது நிக்கலஸ் ஜார் மன்னன் சிங்காசனத்திலிருந்து இறக்கப்பட்டான். ஒருவிதமான கூட்டு அரசாங்கம் உருவாகி தடுமாற்ற நிலைமை சிறிது காலம் காணப்பட்டது. இந்நிலையில் தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் பெரிதும் செல்வாக்கு பெற்று திகழ்ந்த லெனின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புரட்சி முன்னெடுக்கப்பட்டது. இவ் அக்டோபர் புரட்சியின் மூலம் மேலிருந்து கீழாக அதிகாரம் செலுத்துவதற்குப் பதிலாக கீழிலிருந்து மேல் நோக்கி அதிகாரம் செலுத்தும் சோவியத் ஆட்சிமுறை அறிமுகம் செய்து வைக்கப் பட்டது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட லெனின் முதலாம் உலக மகா யுத்தத்தின் போது வல்லரசுகள் தமக்குள் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தங்களை வெளிப்படுத்தினார். அவை



படிப்பகம்

www.padippakam.com



கொலனிகளை தமக்கிடையே ஆக்கிரமித்து பகிர்ந்து கொள்வதற்காகத்தான் தாய்நாட்டை பாதுகாப்பது என்ற பெயரில் யுத்தத்தை தொடங்கின என்பதையும் அம்பலப்படுத்தினார். இதன் மூலம் கொலனிய நாடுகளின் விடுதலையையும் தேசியங்களின் சுய நிர்ணய உரிமையையும் உறுதியாக ஆதரித்தார். இதனால்தான் அவர் உலக அரங்கில் ஒடுக்கப்பட்ட மக்களின் இரட்சகனாகக் கருதப்பட்டார்.

### 13. வார்சேல்ஸ் ஒப்பந்தம் (Treaty of Versailles) ஜூன் 28, 1919.

முதலாவது உலக மகா யுத்தத்தின்போது பெரிய பிரித்தானியா, பிரான்ஸ், இரஷ்யா, பெல்ஜியம், இத்தாலி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, ரொடீசியா, ருமெனியா, கிரீஸ், அமெரிக்கா, கனடா, செர்பியா, இந்தியா, போர்த்துகல், மாண்டி நீக்ரோ, போலந்து ஆகிய நாடுகள் ஒரு வரிசையிலும் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகிய நாடுகள் மற்றொரு அணியாகவும் பிரிந்து போர் புரிந்தனர். இதில் பெரிய பிரித்தானியா தலைமையிலான அணி, நேச நாடுகள் (Allied Countries) எனவும் ஜெர்மன் தலைமையிலான அணி, மத்திய வல்லரசுகள் (Central Powers) எனவும் அழைக்கப்பட்டன. யுத்த முடிவில் மத்திய வல்லரசுகள் அணி நேச நாடுகள் அணியால் தோற்கடிக்கப்பட்டது. 1918 ஜனவரி 8ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் சமாதானத்திற்கான தனது 14 அம்ச வேலைத்திட்டத்தை முன் வைத்தார். அடிப்படையில் இத்திட்டம் கொலனிகளதும் ஏனைய நாடுகளினதும் தேசியங்களினதும் சுய நிர்ணய உரிமையை மதித்து யுத்தத்தில் தோல்வியடைந்த நாடுகளுக்கும் நியாயம் வழங்கக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது. 1919 ஜனவரி 12ம் திகதி பாரிசில் (வெர்ஸ்சைல் மாளிகையில்) நேசநாடுகள் ஒன்று கூடின. அமெரிக்க ஜனாதிபதி வில்சன் முன்வைத்த 14 அம்ச திட்டம் பல்வேறு திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டது. அத்துடன் தோல்வியுற்ற நாடுகளை மிகக் கடுமையாக தண்டிப்பதாகவும் அவற்றின் வளங்களை சூறையாடுவதாகவும் அவற்றின் மீது அவமானகரமான நிபந்தனைகளை திணிப்பதாகவும் அமைந்தது. அதே வருடம் ஜூன் மாதம் 28ம் திகதி இந்த வார்சேல்ஸ் ஒப்பந்தத்தில் தோல்வியடைந்த நாடுகள் நிர்ப்பந்தம் காரணமாக கையொப்பமிட்டன. அவமானகரமான இந்த வார்சேல்ஸ் ஒப்பந்தம் திணிக்கப் பட்டமைதான் ஹிட்லர் தலைமையிலான பாசிஸம் உருவாவதற்கு காரணம் என பலரும் பிற்காலத்தில் விமர்சித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



## 14. தேசங்களின் லீக் (League of Nations).

முதலாம் உலக மகா யுத்தம் மூளாமல் தடுப்பதற்கு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த வூட்ரோ வில்சன் பல சமாதான முயற்சிகளை மேற்கொண்டார். அவர் மேற்கொண்ட முயற்சிகள் உலக அரங்கில் ஒரு சமாதான தூதுவராக அவரை சித்திரித்தன. இதனால் ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கையின் விளைவாக 1915 மே மாதத்தில் இங்கிலாந்தில் உள்ள சமாதான விரும்பிக ளால் தேசங்களின் லீக்கிற்கான சமாஜம் (League of Nations Society) உருவாக்கப்பட்டது. தொடர்ந்து இதன் கிளைகள் அமெரிக்காவிலும் உலகின் பல பாகங்களிலும் திறக்கப்பட்டன. முதலாம் உலக யுத்த முடிவில் இடம்பெற்ற பாரிஸ் சமாதான மாநாட்டிலும் சர்வதேச அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தையே அமெரிக்க ஜனாதிபதி வில்சன் வலியுறுத்தினார். ஏனெனில் இனியொரு யுத்தம் வருவதை தவிர்ப்பதற்கும் நாடுகளுக்கிடையே ஏற்படும் பிணக்குகளை இணக்கமான முறையில் தீர்ப்பதற்கும் இவ்வகையான சர்வதேச அமைப்பு தேவை என்பதே அவரது வாதமாக இருந்தது. வார்சேல்ஸ் ஒப்பந்தத்திற்கான பேச்சு வார்த்தை நடைபெறும் போதே இத்தகைய சர்வதேச அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய ஒரு அமைப்புக்கான நகல் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி வில்சன் தலைமையில் உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டது. பின்னர் இந்த நகல்வரைவு குழுவில் பிரிட்டனும் இணைந்து கொண்டு இரண்டாவது நகலை தயாரித்தது. இதன் அடிப்படையில் 1919 பிப்ரவரி 14ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி வில்சன் பாரிஸ் சமாதான மாநாட்டில் தேசியங்களின் லீக்கிற்கான நகலை சமர்ப்பித்தார். பின்னர் 1920 ஜனவரி 16ம் திகதியில் அவராலேயே தேசங்களின் லீக்கின் முதலாவது கவுன்சில் கூட்டமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வேடிக்கை என்னவென்றால் தேசங்களின் லீக்கின் வரலாற்றில் அமெரிக்கா கலந்து கொண்டது அதுவே முதல் தடவையாகவும் கடைசித் தடவையாகவும் அமைந்துவிட்டது. அமெரிக்கா அதிலிருந்து விலகியதையடுத்து, தேசங்களின் லீக்கின் செல்வாக்கும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. ஏனைய வல்லரசு களும் அதில் இணைவதும் விலகுவதுமாக இருந்தன. 1934 வரை ஹிட்லருக்கெதிரான சர்வதேச ஐக்கிய முன்னணி உருவாகும் வரை, சோவியத் ரஷ்யா அதில் அனுமதிக்கப்படவில்லை. இறுக்கமான கட்டமைப்போ சட்ட மரபுகளோ இல்லாமல் ஒரு பலமற்ற அமைப்பாக இது திகழ்ந்தது. எனினும் தேசியங்களின் சுய நிர்ணய உரிமை என்ற கருத்தை சர்வதேச அரங்கில் மக்கள் மயமாக்குவதில் இவ்வமைப்பு ஒரு முக்கியப் பாத்திரத்தை



படிப்பகம்

www.padippakam.com



வகித்தது. தேசங்களின் லீக்கால் மற்றொரு யுத்தம் வெடிப்பதை தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆதலால் இரண்டாவது உலக மகா யுத்தம் வெடித்த பொழுது இவ்வமைப்பு செயலிழக்க வேண்டிய தாயிற்று. இரண்டாவது உலக யுத்த முடிவில் மேலும் வலுவான சர்வதேச அமைப்பு ஒன்றின் கட்டாயத் தேவை உணரப்பட்டு 1945 அக்டோபர் மாதம் 24ம் திகதி இன்றைய ஐக்கிய நாடு கள் ஸ்தாபனம் (UNO) உருவாக்கப்பட்டது. இதனிடம் 1946 ஏப்ரல் 18ம் திகதி தேசங்களின் லீக்கின் சகல சொத்துகளும் ஆவணங் களும் கையளிக்கப்பட்டன. தேசியங்களின் லீக்கின் கடைசி செய லாளர் நாயகமாக ஸீன்லெஸ்டர் (Sean Lester) இருந்தார்.

### 15. செக்கோஸ்லோவாகியா இரண்டாகப் பிரிதல் (Czechoslovakia) (1993).

ஐரோப்பாவின் இதயம் என வர்ணிக்கப்படும் இன்றைய ஸ்லோவாக் குடியரசு (Slovak Republic) மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ளது. அதன் எல்லையில் ஆஸ்திரியா, செக் குடியரசு, ஹங்கேரி, போலந்து, உக்ரைன் ஆகிய ஐந்து நாடுகள் அமைந்துள்ளன. இன்றைய செக் குடியரசும் ஸ்லோவாக் குடியரசும் நீண்டகாலமாக ஒரே அரசாக இருந்த போதும் இரண்டும் வெவ்வேறு தன்மை கொண்ட தனிப்பெரும் அலகுகளாகவே திகழ்ந்து வந்தன. 1993-ம் ஆண்டு இவ்விரு நாடுகளும் சமாதானமான முறையில் இரத்தம் சிந்தாமல் பேச்சுவார்த்தையின் மூலம் பிரிந்து சென்றன. இங்கு ஒரு சர்வ ஜன வாக்கெடுப்பு கூட நடைபெறவில்லை. இரு தரப்பிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நடத்திய பேச்சு வார்த்தையில் காணப் பட்ட இணக்கத்தின் பேரில் இருநாடுகளும் ஜனநாயக பூர்வமாக பிரிந்து சென்றன. ஐ.நா. ஏற்றுக் கொண்டுள்ள சுய நிர்ணய உரிமையை இந்தளவுக்கு மதித்து அமைதியான முறையில் செயல்படுத்திய மற்றொரு உதாரணத்தை உலக வரலாற்றில் காணமுடியாது.

### 16. எரித்திரியா தனி நாடாக உருவாதல் (Eritrea) (1993).

வட ஆபிரிக்க கண்டத்தில் உள்ள எரித்திரியா நீண்ட காலம் எத்தியோப்பியாவோடு இணைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் எரித்திரியா தனது தனித்துவத்தை இழக்காமல் பாதுகாத்தே வந்தது. 1890 ஜனவரி முதலாம் திகதி இத்தாலி எரித்திரியாவின் எல்லைகளை நிர்ணயித்து 1941 வரை தனது கொலனியாக வைத்திருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தில் இத்தாலி



படிப்பகம்

www.padippakam.com



தோல்வியுற்றபோது எரித்திரியா பிரித்தானியாவின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. 1952-ல் ஐ.நா. நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் எரித்திரியா எத்தியோப்பியாவோடு ஒரு விதமான சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனினும் எத்தியோப்பிய மன்னர் ஹெய்லி சலாசி (Haile Selassie)யின் அரசாங்கம் எரித்திரியாவின் சுய நிர்வாக முறைக்கு குந்தகமாக செயல்பட்டு வந்தது. இதன் மூலம் ஐ.நா. வரையறுத்த பல உரிமைகள் மீறப்பட்டன. இதன் உச்சகட்ட நடவடிக்கையாக 1962-ம் ஆண்டு எரித்திரிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு எத்தியோப்பியாவின் 14வது மாகாணமாக பலவந்தமாக இணைத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு உடனடி காரணமாக இருந்தது 1961-ல் எரித்திரியா சுதந்திரப் போராட்டத்திற்கான ஆயுதப் போராட்டம் வெடித்ததேயாகும். 1991 மே மாதம் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (EPLF) தலைமையில் பூர்வாங்க அரசாங்கம் ஒன்று தனியாக இங்கு நிறுவப்பட்டதன் மூலம் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. 1993 ஏப்ரல் மாதம் சர்வதேச கண்காணிப்பின் கீழ் இங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இத்தேர்தலில் 99.8 சதவீத எரித்திரிய வாக்காளர்கள் எரித்திரியாவின் சுதந்திரத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். 1993-ம் ஆண்டு மே 24ம் திகதி இத்தேர்தல் முடிவு உத்தியோகப்பூர்வமாக பிரகடனப்படுத்தபட்டதன் மூலம் எரித்திரியா சுதந்திர நாடாக உருவானது.

### 17. கிழக்கு திமோர் (East Timor) 2002 மே 20.

கிழக்கு திமோர் அமைந்துள்ள திமோர் தீவானது ஏறத்தாழ 400 வருடங்கள் போர்த்துகேயரின் கொலனியாக திகழ்ந்தது. இது இந்தோனேசியாவுக்கு அருகில் அமைந்துள்ளது. அங்கு கம்யூனிஸ்டுகளின் தலைமையில் விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற்றதாலும் சர்வதேச சூழ்நிலைகளின் மாற்றங்களாலும் 1974 ஏப்ரல் மாதம் போர்த்துகல் அத்தீவை விட்டு அகல வேண்டியதாயிற்று. இதையடுத்து அங்கு அரசியல் குழுக்களிடையே மோதல்கள் இடம்பெறத் தொடங்கின. கம்யூனிஸ்ட்களின் தலைமையிலான ஆயுதப் போராட்டம் உக்கிரமடைந்து வந்தது. இதனை காரணம் காட்டிக் கொண்டு 1975 டிசம்பர் 7ம் திகதி இந்தோனேசிய இராணுவம் இத்தீவுக்குள் புகுந்தது. இரு தரப்புக்கும் ஏற்பட்ட மோதலில் சுமார் 20,000 படையினர் இறந்தனர். சுமார் 200,000 திமோர் மக்கள் யுத்தத்தாலும் பட்டினியாலும் கொல்லப்பட்டனர். 1976 ஜீலை மாதம் ஜனாதிபதி சுகார்டோ தலைமையிலான இந்தோனேசிய அரசாங்கம் கிழக்கு திமோரை தனது 26வது மாநிலமாக பிரகடனப்படுத்தியது. எனினும்



படிப்பகம்

www.padippakam.com



சுதந்திரப் போராட்டத்தை இந்தோனேசியாவால் முற்று முழுதாக நசுக்கிவிட முடியவில்லை. அவ்வெழுச்சிகளை இந்தோனேசியா குரூரமான முறையில் நசுக்கி வந்தது. இங்கு இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் சர்வதேச கவனத்தை ஈர்க்கத் தொடங்கின. 1992 நவம்பர் மாதம் கிழக்கு திமோர் மக்களின் கொரில்லா தலைவர் ஹனானா குஸ்மாவோ (Xanana Gusmao) இந்தோனேசிய துருப்புகளால் கைது செய்யப்பட்டு தலைநகர் ஜகர்தாவில் உள்ள பாதுகாப்பு மிக்க சிபினா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அவருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் அது இருபது வருட தண்டனையாக குறைக்கப்பட்டது.

இந்தோனேசியாவில் சீரழிந்துவந்த பொருளாதாரம் தொடர்ச்சியாக கிழக்கு திமோரில் ஏற்பட்டு வந்த இராணுவ செலவுக்கு தாக்கு பிடிக்க முடியாத நிலைமை உருவானது. தீவிரமடைந்த உள்நாட்டு போராட்டம் அதிகரித்து வரும் சர்வதேச நெருக்குதல்கள் ஆகியவற்றிற்கு இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி ஹபீபி இறுதியில் பணிய வேண்டியதாயிற்று. 1998 ஜூன் 9ம் திகதி கிழக்கு திமோருக்கு தான் விசேட அந்தஸ்து வழங்க தயாராக இருப்பதாக அவர் அறிவித்தார். ஆயினும் மக்கள் அந்த தீர்வை ஏற்று திருப்தியடையவில்லை. இதன் பின்னணியில் ஐ.நா.வின் அனுசரணையோடு இந்தோனேசியாவும் போர்த்துக்கலும் தொடர்ச்சியாக பல பேச்சுவார்த்தைகளை நடத்தின. இறுதியாக 1999 மே மாதம் ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் வெகுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்து ஒப்பந்தம் ஒன்றில் இருதரப்பும் கைச்சாத்திட்டன. அதையடுத்து இந்தோனேசியாவிற்கு ஆதரவான ஆயுதக் குழுக்களுக்கு இந்தோனேசிய அரசு மறைமுகமாக ஆயுத உதவிகளை வழங்கி அங்கு பெரும் இரத்தக்களரியை உண்டு பண்ணியது. 1999 ஆகஸ்ட் 30ம் திகதி ஐ.நா. கண்காணிப்பின் கீழ் அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்தோனேசியா முன் வைத்த சுயாட்சி முறையா? அல்லது சுதந்திர நாடா? என்பதில் இரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்பட்டது. கிழக்கு திமோர் மக்கள் உற்சாகத்தோடு இத்தேர்தலில் வாக்களித்தனர். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 98.6 சத வீதத்தினர் இவ்வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். அதில் 78.5 சதவீதத்தினர் சுதந்திர நாட்டிற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் ஏமாற்றமடைந்த இந்தோனேசியாவும் அதன் ஆதரவாளர்களும் வன்செயலில் ஈடுபட்டனர். பல கிராமங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. பல்லாயிரக்கணக்கானோர் தமது இல்லங்களை விட்டு தப்பியோடினர். பல ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். நாட்டின் போக்குவரத்து பாதைகளும் தொலை தொடர்புகளும் சீர்



படிப்பகம்

www.padippakam.com



குலைக்கப்பட்டன. இந்நிலையை கட்டுப்படுத்த சர்வதேச சமூகம் தலையிட்டது. அவுஸ்திரேலியா தலைமையிலான அமைதிப்படை அங்கு சென்றது. 1999 செப்டம்பர் 7ம் திகதி ஜகார்தா சிறையில் இருந்து குஸ்மாவோ விடுதலை செய்யப்பட்டார். 1999 நவம்பர் முதலாம் திகதி இந்தோனேசியாவின் கடைசி துருப்பும் கிழக்கு திமோரில் இருந்து வெளியேறியது. 2001 ஆகஸ்ட் 30ம் திகதி கிழக்கு திமோரின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடை பெற்றது. தேர்தலில் 16 கட்சிகள் போட்டியிட்டபோதும் அதில் பிரட்லின் (Fretilin) கட்சி அமோக வெற்றி பெற்றது. 2002 ஏப்ரல் 14ம் திகதி ஜனாதிபதிக்கான தேர்தலில் குஸ்மாவோ வெற்றி பெற்றார். 2002 மே 19ம் திகதி நள்ளிரவில் உலகின் புதிய சுதந்திர நாடாக கிழக்கு திமோர் உலக அரங்கில் உதித்தது.

18. 1848 செக்-ஸ்லாவ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை மார்க்சும் ஏங்கெல்சும் எதிர்த்தனர். ஜெர்மனியில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த முதலாளித்துவ ஜனநாயக புரட்சிக்கு எதிராக இவ்விரு தேசியங்களும் ஜாரிச ரஷ்யாவின் காவலரண்களைப் போல செயற்பட்டமையே இதற்கு காரணமாகும்.

**19. பியாஃப்ரா (Biafra) மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம்.**

அட்லாண்டிக் சமுத்திரத்தின் கரம் என்ற பொருள் கொண்ட பியாஃப்ரா நைஜீரியாவுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு தேசியமாகும். மேற்கு ஆப்பிரிக்க நாடான பியாஃப்ரா 1967 மே 30ம் திகதி முதல் 1970 ஜனவரி 15ம் திகதி வரை தன்னை ஒரு தனி நாடாக பிரகடனப்படுத்திக் கொண்டு சுதந்திரமாக இயங்க முயன்றது. இவ்வரசுக்கு லெட்டினல் கேணல் ஒஜிக்வு (Lt. Col. Chukumeka Odumegwu Ojukwu) தலைமை தாங்கினார். பியாஃப்ராவின் தனிநாட்டு பிரகடனத்தை சகிக்காத நைஜீரியா தனது துருப்புகளை அங்கு அனுப்பியது. 1967 ஜுலை மாதம் பியாஃப்ரா விடுதலைப் போராளிகளுக்கும் நைஜீரிய ஆக்கிரமிப்புப் படைகளுக்கும் இடையே போர் மூண்டது. ஆரம்பத்தில் பியாஃப்ரா போராளிகளின் தாக்குதல்களுக்கு நைஜீரிய படைகளால் தாக்குபிடிக்க முடியவில்லை. எனவே நைஜீரியா வான் மற்றும் கடல் வழியாகவும் பியாஃப்ராவை தாக்கத் தொடங்கியது. நைஜீரியாவின் பாரிய தாக்குதல்களுக்கு முன்னால் நீண்டகாலம் தாக்குபிடிக்கக் கூடிய வளங்கள் பியாஃப்ராவிடம் இருக்கவில்லை. அதற்கு தேவையான உணவு வெளியிலிருந்தே வர வேண்டியிருந்தது. நைஜீரியாவின் முற்றுகையால் உணவு விநியோகம் தடைபட்டது. அதன் வளமான



படிப்பகம்

www.padippakam.com



பெட்ரோலிய எண்ணெய் கிணறுகள் நைஜீரியாவால் அபகரிக்கப் பட்டன. கடும் பஞ்சம் அங்கு தலை விரித்தாடியது. பல்லாயிரக் கணக்கானோர் பட்டியிட்டுக் கொல்லப்பட்டனர். எனவே 1970 ஜனவரி 15ம் திகதி பியா∴ப்ரா நைஜீரியாவிடம் சரணடைந்தது. அதன் தலைவர் ஒஜிக்வூ நாட்டை விட்டு தப்பியோடினார். இவ்வாறு விடுதலைக்காக போராடிய ஒரு மக்கள் சமூகத்தை பட்டினிச் சாவுக்கும் பாரிய தாக்குதலுக்கும் இலக்காக்கி பணிய வைத்த கறைபடிந்த அத்தியாயம் ஒன்றை அண்மைய வரலாறு கண்டது. எனினும் அம்மக்கள் மத்தியிலிருந்து விடுதலை வேட்கை ஒயவில்லை.

20. மூன்றாம் அகிலம் (அடிக்குறிப்பு ஒன்று - இரண்டை பார்க்க ).

முதலாம் உலக மகா யுத்தம் வெடித்த பொழுது சந்தர்ப்ப வாத போக்குகள் தலைதூக்கி இரண்டாவது கம்யூனிச அகிலமும் சிதைவுற்றது. 1917-ல் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றவுடன் விளாதிமிர் இலியிச் லெனின் தலைமையில் மூன்றாவது அகிலம் நிறுவப்பட்டது. இதனை சுருக்கமாக கம்இன்டெர்ன் (Comintern) என்றும் அழைப்பர். இதன் அடிப்படை நோக்கம் உலக அளவில் சோசலிச புரட்சியை வெற்றிபெறச் செய்வதாகும். எனினும் இரண்டாம் உலக மகா யுத்தம் வெடிக்கும் தறுவாயில் பல்வேறு நாடுகளிலும் அப்போது உருவாகியிருந்த கம்யூனிஸ்ட் கட்சிகளை ஒரு மத்தியபடுத்தப்பட்ட தலைமையின் கீழ் வழிநடத்துவது சாத்தியமில்லை என்ற நிலைமை உருவானது. எனவே ஒவ்வொரு நாட்டினதும் விசேட நிலைமைக் கேற்ப சுதந்திரமாக ஒவ்வொரு கட்சியும் செயல்பட வேண்டும் எனவும் அவற்றின் பொதுவான நோக்கம் பாசிஸத்தை முறியடிப்பதாக இருக்க வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டு 1943-ல் மூன்றாம் அகிலமும் கலைக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதும் பல்வேறு நாடுகளைச் சார்ந்த கம்யூனிஸ்டுகள் மத்தியில் கருத்துப் பரிமாற்றம் செய்வதை நோக்கமாகக் கொண்டு கம்இன்பார்ம் அல்லது கன்யூனிச தகவல் மையம் (Cominform or Communist Information Bureau) 1947-ல் நிறுவப்பட்டது. இவ்வமைப்பும் 1956-ல் கைவிடப்பட்டது.

21. மேற்கு சகாரா மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம்.

1888-ல் மேற்கு சகாரா ஸ்பானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் கொலனியாக மாற்றப்பட்டது. அதன் அண்டை நாடுகளான மொரோக்கோ 1956லும், மொரித்தானியா 1960லும் பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றன. பின்னர் ஸ்பானியர்களின்



படிப்பகம்

www.padippakam.com



பிடியிலிருந்த மேற்கு சகாராவில் உள்ள சில பிரதேசங்களை அவை உரிமை கோரத் தொடங்கின. 1975-ல் ஸ்பானியர்கள் மேற்கு சகாராவிலிருந்து வெளியேற்றப்பட்டவுடன் நிலைமை இன்னும் சிக்கலடைந்தது. 1976-ல் போலிசாரியோ முன்னணி (Polisario Front) சகாரா அரபு ஜனநாயக குடியரசு என்ற பெயரில் தன்னை ஒரு தனியரசாக பிரகடனப்படுத்திக் கொண்டு மொரோக்கோவையும் மொரித்தானியாவையும் எதிர்த்துப் போராடியது. போலிசாரியோ முன்னணிக்கு அதன் மற்றொரு அயல்நாடான அல்ஜீரியாவின் ஆதரவும் கிடைத்து வந்தது. இதற்கிடையில் *ஐ.நா.வின் கீழ் இயங்கும் சர்வதேச நீதிமன்றம் 1975-ல் சகாரா மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியது.* இதனை மொரோக்கோ மதித்ததாகத் தெரியவில்லை. ஆனால் 1979-ல் மொரித்தானியா மட்டும் வெளியேறியது. அதைத் தொடர்ந்து அவர்கள் விட்டகன்ற பிரதேசத்தையும் மொரோக்கோ ஆக்கிரமிக்கத் தொடங்கியது. மொரோக்கோவிற்கு எதிரான அரசியல்வாதிகள் சித்திரவதைக்கும் படுகொலைக்கும் உள்ளாகினர். 1984-ல் ஆப்பிரிக்க ஐக்கிய அமைப்பும் சகாரா அரபு ஜனநாயக குடியரசை அங்கீகரித்ததுடன் மொரோக்கோவை அங்கிருந்து வெளியேறுமாறும் தீர்மானம் நிறைவேற்றியது. ஆயினும் மொரோக்கோ அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்கள் சர்வதேச கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. இதன் விளைவாக ஐ.நா. அனுசரணையுடன் மொரோக்கோ அரசாங்கமும் போலிசாரியோ முன்னணியும் பேச்சுவார்த்தை நடத்தி 1997 செப்டம்பர் மாதம் ஒரு உடன்பாட்டில் கைச்சாத்திட்டன. இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் இம்மண்ணின் மக்கள் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது எதிர்கால அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்து கொள்வதற்காக 1998 டிசம்பர் மாதம் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் சகாராவாசிகள் என பிரஜா உரிமை யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வினா இங்கு பூதாகரமாக எழும்பியுள்ளது. இதை சாக்காக வைத்துக் கொண்டு மொரோக்கோ சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திப்போட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுதும் மேற்கு சகாராவின் 80 சதவிகிதமான நிலப்பரப்பு மொரோக்காவின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. அத்துடன் மொரோக்கோவாசிகள் பாரிய அளவில் அங்கு குடியேற்றப்பட்டு வருகிறார்கள். போலிசாரியா முன்னணியினர் மொரோக்கோ கட்டுப்பாட்டு பிராந்தியத்திற்குள் நுழையாமல் தடுப்பதற்காக சுமார் 1500 மைல் நீளமான தடுப்பு மதில் போடப்பட்டுள்ளது. இம்மதில் முட்கம்பிகளாலும், அகழிகளாலும், மணல் மூட்டைகளாலும் அரண் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ராடார் கருவிகள் பொருத்தப்பட்டு மோப்ப நாய்களும்



படிப்பகம்

www.padippakam.com



ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதைவிட சுமார் 50 இலட்சம் கண்ணி வெடிகள் இம்மதிலை பாதுகாப்பதற்காக புதைக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

00000



படிப்பகம்

www.padippakam.com

## Appendix - 1

### The Resolution Of The London International Congress, 1896

This resolution reads:
"This Congress declares that it stands for the full right of all nations to self-determination [Selbstbestimmungsrecht] and expresses its sympathy for the workers of every country now suffering under the yoke of military, national or other absolutism. This Congress calls upon the workers of all these countries to join the ranks of the class-conscious [Klassenbewusste — those who understand their class interests] workers of the whole world in order jointly to fight for the defeat of international capitalism and for the achievement of the aims of international Social-Democracy."

## Appendix - 2

### United Nations:
### Declaration on Granting Independence to Colonial Countries and Peoples, 1960
### General Assembly Resolution 1514 (XV), December 14, 1960

The General Assembly,
Mindful of the determination proclaimed by the peoples of the world in the Charter of the United Nations to reaffirm faith in fundamental human rights, in the dignity and worth of the human person, in the equal rights of men and women and of nations large and small and to promote social progress and better standards of life in larger freedom,



படிப்பகம்

www.padippakam.com



Conscious of the need for the creation of conditions of stability and well-being and peaceful and friendly relations based on respect for the principles of equal rights and self-determination of all peoples, and of universal respect for, and observance of, human rights and fundamental freedoms for all without distinction as to race, sex, language or religion,

Recognizing the passionate yearning for freedom in all dependent peoples and the decisive role of such peoples in the attainment of their independence,

Aware of the increasing conflicts resulting from the denial of or impediments in the way of freedom of such peoples, which constitute a serious threat to world peace,

Considering the important role of the United Nations in assisting the movement for independence in Trust and Non-Self-Governing Territories,

Recognizing that the peoples of the world ardently desire the end of colonialism in all its manifestations,

Convinced that the continued existence of colonialism prevents the development of international economic co-operation, impedes the social, cultural and economic development of dependent peoples and militates against the United Nations ideal of universal peace,

Affirming that peoples may, for their own ends, freely dispose of their natural wealth and resources without prejudice to any obligations arising out of international economic co-operation, based upon the principle of mutual benefit, and international law,

Believing that the process of liberation is irresistible and irreversible and that, in order to avoid serious crises, an end must be put to colonialism and all practices of segregation and discrimination associated therewith,

00000



படிப்பகம்

www.padippakam.com



# References

(1977a [1848]). "The Danish-Prussian Armistice." In K. Marx & F. Engels, *Collected Works*, Vol. 7. New York: International Publishers.
(1977b [1849]). "The Magyar Struggle." In K. Marx & F. Engels, *Collected Works*, Vol. 7.
(1977c [1849]). "Democratic Pan-Slavism." In K. Marx & F. Engels, *Collected Works*, Vol. 8.
(1985 [1866]). "What Have the Working Classes to Do with Po land?" In K. Marx & F. Engels, *Collected Works*, Vol. 20.
(1998)."Sovereignty and Inequality." *European Journal of Inter national Law* 599
(2001),"Reconciling Five Competing Conceptual Structures of In digenous Peoples' Claims in International and Comparative Law" *New York University Journal of International Law and Politics.*
Antonio Cassese, (1995). *Self-Determination of Peoples*
Anthony: D. Smith *Nationalism and Modernism: A Critical Survey of Recent Theories of Nations and Nationalism*.
Bakic-Hayden, M., & R. Hayden (1992). "Orientalist Variations on the Theme 'Balkans': Symbolic Geography in Recent Yugo slavia." *Slavic Review*, 51.
Barry E. Carter & Phillip R. Trimble, (2d ed. 1995) *International Law - law school textbook.*
Benedict Anderson : *Imagined Communities: Reflections on the Origin and Spread of Nationalism*
Berger, P. L. (1977). *Facing up to Modernity: Excursions in Society, Politics, and Religion*. New York: Basic Books.
Berlin, I. (1969). "Two Concepts of Liberty." In *Four Essays on Liberty*. London et al.: Oxford University Press.
Brown Lloyd John C: (1997) *Self-Determination and Separation*.
Brubaker, R. (1992) *Citizenship and Nationhood in France and Germany*. Cambridge, MA, and London: Harvard Univer sity Press.
Bukharin N.I. & Preobrazhewky ( 1914),*The ABC of Communism*.
Chirot, D. (Ed.). (1989). *The Origins of Backwardness in Eastern Europe:* Economics and Politics from the Middle Ages until



படிப்பகம்

www.padippakam.com



the Early Twentieth Century. Berkeley et al.: University of California Press.

Clegg, S. R. (1989). *Frameworks of Power*. London et al.: Sage Publications.

Dalberg-Acton, J. E. E. (1967 [1862]). "Nationality." In *The His tory of Freedom and Other Essays.* Freeport, NY: The Free Press.

Dawson Mary, Q.C. *The Quebec Secession Reference* (Prepared for a Joint Session of Committee 3 –Indegenous Peoples- and the Human Rights Institute on the Rights to Self Govern ment/ Self Determination, June 2, 1999)

Deme, L. (1993). "Pre-1848 Magyar Nationalism Revisited: Ethnic and Authoritarian or Political and Progressive?" *East Euro pean Quarterly*, 27.

Dmowski, R. (1917). *Problems of Central and Eastern Europe*. London.

Elizabeth M. Jamilah Kone: *The Right of Self-Determination in the Angolan Enclave of Cabinda,* (Paper presented at the Sixth Annual African Studies Consortium Workshop, October 02, 1998)

Gellner, Ernest (1983). *Nations and Nationalism*. Ithaca: Cornell University Press.

Genovese, E. D. (1995). "The Squandered Century." *The New Re public*, 17 April,

Greenfeld, L. (1992). *Nationalism: Five Roads to Modernity*. Cam bridge, MA, and London: Harvard University Press.

Gudmudur Alfredsson, *Working Paper on Basic Choices Under International Law.*

Hanna Bokor-Szego, *New States and International Law* (1970).

Harold S. Johnson, (1967). *Self-Determination Within the Commu nity of Nations.*

Hintze, O. (1975). *The Historical Essays of Otto Hintze*. New York: Oxford University Press.

Hobsbawm, E. J. et al.: (1990). *Nations and Nationalism since 1780*. Cambridge: Cambridge University Press.

Huntington, S. (1993). "The Clash of Civilizations?" *Foreign Af fairs*, 72(Spring):



படிப்பகம்

www.padippakam.com



Hurst Hannum, (rev. ed. 1996). *Autonomy, Sovereignty, and Self-Determination.*

Ignatieff, M. (1994). *Blood and Belonging: Journeys into the New Nationalism.* New York: Farrar, Strauss, and Giroux.

Issa Shivji, (William Twining ed. 1991). The Right of Peoples to Self-Determination: an African Perspective, in *Issues of Self-Determination 33.*

Jim Hudgens & Richard Trillo, .(2d ed. 1995) *West Africa*

John Hutchinson (Editor), Anthony D. Smith (Editor) *Nationalism* (Oxford Readers)

Kamenka E (Ed.), (1976) *Nationalism: The Nature and Evolution of an Idea.* New York: St. Martin's Press.

Kaplan, R. D. (1993). *Balkan Ghosts: A Journey through History.* New York: St. Martin's Press.

Kautsky, Karl: "Marxism and Bolshevism – Democracy and Dicta torship"

Kautsy, Karl:(1899)" Bernstein and the Social Democratic Program"

Kennan, G. F. (1993). "The Balkan Crises: 1913 and 1993." In *The Other Balkan Wars*: A 1913 Carnegie Endowment Inquiry in Retrospect with a New Introduction and Reflections on the Present Conflict by George F. Kennan. Washington, DC: Carnegie Endowment for International Peace.

Kohn, H. (1948). *The Idea of Nationalism*: A Study in Its Origins and Background. New York: Macmillan.

Kymlicka, W. (1995). "Misunderstanding Nationalism." Dissent, Winter 1995, 130-7.

Lenin.V.I: (1964) "The Right of Nations to Self-determination", *collected works,* 4th edition, Progressive Publishers, Mos cow.

Lenin.V.I: .(1964) German and non-German Chauvinism, *collected works*, 4th edition, Progressive Publishers, Moscow.

Lenin.V.I: .( 1913) *The National Programme of the Russian Socialist Democratic Labour Party*

Lenin.V.I: (1964) *The Socialist Revolution and the Right of Na tions to Self-Determination*, 4th edition, Progressive Pub lishers, Moscow.

Lenin.V.I: (1913) "Civilised Europeans and "Savage" Asians.



படிப்பகம்

www.padippakam.com



Lenin.V.I: (1913) Cultural National Autonomy.

Lenin.V.I:(1916) *Opportunism and the Collapse of the Second In ternational,*.

Lenin.V.I: (1916) *Peace Without Annexations and the Independence of Poland as Slogans of the Day in Russia.*

Lenin.V.I: (1916) *A Caricature of Marxism and Imperiaist Economism*, 1916

Lukes, S. (1974). *Power: A Radical View*. London: Macmillan.

Mann, M. (1986). *The Sources of Social Power*, Vol. I. Cambridge: Cambridge University Press.

Marcuse, H. (1964). *One-Dimensional Man*. Boston: Beacon Press.

Meinecke, F. (1970 [1907]). *Cosmopolitanism and the National State*. Princeton: Princeton University Press.

Michael C Van Walt Van Praag with Onno Seroo- Editors ( Report of the International Conference of Experts Held in Barcelona from 21 to 27 November, 1998), *The Implemen tation of the Right to Self-Determination as a Contribution to Conflict Prevention.*

Michael Freeman: (1June 1998) "***National Self-Determination***, Peace and Human Right", *Peace Review*, Vol. 10 no2.

Miles Smith-Morris, (1996) *Recent History, in Africa South of the Sahara.*

Ofuatey-Kodjoe. W. (1977). *The Principle of Self-Determination in International Law*

Okon Udokang, (1972). *Succession of New States to International Law*

Peachey, P. (1991). "Community: The Conceptual Confusion." In G. F. McLean and J. Kromkowski (Eds.), *Relations between Cultures.* Washington, DC: The Council for Research in Values and Philosophy.

Peery, Nelson , (1975) *The Negro National Colonial Question.* Chicago,

Pfaff, W. (1993). *The Wrath of Nations: Civilization and the Furies of Nationalism*. New York: Simon and Schuster.

Philip Spencer, Howard Wollman; *Nationalism: A Critical Intro duction.*

Plamenatz, J. (1976). "Two Types of Nationalism." In E. Kamenka (Ed.), *Nationalism: The Nature and Evolution of an Idea.*



படிப்பகம்

www.padippakam.com



New York: St. Martin's Press.

Porter, B. D. (1994). *War and the Rise of the State: The Military Foundations of Modern Politics.* New York et al.: The Free Press.

Schöpflin, G. (1990). "The Political Traditions of Eastern Europe." *Daedalus,* 119(1), 55-90.

Schwarz, B. (1995). "The Diversity Myth: America's Leading Ex port." *The Atlantic Monthly,* May 1995, 57-67.

Soenke Zehle: *The Eco-Politics of Sovereignity: Indigenous (Trans) Nationalism & The Post-National Constella tion,*2000

Smith, A. D. (1991). *National Identity.* Reno and London: Univer sity of Nevada Press.

Stalin J.V. (1913) *Marxism and the National Question.*

Taylor, C. (1995). *Philosophical Arguments.* Cambridge, Mass., and London: Harvard University Press.

Terence Ranger (Editor), Terence Ranger (Editor) *National Iden tity (Ethnonationalism in Comparative Perspective) The Invention of Tradition.*

Tilly, C. (1990). *Coercion, Capital, and European States, AD 990-1990.* Cambridge, MA: Basil Blackwell.

Tilly, C. (Ed.). (1975). *The Formation of National States in Western Europe.* Princeton: Princeton University Press.

Todorova, M. (1994). "The Balkans: From Discovery to Inven tion." *Slavic Review.*

Umozurike O. Umozurike, (1972). *Self-Determination in International Law*

William J. Samarin, (1989) *The Black Man's Burden.*

00000



படிப்பகம்

www.padippakam.com

## நூலாசிரியர் பற்றி...

பாவா அப்துல் காதர் என இயற்பெயர் கொண்ட பி.ஏ.காதர் பன்முக ஆற்றல் கொண்டவர். தொழில் முறையில் விஞ்ஞான ஆசிரிராக பணியாற்றியவர். தனிவாழ்வைவிடவும் சமூக வாழ்வில் அக்கறை கொண்டவர். சமூக ஆய்வாளராகவும் அறியப்பட்டவர். பதினான்கு ஆய்வுக் கட்டுரைகளை இதுவரை எழுதியுள்ளார். மிக நீண்ட சிறைவாழ்வை அனுபவித்தவர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இருபதாண்டு கடுழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட முதல் தமிழ் பேசும் அரசியல் கைதி என்ற பெருமைக்குரியவர்.

மலையக மக்கள் முன்னணியை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியவர். பதினொரு வருடங்கள் அதன் செயலாளர் நாயகமாக செயல்பட்டவர்.மத்திய மாகாணசபை உறுப்பினராகவும் திகழ்ந்திருக்கிறார்.

இலங்கை தமிழ்பேசும் மக்ளின் சுயநிர்ணய உரிமை தொடர்பான கருத்தியல் விவாதத்தை மேற்கிளப்புவதிலும் அதற்காக குரல் கொடுப்பதிலும் முன்னின்றவர். 1977ல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்த போது அதன் வருடாந்த மாநாட்டில் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமை தீர்மானத்தை முன்மொழிந்தவர். அப்போது அந்த ஆசிரியர் சங்கத்தின் தலைவராக எச்.என்.பெர்ணாண்டோ இருந்தார். இவர் மக்கள் விடுதலை முன்னணி என்னும் ஜே.வி.பி. இயக்கத்தின் நிறுவனரான ரோகண விஜயவீரவின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தீவின் பழம்பெரும் இடதுசாரிக் கட்சிகள் எதுவும் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிக்காத அக்கால கட்டத்தில் சிங்கள ஆசிரியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தில் இத்ததைய தீர்மானம் ஒன்றை இவர் முன்மொழிந்தது ஒரு விவாதப் புயலை தோற்றுவிக்க காரணமாகியது.

1984ல் ஈரோஸ் அமைப்பின் வெளியீடான "இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்" என்ற நூலை எழுதியவர் இவர் என்பது பலரறியாத விடயம். அப்போது நூலாசிரியரின் பெயர் மோகன்ராஜ் என்று மாற்றுப் பெயரில் குறிப்பிடப்பட்டிருந்தது. 1983 இனக்கலவரத்தின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மலையகப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு சிறந்த களஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இவ்வாய்வு 1984ல் தமிழ் தகவல் நடுவத்தால் சென்னையில் வெளியிடப்பட்டு பின்னர் இந்த ஆய்வு ஜெனிவா மனித உரிமை மாநாட்டிலும் படிக்கப்பட்டது.

இலங்கை அரசியல் யாப்பு தொடர்பாகவும் இலங்கையின் தேர்தல் தொகுதிகள் சிறுபான்மை மக்களுக்கு பாதகமாக எவ்வாறு வரையப்பட்டுள்ள என்பது பற்றியும் ஆய்வுகள் நடாத்தியுள்ளார். இது தொடர்பான இவரது ஆய்வொன்று கண்டி சத்யோதய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை மலையகத்தின் ராகலையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது இலண்டனில் வசித்து வருகிறார்.

***பதிப்பாளர்***

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சுயநிர்ணய உரிமை என்பதனை
சுயம் - நிர்ணயம் - உரிமை என மூன்று தனித்தனிச்
சொற்களாகப் பிரித்தால் அதன் அர்த்தம் தெளிவாகும்.

சுயம் - என்பது ஒரு தேசிய சமூகம் சுயமாக தனது
தலைவிதி எதுவாக இருக்கலாம், தான் சுதந்திரமாக
வாழக்கூடிய அரசியல் வடிவம் எதுவாக இருக்கலாம்,
என்பவை பற்றி தானே சுயமாக முடிவெடுப்பது என்பது
மட்டுமல்ல, அதில் தலையிடும் உரிமை வேறு
யாருக்கும் கிடையாது என்பதையும் குறிக்கிறது.

நிர்ணயம் - என்பது அதனை நிர்ணயிப்பது
வேறு யாருமல்ல, அந்தந்த தேசிய சமூகங்களே
என்பதைக் குறிக்கிறது.

உரிமை - என்பது இது ஒவ்வொரு தேசியத்திற்கும்
உள்ள பிறப்புரிமையே தவிர சலுகை அல்ல
என்பதைக் குறிக்கிறது.

ஆகவே சுய நிர்ணய உரிமை என்பது
ஒவ்வொரு தேசிய சமூகமும் தனது அரசியல்
தலைவிதியை, தான் சுதந்திரமாக வாழும் அரசியல்
வடிவத்தை, தானே தீர்மானிக்கும் உரிமை உடையது
என்பதைக் குறிக்கிறது.
இது பிரிந்து போகும் உரிமையையும்
உள்ளடக்கியதாகும்.

---

சுயம் நிர்ணயம் உரிமை என்ற இந்த முதல்
வெளியீட்டை புதிய தடம் பதிக்கின்றது அப்பால் தமிழ்

---

படிப்பகம்